www.padippakam.com

பக்கம் 20
Registered as a News Paper in Sri Lanka
UK-PRICE-90 P
දිනමුරසු වාරමලර්
ஆக.06-12,1995
ரூபா 11/00

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 113



# இப்போது யாழ்ப்பாணம்?

# தொண்டாவின் துணிச்சல்

துருவியறியும் எக்ஸ்ரே ரிப்போர்ட்



சிளிலிசிட்

பரிசுப்போட்டி

# இஸ்ரேல் விரித்த வலை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## உணர்ந்து துணிந்தால்....

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

எதிரே மிக அருகே
வருவது போலத் தெரிகிறது...!
நெருங்கிப் போனால் கைக்கெட்டவில்லை;
இன்னும் சற்றே தள்ளிப்போய்
நின்றுகொண்டிருப்பது போலத் தெரிகிறது.

அரசியல் தீர்வுத் திட்டம்
குறித்துத்தான் கூறுகிறேன்.

கானல் நீரும் அப்படித்தான்;
தாகத்தில் தவிப்பவர்களை
ஓடிவர வைத்து ஏமாற்றிக்கொண்டிருக்கும்.

அரசியல் தீர்வுத் திட்டமும்
இறுதியில் அப்படியாகிவிடக்கூடாதே
என்பதுதான்
நேர்மையான சமாதானத்தை
நேசிப்பவர்களின் விருப்பமாக இருக்கிறது!

அரசுக்குள்-அதாவது
பொது ஜன முன்னணிக்குள்கூட
இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில்
இழுபறி நிலை இருக்கிறது
என்றுதான் தெரிகிறது.

அத்துலத் முதலி அணியினர்
வடக்கு-கிழக்கு இணைப்புக்கு
ஜனாதிபதி சம்மதித்தால்
கச்சை கட்டிக் கொண்டு
களத்தில் இறங்குவார்கள்
போலத்தான் தோன்றுகிறது.

கூட்டாக ஆட்சியமைக்கும்
கட்சிகள் எதிர்நோக்கும்
வழக்கமான சிக்கல்கள்
விளங்கிக்கொள்ளக் கூடியவைதான்!

ஆனால், மிக முக்கியமாக
நாடு முழுவதும் எதிர்நோக்கும்
ஜீவாதார பிரச்சனையில்
கட்சிகளது நலன்களைவிட
பிரச்சனைகளது தீர்வே
தேவையானது- முக்கியமானது.

வடக்கு-கிழக்கு
இணைந்த அரசியல் அலகு
என்பதற்கு
அத்துலத் முதலி அணியினர்
ஆணித்தரமான ஆட்சேபனை
எழுப்பிவருவதை அறியமுடிகிறது.

ஆளும் கட்சி கூட்டணிக்குள்
எழுந்துள்ள இழுபறியை

ஜனாதிபதி எப்படிச்
சமாளிக்கப்போகிறார் என்பது
வெளியிடப்போகும்
தீர்வுத் திட்டம் மூலமாக
வெளிச்சமாகும்.

தமிழ்க் கட்சிகள் எவையும்
வடக்கு-கிழக்கு
இணைப்பை மறுக்கும் தீர்வுக்கு
உடன்படப் போவதில்லை
என்பது உள்ளங்கை நெல்லிக்கனி!

முஸ்லிம் காங்கிரசும்
இணைப்புக்கு எதிர்ப்பில்லை;
ஆனால், தமக்கொரு தனி மாகாணம்
என்றுதான் கோரிக்கை எழுப்பியுள்ளது.

அரசியல் தீர்வுத் திட்டத்தை
புலிகள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.
நிச்சயமாக நிராகரிப்பார்கள் என்பது
இப்போதே தெரிந்த விடயம்!

ஆகவே- அரசியல் தீர்வுத் திட்டம்
ஏனைய தமிழ் கட்சிகளால்-
குறைந்த பட்சம் ஒரு ஆரம்பம்
என்னும் அளவிலாவது ஏற்றுக் கொள்ளக்கூடிய
உள்ளடக்கங்களைக்
கொண்டிருக்க வேண்டும்!

அதில் மிக முக்கியமானது
வடக்கு-கிழக்கு இணைப்பு
தொடர்பான அம்சமாகும்.

இதனை அரசும்-
குறிப்பாக ஜனாதிபதியும்
உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது.

இதனால், தீர்வுத் திட்டத்தை
முன்வைத்தாலும் பிரச்சனை,
முன்வைக்காவிட்டாலும் பிரச்சனை
என்ற இருதலைக் கொள்ளி நிலை
அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

தீர்வுத் திட்டத்தில் உள்ள
முற்றுப் புள்ளி, காற்புள்ளி
போன்றவற்றில் கூட குறை காண்பதற்கு
இனவாத சக்திகள் இப்போதே
தமது மூக்குக் கண்ணாடிகளை
சரிசெய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சக்திகள் எப்போதும் இருக்கும்;
இரத்த சகதிகளை விருப்போடு நோக்கும்
என்பதை ஜனாதிபதி உணர்ந்து
துணிந்து முன்நோக்கிச் செல்ல
தயாரானால் மாத்திரமே-
அரசியல் தீர்வுத் திட்டம்
அர்த்தமுள்ளதாக அமையும். ▫▫

மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும்வரை, என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## உண்மை அன்பு

ஆன்மீகத் துறையில் அன்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

ஆம், எந்தவித வேற்றுமையையும் ஏற்றுக்கொள்ளாததே உண்மை அன்பு. அத்துடன் சும்மா பேச்சளவில் அன்பு செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிராமல் செயலில் காட்டப்படவேண்டும். அன்பு ஒரு பண்பு, எனவே அதனை வெளிக்காட்டுவதற்கு ஒரு செயல் தேவை. வள்ளண்மை என்கிறோம். ஆனால் தர்மம் கொடுக்காமல் எவ்வாறு வள்ளண்மையை வெளிக்காட்ட முடியும்? எனவேதான் இயேசு சொல்கிறார் இப்படி:


"நம் அன்பு சொல்லிலும் பேச்சிலும் இராமல் உண்மையான அன்பாய் இருக்கட்டும்." [அரு: 3: 18]

மேலும் நமக்கு அன்பு செய்பவருக்கு நாம் அன்பு செய்து எவ்வித பிரயோசனமுமில்லை. ஆம், நம் எதிரிகளுக்கு அன்பு செய்ய வேண்டும். நம் விரோதிகளுக்கு அன்பு செய்யவேண்டும். ஆம், உண்மையில் இன்னா செய்தாருக்கு நன்னயம் செய்ய வேண்டும்.

"ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டவேண்டும்"- [மத்தேயு-5: 39]

இதுவே உண்மை அன்பின் தாற்பரியம். எதிரிக்காகவும் எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களாய் இருக்கவேண்டும். ஏன்? எதிரிக்காக தன் உயிரையே கொடுக்கத் தயாராய் இருக்க வேண்டும். இதையே, இயேசு-செயலில் காட்டினார். நாமும் தொடரலாமே!

ஏ.பி.வி. கோமஸ்



## அன்பளிப்பு

"ஒருவருக்கொருவர் அன்பளிப்புச் செய்து கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக, அன்பளிப்பு உள்ளத்தின் கசடுகளை அகற்றிவிடும். மேலும் எந்த அண்டைவீட்டாரும் தம்முடைய அண்டை வீட்டாரை இழிவாகக் கருத வேண்டாம். அவர் ஆட்டின் குளம்புத்துண்டை அன்பளிப்பாக அனுப்பிய போதிலும் சரி," என்று அண்ணல் 'நபி (ஸல்) அவர்கள் கூறினார். (திர்மீதீ)

ஆக, 'திருமணம்', 'கத்னா' போன்ற வைபவங்களில் அண்டை அயலவர்களுக்கு அன்பளிப்புச் செய்துவிட்டு, பின்னர் தம் இல்லத்தில் நடந்த வைபவமொன்றுக்கு, அவர்கள் (தம் வறுமையின் காரணமாக) அன்பளிப்பு ஏதும் அனுப்பாமலோ, அல்லது குறைவான பணத்தையோ பொருளையோ தந்திருந்தால், தாம் செய்த 'வெகுமதி' என்னும் அன்பளிப்பு முழுவதையும் திருப்பித்தருமாறு கேட்டு ஆள் அனுப்பும் கனவான்களே! மேற்கண்ட ஹதீஸைச் சற்றுச் சிந்தித்துப்பார்ப்பீர்களாக!

ஹாஜி உஸ்மான் சாஹிப்-கல்முனை.

## கவிதைப்போட்டி இல-110

### பரிசுக்குரிய கவிதை

### கவியை வென்றாள்

செப்புச் சிலை போல
சுவரோரம் நிற்கும் பெண்ணே!
எப்பொழுது நீ உதித்தாய்
என் கவியை வெல்வதற்கு?

ச.மகாலிங்கம்-வெளிமடை குரூப்,
வெளிமடை

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**பதைக்கும் உள்ளம்**

இடியோசை போலொலிக்கும்
வெடிகுண்டின் தாக்கமதால்
படியேறிப் பதைபதைக்கும்
கொடியிடையாள் உள்ளமதில்
பிடிப்பில்லா இருள் மறையும்
விடிவு நிலை வாராதோ!

முஸ்தபா-இஸ்ஸத், பழத்தார் வீதி-ஏறாவூர்-01

**கன்னி(த்)தவம்**

காதலனின்
வரவிற்காக - இங்கே
கன்னித் தவம்!

ஜி.முத்து நீலன்-வெல்லம்பிட்டி



**பூத்த புதுமலரோ...?**

பூத்த புதுமலரோ- அந்தி
பூஜைக்கு இது ஆயத்தமோ?
மொட்டவிழ்ந்த மேனகையோ- காளை
தொட்டணைக்க காத்திருக்கோ...!

தெ.லோஜனா-கொழும்பு 15

**என்று?**

விற்கத்தி தோற்கும்
விழிக்கூர்மை கண்டு!
என் புத்தி மழுங்கும் - இவள்
எழில் கோலம் கண்டு!
சொர்க்கத்தில் மலரும்
சொக்கிடும் செண்டு -என்
பக்கத்தில் வந்து
பசி தீர்ப்ப தென்று?

ரேணுகா றிபாய்தீன்-ஏறாவூர் 02

**காதல் ஏக்கம்...!**

பார்வையினில் ஈரம்
வடிகின்றது இன்றைய
விடியலும் முடிகின்றது...!
முகவரி தெரிந்தும்
இன்னுமேனோ தாமதம்...?

செ.சிங்காரவேல்-பேராதனை வளாகம்.

**யாரவன்?**

சந்தன மரத்துச் சிலையிவளின்
மனங்கவர் கள்வன் யாரரவனோ?-இவள்
விழிகளினேக்கம் விரண்டோட
காரிகை முன்னால் குதிக்கானோ?

ஏ.அஹ்மது ஜுனைது-ஏறாவூர்-06

குட்டை முடி நெட்டை உடல்
பட்டு உடைச் சிட்டு இவள்!
பட்டமரமாய் நிற்பதேனோ?
கட்டியவன் பட்டு வெடி
செத்து விழ்ந்ததாலோ...?

க.நேசம்மா-அக்கரைப்பற்று-07

அக்கம் பக்கம் யாருமில்லை
அணைக்கின்ற போதினிலே தடையுமில்லை!
ஆடைதனைத் தளர்த்தி விட்டேன்
ஆணழகா வந்தென்னை அள்ளி எடேன்...!

எம்.ஸற்.எம்.றமிஸுடீன்-பொல்காவேல

**சோக அழகு(கி)**

உலக அழகியாக
ஒய்யார நடைபயின்று
பார்வையாளர் மேடையிலே
பவனிவந்த காரிகையே!
போட்டியிலே தோற்றதனால்,
உன் புன்னகையும் தோற்றதுவோ?

சபா,மர்வா எஸ்.பி.டீன், கரம்பை-பாலாவி

## கவிதைப் போட்டி இல-113



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 12.08.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 113
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**எழில் உருவம் காண்பதற்கு...**

மந்தாரப் புன்னகையில் மான் விழியாள்
மதுவுண்டவண்டினைப் போல் மருகிநிற்க
கொங்கை இரண்டும் கொடி இடையும்
கெஞ்சுதலால் விம்மிக் குறுகி நிற்க
வானவில்லின் வளைவெடுத்து உடல்
வாலிபரை வாவென்றழைக்கும் இந்தக்
கோலமயில் எழில் உருவம் காண்பதற்கு
கோடிக் கண்கள் வேண்டுமென்று நானுரைப்பேன்!

செல்வி.நஜிமா அஹமட்-கல்முனை 04

**அணுகுண்டு பேரழகி!**

குண்டு குண்டு கண்ணழகி
ஷெல் போன்ற முன்னழகி
ஆர்.பி.ஜி. உடல் அழகி
ஐம்பத்தாறு (ரி. 56) உயரழகி
கிரனைட்டு பின்னழகி
மிதிவெடிபோல் சொல்லழகி
புல்லட் புரூப் உடையழகி
அணுகுண்டு பேரழகி!

ஏ.சீ.எம்.ராபி-உக்குவலை.

எங்களினிய முரசே!

நீ சுமந்து வரும் புதிய தொடர்கதையான "ஒரு நிமிச நிசப்தம்" என்னும் கதையின் முதல் அங்கமே எம் உள்ளங்களைக் கவர்ந்து விட்டது. தரமான தொடர்கதைகளை எமக்காக தந்துதவும் உமக்கு எங்களது பாராட்டுக்கள்.

கே.வின்சன் மங்கேஸ்-
மட்/சத்துருக்கொண்டான்.

▫▫

ஆடிக்காற்று, ஐப்பசி மழை, கோடை வெயில் போல வாரம் ஒருமுறை தினமுரசும் எமக்கு தவிர்க்க முடியாத ஒன்று. உண்மை விபரங்களை எடுத்தியம்புவதில் நாரதரும், ராஜதந்திரியும் சளைக்கவில்லை. அற்புதனின் அரசியல் தொடர் பல விடயங்களை சொல்கின்றது. வசந்தகால வாசமலர் களைப் போன்ற வசனங்களால் இலக்கிய நயம் குளிர்ச்சியாக உள்ளது. என்றும் இனிதே முரசு மலர வாழ்த்துக்கள் பற்பல.

இர்பானா றியால்-மக்கொன.

▫▫

ராஜேஸ்குமாரின் புதிய தொடர் அசத்துகிறது! முரசு தரும் சினிமா செய்திகள் வித்தியாசமானவை. மொத்தத்தில் முரசே தனித்துவம் வாய்ந்தது!

பாத்திமா ரிஸ்மியா, மொகமட் ரிபான்
ரம்புக்-எல.

▫▫

அழகு தமிழில் அச்சுப்பிழையின்றி, அகழ்ந்து, ஆய்ந்து, தெளிந்து, கொடுக்கும் முரசே!

உள்ளத்தில் குழந்தையாய்-
எண்ணத்தில் இனிமையாய்-
வாழ்க்கையில் பெருமையாய்-
வாரம் தோறும் என் இதயத்தைக்
கொள்ளை கொண்ட இனிய முரசே!
உன்னை பார்க்காமல் இருக்க முடியாது.

எம்.ஐ.ஏ.ஹலீம்- ஆலங்குடா.

▫▫

தித்திக்கும் தினமுரசே!
எத்திசை சென்றாலும்
உன் பேச்சு,
வியப்பினால் எனை
வியக்க வைத்தது.
ஆர்வம் வந்து
ஆவலைத்தூண்ட
அருகில் சென்று அரவணைத்தேன்!
பக்கங்களைப் புரட்டி
படித்து சுவைத்தேன்.
அம்சங்கள் அனைத்தும் அருமை...
தொடரட்டும் உனது பணி!

ஆர்.சுரேந்தர்-கொழும்பு 12

▫▫

முரசே! நீ இப்பொழுது எல்லாம் கண்ணுக்கு இனிய விருந்து படைக்கிறாயே! ராஜேஸ்குமாரின் "ஒரு நிமிச நிசப்தம்" ஒரே குஷியை கிளப்பிவிட்டதே! சபாஷ்! சபாஷ்!! உன் "சினி விசிட்"டிலும் வாரா வாரம் குளியல் போடவைக்கிறது.

எம்.எம்.ஸன்பர்-கின்னியா 06

## வாசகர் சாலை

எங்கள் அன்பின் முரசே! உம்மைச் சுவைப்பதென்றால் எங்களுக்கு ஒரு தனி இனிமை. திடீர் திடீரென "நில் கவனி முன்னேறு" அம்சத்தை இடம்பெறச் செய்யாமல் விடுகிறீர்களே! அது ஏன்? "தகவல் பெட்டி"யில் இடம்பெறும் அம்சங்கள் அத்தனையும் படுஜோர். உமது சாதனையை எப்படி பாராட்டுவது?

திருமதி.சந்திராணி தங்கத்துரை,
அட்டாளைச்சேனை 5



▫▫

அன்பின் முரசே,

நீ அள்ளி வரும் ஆக்கங்கள் அனைத்தும் அருமை என்ற போதிலும் என் இதயக்கடலில் அடிவரை சென்றது ரசிகனின் இலக்கிய நயம்தான்.

நெஞ்சை அள்ளும் வசனநடையும் வாஞ்சை கொள்ளும் உவமை உடையும் அருமையிலும் அருமை. இந்தப் பாராட்டும், நன்றியும் உனக்கு மட்டுமல்ல ரசிகனுக்கும் சேர்த்துத்தான்.

பெரியசாமி சந்திரசேகர்-பொகவந்தலாவை.

▫▫

"ஆருயிர் முரசே!" உன்னை நேசிக்கும் ஆயிரக் கணக்கான வாசக நெஞ்சகங்களில் நானும் ஒருவன். நீ சுமந்து வரும் ஒவ்வொரு இதழ்... தேனிலும் இனிமை குறிப்... தரும் இலக்கிய நய... த வருடுகின்றது.

...கராஜா-மட்/மண்டபத்தடி.



படிப்பகம்

www.padippakam.com

# வெற்றிலைக் கேணியிலும் ஆயுதக் குவிப்பு!

# பலமுனைத் தாக்குதலுக்கு படைகள் முஸ்தீபு!

## பதுங்கு குழிகளை அமைக்குமாறு புலிகள் அறிவிப்பு!

(நமது விசேட நிருபர்)

**யாழ் குடாநாட்டில் மழைக்காலம் ஆரம்பிக்க முன்னர் மற்றொரு பாரிய தாக்குதலை நடத்த படையினர் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பலாலி இராணுவ தளம், ஆனையிறவு இராணுவ தளம் ஆகியவை பலப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் துருப்புக்களும், ஆயுதங்களும் அந்தத் தளங்களில் இறக்கப்பட்டுள்ளன.**

யாழ்-குடாநாட்டில் மழைக்காலம் ஆரம்பித்துவிட்டால் புலிகளது கெரில்லாத் தாக்குதல்கள் தீவிரமாகலாம் என்று கருதப் படுகிறது.

அதற்கிடையே தமது பிரதான இராணுவ தளங்களை மேலும் விஸ்தரிக்க வேண்டிய அவசியம் படைத்தரப்புக்கு ஏற்பட் டுள்ளது.

தற்போது யாழ் குடாநாட்டிலிருந்து பல முனைகளில் முன்னேறுவதற்கான ஒத்திகைகளில் படைத்தரப்பு ஈடுபட்டு வருகிறது.

ஆனையிறவு இராணுவம் வெற்றிலைக் கேணி பகுதியில் இருந்து முன்னேறுவதற்காக ஒத்திகை பார்த்து வருகிறது.

கடந்த 31.07.95 அன்று வெற்றிலைக் கேணிப் பகுதியிலிருந்து படைகள் முன்னேறிச் சென்றன. உடுத்துறைவரை படைகளது முன்னேற்றத்தை புலிகள் தடுக்கமுடிய வில்லை. உடுத்துறையில் பலத்த மோதல் ஏற்பட்டது. அரைமணி நேரம் நடந்த மோதலின் பின்னர் படையினரின் முன் னேற்றம் தடைப்பட்டது. இந்த மோதலில் புலிகளது மகளிர் படைப்பிரிவே முன்னணி யில் நின்றது. மூன்று பெண்புலிகள் மோதலில் பலியானார்கள்.

இதேவேளை கடந்த வாரம் வெற் றிலைக்கேணிக் கடலில் பாரிய கப்பல் ஒன்றிலிருந்து படையினருக்கான ஆயுதங்கள் இறக்கப்பட்டுள்ளன. கடற்படையினரின் 14 போராப் படகுகள் கப்பலுக்கு பாதுகாப் பளித்தன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்குடாநாட்டில் பகிரங்க இடங்களில் பதுங்கு குழிகளை அமைக்குமாறு புலிகள் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

தற்போது க.பொ.த.உயர்தரப் பரீட்சைகள் யாழ்ப் பாணத்தில் நடைபெறுகின்றன.

இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் ஒத்திப்போட்டுவிட்டு தாக்குதல் ஒன்றை நடத்தவே முதலில் தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கல்விமான்கள் மற்றும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும்- யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் கோரிக்கையை அடுத்தே அங்கும் பரீட்சை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

படையினரின் தாக்குதல் திட்டம் சற்று பின் போடப்பட்டமைக்கு பரீட்சைகள் நடப்பதும் ஒரு காரணம் என்று தெரிகிறது.

'வெலிஓயாவில்' தமது தாக்குதல் முயற்சி தோல்வியடைந்தமையால் புலிகள் ஒரு பாரிய தாக்குதலை கிழக்கில் நடத்தக்கூடும் என்றும் தெரியவருகிறது.

## -வெலிஓயாவில் புலிகள் தாக்குதல்-

## தகவல் கொடுத்தது மாத்தையா விசுவாசி?

(யாழ் நிருபர் வர்மா)

வெலிஓயாவில் ஜானகபுர இராணுவ முகாம் உட்பட 5 முகாம்கள் மீது தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டிருந்த தகவல் முன்கூட்டியே படையினருக்கு எட்டிய தல்லவா?

இது குறித்து முரசுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி மாத்தையாவின் தீவிர விசுவாசிகள் மூலமாகவே புலிகளது திட்டம் வெளியே கசிந்தது என்று அறிய முடிகிறது.

புலிகளது முன்னாள் பிரதித்தலை வரான கோபாலசுவாமி மகேந்திரராஜா என்னும் மாத்தையா முன்னர் முல்லைத்தீவு உட்பட வன்னிப் பிராந்திய பொறுப்பாளராக இருந்தவர்.

புலிகளுக்குள் ஏற்பட்ட உட்பிரச் சனைகள் காரணமாக மாத்தையாவை கைது செய்ய பிரபாகரன் உத்தரவிட்டார். மாத் தையாவின் விசுவாசிகள் பலரும் மாத்தையா வோடு சேர்த்து கைது செய்யப்பட்டனர். தற்போது அவர்களுக்கு என்ன நடந்துள்ளது, அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா என்பது குறித்து எதுவும் தெரியவில்லை. மாத்தையா கொல்லப்பட்டுவிட்டதாகவே பல தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் புலிகள் அமைப்பின் வன்னிப்பிராந்திய அணியில் மாத்தையா விசுவாசிகள் சிலர் இலைமறைகாயாக இருந்து வருகிறார்கள்.

தற்போது புலிகளது படைத்துறை துணைத்தளபதியாக இருப்பவர் பால்ராஜ். இவர்தான் பிரபாகரனால் வன்னிப் பிராந் தியத்தில் மாத்தையாவுக்கு பதிலாக வளர்க்கப் பட்டவராகும்.

அதனால் மாத்தையா விசுவாசிகள் பால்ராஜ் மீதும் அதிருப்தி கொண்டிருக் கிறார்கள்.

28.07.95 அன்று வெலிஓயாவில் ஜானகபுர முகாம் தாக்குதலுக்கு பால்ராஜ் தான் தலைமை தாங்கினார்.

தாக்குதலுக்கான தயாரிப்பு நடைபெறும் வரை எந்த முகாம்மீது தாக்குதல் நடத்தப் படப்போகிறது என்ற செய்தி இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும்.

தாக்குதலுக்கான பகுதியை நோட்டமிட்டு தகவல் திரட்டும் புலிகளது உளவுப் பிரிவினருக்கும், முக்கிய தளபதிகளுக்கும் மட்டுமே இலக்கு எதுவென்று முன்கூட்டியே தெரிந்திருக்கும்.

இந்நிலையில் புலிகளுக்குள் இருந்தே, புலிகளது தளபதிகளோடு நெருக்கமான ஒருவர் மூலமாக தகவல் வெளியே கசிந் திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

30.07.95 அன்று யாழ்ப்பாணத்தில் புலிகள் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தமது தாக்குதல் தோல்வியடைந்தமைக்கு 'தேசத் துரோகிகளே' காரணம் என்று தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, படையினர் கையளித்த 63 புலிகளது உடல்கள் தவிர, மேலும் 80 உடல்கள் கிளிநொச்சிப் பகுதியில் புலிகளால் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. பின்வாங்கிச் செல்லும் போது நடந்த வான் தாக்குதல் காரணமாக பலியான புலிகளது உடல்களே அவையாகும் என்று தெரிகிறது.

## இறுதித் தீர்வாக அமையாத தீர்வுத் திட்டம்!

## அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிப்பு!

(அலுவலக நிருபர்)

கடந்த மாத இறுதிக்குள் அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போவதாகவும், அதற்கு முன்னர் அரசியல் கட்சிகளோடு பேச்சு நடத்தப்படும் என்றும் முன்னர் கூறப்பட்டு வந்தது.

ஆனால், கடந்த மாத இறுதிவரை அரசு தனது தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை.

இதேவேளை அரசின் தீர்வு யோசனைகள் இவைதான் என்று 'ராய்டர்' செய்தி நிறுவனத்திற்கு ஒரு நகல் கிடைத்தது. அதனை உடனடியாக 'ராய்டர்' வெளியிட்டது.

அந்த நகல் எவ்வாறு வெளியே வந்தது என்பது குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியாகியுள்ளன.

அரசு தானாகவே தீர்வுத்திட்ட யோசனைகளை முன்வைத்தால் உடனடியாக ஏற்படக்கூடிய சர்சைகளை தவிர்க்கவே அவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம். ஆகவே, அரச தரப்பின் அனுமதியோடுதான் தீர்வுத் திட்ட யோசனை வெளியே கசிந்தது என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

மக்களின்-குறிப்பாக சிங்கள மக்களின்-நாடித்துடிப்பை அறிந்து பார்க்கும் ஒரு அரசியல் சாணக்கியமே அதுவாகும் என்று அரசியல் விமர்சகர்கள் சிலர் தெரிவித் துள்ளனர்.

கொந்தளிப்புக்கள் அதிகமானால் அந்த தீர்வுத் திட்ட யோசனை போலியானது என்று மறுக்கும் வாய்ப்பு அரசுக்கு இருந்தது என்பதை அந்த விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை ஜனாதிபதி வெளியிடுவது தீர்வுத்திட்ட யோசனையே தவிர, இதுதான் அரசின் இறுதியான தீர்வல்ல என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, இந்தத் தீர்வுத் திட்ட யோசனைகளில் உள்ள விடயங்கள் இனிமேல்தான் விவாதத்திற்கு உள்ளாக்கப் படவிருக்கின்றன.

விவாதங்கள் எப்போது முடியும் என்பது கேள்விக்குறிதான். தவிர நாட்டின் அரசியல், யுத்த நிலவரங்கள் எதிர்காலத்தில் மாற்ற மடையலாம்.

அவ்வாறான நிலையில் தற்போதைய தீர்வுத் திட்ட யோசனைகளில் இருக்கக்கூடிய அதிகாரங்கள் கூடலாம்-குறையலாம்.

தீர்வுத் திட்டம் என்பதும் தீர்வுத் திட்ட யோசனைகள் என்பதும் வேறு வேறானவை யாகும். அரசு தான் வழங்கப்போகும் தீர்வுத் திட்டம் இதுதான் என்று அறிவித்தால் அதில் கூட்டல் குறைத்தலுக்கு இடமில்லை.

தீர்வுத் திட்ட யோசனைகள் என்றால் இறுதியான திட்டம் தயாரிக்கும்போது கூட்டிக் குறைக்கும் சாத்தியம் இருக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

## தேக்கமடைந்து வரும் சிவில் நிர்வாகம்

## மட்டக்களப்பு அரச அதிபர் அவசர சுற்றறிக்கை!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறி யுள்ளது. இதனால் அப்பகுதிகளிலுள்ள பிரதேச செயலகங்கள், திணைக்களங்கள் இயங்கவில்லை. இதனையடுத்து அப்பகுதி களிலுள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அப் பகுதிகளில் உடனடியாக சிவில் நிருவாகத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பணிப்புரையை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.ஏ.கே.பத்மநாதன் சகல பிரதேச செயலாளர்களுக்கும், திணைக் களத் தலைவர்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றின் மூலம் விடுத்துள்ளார்.

அதன் பிரதிகள் மாவட்ட பிரிகேடியர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகி யோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அக் கடிதத்தின் விவரம் வருமாறு:

வாகரை மற்றும் படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள பல இராணுவ முகாம் கள் அகற்றப்பட்டதை காரணமாகக் காட்டி, அப்பகுதிகளில் கடமை புரியும் உத்தியோகத் தர்கள், ஊழியர்கள் தங்கள் அலுவலகங் களுக்குச் செல்வதற்கும், மற்றும் மேற் கொள்ள வேண்டிய வெளிக்களப் பணி களுக்கும் பாதுகாப்பில்லை என்ற அடிப் படையில் தயக்கம் காட்டுவதாகவும் அறியக் கிடைக்கின்றது. இப்பகுதியில் வழமைபோல் சிவில் நிருவாகம் இடம்பெறுவதையும் பொதுமக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு வேண்டியவற்றை வழங்கு வதின் அவசியத்தையும் வலியுறுத்த விரும்பு கிறேன். சிவில் நிருவாகம் தடையின்றி செயற்படுவதையும் உத்தியோகத்தர்கள் தமது அலுவலகங்களுக்குச் சென்று கடமைகளை மேற்கொள்வதையும் திணைக்களத் தலைவர் கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் தங்களின் ஒத்தாசை மிகவும் விரும்பத்தக்கது. இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஊழியர்கள் அவதி

வாழைச்சேனையிலிருந்தும், மட்டக்களப் பில் இருந்தும் வாகரைக்கு ஊழியர்கள் உரிய நேரத்திற்குச் செல்வதற்கு போக்கு வரத்து ஏற்பாடுகளில்லை. மட்டக்களப் பிலிருந்து வாகரை புறப்படும் பஸ் பகல் 11 மணிக்கே வாகரை செல்கிறது. உடனேயே அந்த பஸ் அங்கிருந்து திரும்பி விடுவதால் ஊழியர்கள் அலுவல் முடிந்து திரும்பிவர முடியாதுள்ளது. அங்கு தங்கிநின்று கடமையாற்றுவதற்கும் அங்கு சாப்பாட்டுக்குக் கூட வசதிகளில்லை. வறிய மக்கள் பெறும் உணவு முத்திரை உணவுப் பொருட்களில் கால் பங்கைத்தான் இராணுவத்தினர் வாகரைகொண்டு செல்ல அனுமதிக் கிறார்கள். காலையில் 8.30 க்கு வாகரையை சென்றடையக்கூடியதாகவும், பி.ப 4 மணிக்கு அங்கிருந்து திரும்பக் கூடியதாகவும் பஸ் சேவை இருந்தால் ஊழியர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சனை தீரும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

### மாற்று ஏற்பாடு

மட்டக்களப்பு படுவான்கரைப்பகுதி, வாகரை, உன்னிச்சை, உறுகாமம், மணற் பிட்டி ஆகிய பகுதிகளில் போக்குவரத்து பஸ் சேவைகளை நடாத்துவதில் தாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதாக மட்டு டிப்போ நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.எஸ்.சந்திரசேகரம் தெரிவித்தார். இப்பகுதிகளில் இராத்தங் கலுக்காக பஸ்களை அனுப்பி, அங்கிருந்து காலையில் சேவைகளை நடாத்த தாம் பிரிகேடியரின் அனுமதியை எதிர்பார்த் திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மூன்றாவது பாரிய இழப்பு

## 91 இல் 526, 95 இல் 180

வெலிஓயாத் தாக்குதல் நடவடிக்கையில் 180 புலிகள் பலியாகி இருப்பதாகவும், அதில் 128 பேர் பெண்புலிகள் என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

ஈழப்போர் ஒன்று முதல் தற்போதைய ஈழப்போர் மூன்றுவரை புலிகளின் தரப்பில் ஏற்பட்ட இழப்புக்களில் இதுவே பாரியது என்பதுபோல சில செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், புலிகள் தரப்புக்கு இதுவரை போரில் ஏற்பட்ட இழப்புக்களில் இது மூன்றாவது பாரிய இழப்பாகும்.

1991ம் ஆண்டு யூலை மாதம் ஆனையிறவு இராணுவ முகாம் புலிகளால் முற்றுகையிடப்பட்டது. சரியாக ஒரு மாதம் நீடித்த அந்த முற்றுகையை படையினர் முறியடித்தனர். அதில் புலிகளது தரப்பில் 526 பேர் பலியானார்கள். 1500 புலிகள் காயமடைந்தனர். இதுவே இதுவரை காலப் போரில் புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய தோல்வியும், இழப்புமாகும்.

1993 இல் பூநகரி கூட்டுப்படைத்தளம்மீது நடைபெற்ற தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் புலிகளது தரப்பில் 456 பேர் பலியானார்கள். எனினும் தவளைப் பாய்ச்சல் நடவடிக்கை புலிகளுக்கு வெற்றியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இழப்பு விபரங்கள் புலிகளால் உத்தியோக பூர்வமாக தெரிவிக்கப்பட்டவையாகும்.

## அச்சத்தால் இடம்பெயரும் மக்கள்

## குடாநாட்டில் தொடரும் ஷெல் வீச்சு

## தற்போதைய யாழ்ப்பாண நிலவரம்!

(யாழ் நிருபர்)

'முன்னேறிப் பாய்ச்சல்' நடவடிக் கையை அடுத்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பியிருந்தனர்.

எனினும், படையினர் மீண்டும் முன்னேறிவரக் கூடும் என்ற அச்சம் வலி காமம் பகுதிகளில் உள்ள மக்களிடம் ஏற் பட்டுள்ளது. ஷெல் வீச்சுகளும் சரமாரியாக இடம்பெற்று வருகின்றன.

இதன்காரணமாக, வலிகாமம் பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது உடமைகளோடு வேறு பகுதிகளுக்கு சென்று கொண்டிருக்கின்றன.

இதேவேளை அளவெட்டியில் நிலை கொண்டுள்ள படையினர் மல்லாகம் நோக்கி அடிக்கடி வந்து திரும்புவதால், மல்லாகம் பகுதியில் உள்ள குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளன.

யாழ் குடாநாட்டில் வதந்திகள் வேகமாகப் பரவிவருகின்றன. வதந்திகள் பரப்புவோர் குறித்து கடுமையாக எச் சரித்துள்ள புலிகளது காவல்துறை, வதந்தி கள் பரப்பிய சிலரை கைது செய்துள்ளது.

சுன்னாகம், மருதனாமடம், உடுவில் பகுதிகளில் ஷெல்கள் வந்து விழுகின்றன. இதனால் அப்பகுதிகளில் இருந்தும் பல குடும்பங்கள் அருகிலுள்ள கிராமங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளன.

இதேவேளை, பாதுகாப்பு நிதி திரட்டு நடவடிக்கையில் புலிகள் ஈடுபட்டுள்ளன. வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களுக்கு சமூகமளிக்கும்படி வர்த்தகர் கள் அழைக்கப்பட்டுள்ளனர். புலிகள் அமைப்பின் 'வருவாய்த் துறை' இக்கூட்டங் களை யாழ் குடாநாடெங்கும் நடத்திவருகிறது.

தற்போதைய சூழல் காரணமாக யாழ்-பல்கலைக்கழகத்தில் கடந்த 29.07.95 அன்று நடைபெறவிருந்த பட்டமளிப்பு விழாவும் ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## தமிழ் மொழிபெயர்ப்பு இல்லாத மாகாணசபை!

## ஒதுக்கிய நிதி போதாது என்று காரணம்!

(கண்டி நிருபர்)

"மத்திய மாகாண சபையில் சமகால மொழி பெயர்ப்பு வேண்டும்; அத்தகைய வசதியும் வாய்ப்பும் ஏற்படுத்தும்வரை சபையை ஒரு மாத காலத்திற்கு ஒத்திப் போடுங்கள்" இப்படிக்கோரினார் நுவ ரெலியா மாவட்ட உறுப்பினரான சட்டத் தரணி திரு.எஸ்.அருள்சாமி.

மத்திய மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் பன்சோகல மாகாண சபை மண்டபத்தில் நடைபெற்றது. அப்பொழுது அங்கு சிங்கள-தமிழ் மொழிபெயர்ப்பு சம காலத்தில் இடம்பெறாத குறையை திரு. அருள்சாமி சுட்டிக் காட்டினார்.

சமகால மொழிபெயர்ப்புக்கான வசதி களை ஏற்படுத்தும் பொருட்டு மாகாண சபை 13 இலட்சம் ரூபா ஒதுக்கி இருப்ப தாகவும் இது போதுமானதாக இல்லையென சபைக்குத் தலைமை தாங்கிய தலைவர் திரு.பத்மகீர்த்தி ஹேமச்சந்திரா சுட்டிக் காட்டினார். என்றாலும் இதற்குரிய ஏற் பாடுகளை மேற்கொள்வதற்கு தாம் சகல நடவடிக்கைகளையும் எடுப்பதாக திரு. ஹேமச்சந்திரா சபையில் மேலும் கூறினார்.

இ.தொ.கா.வின் சார்பில் புதிய உறுப் பினராக நியமிக்கப்பட்டுள்ள திரு.சிங். பொன்னையா தமது கன்னி உரையின் போது, நுவரெலியா, தலவாக்கல பகுதியில் பாடசாலை மாணவர்கள் பஸ்ஸுக்காக பல மணி நேரம் காத்திருப்பதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டியதுடன், சபையில் உறுப்பினர்களின் உரையை மொழிபெயர்க்க உரிய நட வடிக்கை எடுக்காததன் மூலம் மாகாண சபையின் கருமங்கள் சரியாக இயங்கவில்லை என்றே கருத வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## புலிகள் மிரட்டல்! பதவி விலகல்!

(மட்டக்களப்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து மட்டக்களப்பு மேற்கு படுவான்கரைப்பிரதேச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஞானமுத்து சிவசண்முகம் தனது பதவி யிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் பதவியில் இருந்து தம்மால் சேவையாற்ற முடியாதிருப்ப தாக அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயலாளரும் தகவல் சுற்றுலாத்துறை அமைச்சருமான தர்மசிறி சேனாநாயக்கா விற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்

கடந்த மாதத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆளும் கட்சி அமைப்பாளர்களைப் பதவிவிலகுமாறும் இல்லையேல் துரோகிகளாகக் கணிக்கப் படுவார்களெனவும் விடுதலைப்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் துரை அறிவித் திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆளும் கட்சி அமைப்பாளர்கள் கொழும்பிலேயே தங்கியிருப் பது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

# கர்ப்பிணிகளையும் கவனிக்க முடியாத வைத்தியசாலை!
# வருடம் பலவாகத் தொடரும் வசதியீனம்!

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் வடமாகாண மக்களுக்கே சகல வசதிகளையும் கொண்ட வைத்திய சாலை ஒன்று மிக முக்கியமாக தேவைப்படுகின்றது. வவுனியா அரசினர் வைத்தியசாலை அதனை ஈடுசெய்யுமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. வவுனியா வாழ் மூவின மக்களின் தேவையையே நிறைவு செய்ய முடியாத வசதிகளைக்கொண்டிராத வைத்தியசாலை எவ்வாறு வடமாகாண மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப்போகின்றது? என்பதை நினைக்கும்போது மிகவும் கவலையாகவுள்ளது. இதனை வைத்தியசாலை பகுதியினரும் நன்கு உணர்ந்து செயல்படுவதாகத் தெரியவில்லை. இதனால் வவுனியா வாழ் மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்தும் வீணான உயிரிழப்புக்களையும் சந்திக்க நேரிடுகின்றது.

இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டாமல் இருக்கவும் முடிய வில்லை. கடந்த 17.06.1995 அன்றையதினம் நள்ளிரவு வவுனியாவைச் சேர்ந்த செல்வி.யூட்அன்ரனட் நிகிலா என்பவர் பாம்புக் கடிக்கு இலக்கானதால் வைத்திய சாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு கவனிப்பாரற்று காலம் தாழ்த்தல் மற்றும் உடன் சிகிச்சை இன்மை காரணமாக விஷம் கூடுதலாக உடலில் கலந்ததால் மரணமானார். அனுராதபுரம் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்ப முயற்சி செய்ததாகவும் பின்பு கூறப்பட்டது. இது வவுனியா மக்களை மிகவும் கவலை கொள்ளவைத்தது.

இப்படியான சம்பவம் இனிமேலும் நிகழக்கூடாது என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதில் இருந்து ஒன்றை விளங்கிக் கொள்ளலாம். வைத்தியசாலையில் போதிய வசதிகள் இல்லை. டாக்டர்கள், தாதிகள் போதாமை, மருந்துகள் இல்லாமை போன்ற காரணங்களால் அனுராதபுரம் வைத்தியசாலையை நம்பியிருக்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் பல அசௌகரியங்களை மக்கள் சந்திக்கின்றனர். இவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

கர்ப்பிணி ஏழைத் தாய்மார்கள் பலர் தமது கருத்தை தெரிவிக்கையில் தம்மை பரிசோதித்த பின் அனுராதபுர வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் எனக் கூறப்படுகின்றதாம். இதனால் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்யுள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அத்துடன் வவுனியா வைத்திய சாலையில் சாதாரண இரத்தப் பரிசோதனைக்குக் கூட வசதிகள் இல்லை. பல தடவைகள் அனுராதபுரம் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் பிரயாணச் செலவுகள் ஒருபுறம் காலநேரம் வீணானது மறுபுறம். இது பலருக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது.

இந்த வசதியீனங்கள் பல வருடங்களாகத் தொடர்கின்றன. பொதுஸ்தாபனங்கள், நலன் விரும்பிகள் பலமுறை சுட்டிக் காட்டியும் பயன்கிடைக்கவில்லை.மாறாக தொடர்ந்தும் மக்கள் கஷடத்தையே அனுபவித்து வருகின்றனர்.

பி.எஸ். குகனேஸ்வர சர்மா
வவுனியா

# இறப்பர் தோட்டங்களில் புலி வேட்டை?

(குருநாகல் நிருபர்)

குருநாகல் மாவட்டத்தில் தொடங்கஸ்லந்த தேர்தல் தொகுதியில் உள்ள இறப்பர் தோட்டங்களுக்கு திடீரென நுழையும் பொலிஸார் தோட்டத் தொழிலாளர்களிடையே புலி வேட்டை நடத்திய சம்பவங்கள் முரசு நிருபருக்கு தெரியவந்துள்ளது.

அதிகாலையில் தோட்டங்களுக்குள் நுழையும் பொலிஸார், தொழிலாளர்களால் தமது வீடுகளில் உறவினர்களையோ, நண்பர்களையோ தங்க வைக்க வேண்டாமென கட்டளை இடுகிறார்கள். இதனால் இதே இடத்தைச் சேர்ந்தவர்கள்-வெளியூர்களில் தொழில் பார்க்கும் இளைஞர்கள் தங்கள் வீடு வந்தாலும் பொலிஸார் அழைத்துச் செல்கின்றனராம். அண்மையில் இப் பகுதியைச் சேர்ந்த ஒரு தொழிலாளியின் பணம் அடையாளம் தெரிந்த ஒரு சண்டியனால் பறிக்கப்பட்டதாம். இது விடயமாக ரிதீகமைப் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்ற வேளை முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இப்பகுதி தொழிலாளர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்து 'குருநாகல் மனித உரிமைகள் அமைப்பாண்மை' சம்பந்தப்பட்டவர்களுக்கு கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் அறிவித்துள்ளது. அத் தொழிலாளர்கள் அண்மையில் முரசு நிருபருக்கு தகவல் தருகையில் "நாம் அண்மையில் பாதுகாப்பு நிதிக்கும் பணம் வழங்கினோம். எமக்குப் புலிகளைத் தெரியாது. எம்மை ஏன் துன்பப் படுத்துகிறார்களோ தெரியாது" என்றனர். சம்பந்தப்பட்டவர் களும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தில் தலையிட்டு எமக்கு விமோசனம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

# கார்ட்டூன் மூலை




# பெரிய புல்லுமலை அகதிகள் குடியமர ஏற்பாடு

(ஏறாவூர் நிருபர்)

கடந்த 1990ம் ஆண்டு இடம்பெற்ற வன்செயலின் போது இடம் பெயர்ந்து இன்றுவரை அகதிகளாக உள்ள பெரியபுல்லுமலையைச் சேர்ந்த 150 குடும்பங்கள் ஏறாவூரை அடுத்துள்ள மயிலம்பாவெளி கிராமத்தில் குடியமர்த்தப்பட இருக்கிறார்கள். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருப்பதாக ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் திரு.என்.ஸ்ரீசங்கர் தெரிவித்தார்.

மயிலம்பாவெளியிலுள்ள அரச காணியொன்றில் இவர்கள் குடியமர வசதி செய்யப்படுகிறது. புனர்வாழ்வு புனரமைப்பு துறைமுகங்கள் கப்பற் போக்குவரத்து அமைச்சர் அல் ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் உத்தரவுப்படி இக்குடும் பங்களுக்கு உடனடியாக ரூபா 7000/- மும் கிணறு, மலசல கூடம் உட்பட சகல அத்தியாவசியவசதிகளும் செய்து கொடுக்க வகை செய்யப்படும் என்றும் பிரதேச செயலாளர் சொன்னார்.

மட்டக்களப்பு-பதுளை வீதியில் பெரிய நிரந்தர இராணுவ முகாம் பெரிய புல்லுமலையிலேயே உள்ளது. இது மஹா ஓயா சிங்களப்பகுதிக்கும் மட்டக்களப்பு தமிழ்ப் பகுதிக்கும் இடையேயான எல்லைப் பிரதேசமாகும்.

# கடன் வாங்காத கடனாளிகள்!

திருக்கோணமலை தேசிய வீடமைப்பு அதிகார சபை, தன்னிடம் கடன் பெறாதவர்களிடமும் கடன் பணத்தை ஒழுங்காகச் செலுத்துமாறும் தவறின் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் பயமுறுத்தி இருக்கிறது.

இந்தப் புதுமையான பயமுறுத்தல் சல்லிக் கிராமத்தைச் சேர்ந்த பா. சொர்ணகாந்தி, த.பால சிங்கம் உட்படப் பலருக்கு விடுக்கப்பட்டுள்ளது. இக் கடிதங்கள் கடன் பெற்றவர்களின் பிணையாளர் எனக் கருதப்பட்டோருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

"12.07.94. நீங்கள் பெற்றுக் கொண்ட கடன் தொகை 15,000/- க்கான தவணைக் கட்டுப்பணத்தைச் செலுத்தாமல் இருக்கிறீர்கள்" என்று இக் கடிதங்கள் கூறுகின்றன.

தாங்கள் கடனுக்கு எல்லோரையும் போல விண்ணப்பித்ததாகவும், சகல ஆவணங்களும் சரிபார்க்கப் பட்டு பணம் வழங்குவதற்கான வவுச்சர்களில் தங்கள் கை யொப்பம் ஒரு வருடத்துக்கு முன்னரே பெறப்பட்ட தாகவும் கூறும் பாதிக்கப்பட்டோர் தங்களுக்கு அதிகார சபையால் இன்றுவரை ஒருசதமேனும் வழங்கப் படவில்லையென்றும் இக் கடிதங்கள் தங்களுக்கு ஆச்சரியமளிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.


# தபால் மூலம் கல்வி நெறிகள்

BRIGHT BOOK CENTRE (PVT) LIMITED

## 90 Days Spoken English & Sinhala

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம்,சிங்களம் பேச,எழுத,வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். மூன்று கசெட்டுகளுடன் கூடிய பாடத்திட்டம்.

## Method of Book-Keeping

கடைக்கணக்கு முதல் கம்பனிக்கணக்கு வரை எவ்வாறு பதியப்பட வேண்டும் என்பதையும், மொத்த விற்பனை வரி,வருமான வரி, ஊழியர் சேமஇலாப நிதி,ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றைக் கணக்கிடும் முறையும் கற்றுத் தரப்படும். இவ் ஆறு மாத Diploma கல்வி நெறியினை தபால் மூலம் சிறப்பாக முடிக்கும் அனைவருக்கும் Certificate ம் வழங்கப்படும்.

## G.C.E(O/L) முன்னோடிப் பயிற்சி நெறி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர) மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திலும் 1000 வினாவிடைகளுடன் கூடிய பாடத்திட்டம்.

## ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடிப் பயிற்சி

1995,டிசெம்பரில் நடைபெறவிருக்கும் புதிய பாடத்திட்டத்திலான புலமைப் பரிசில் பரீட்சைக்கு முன்னோடிப் பயிற்சியாக மாதாந்தம்

**வெற்றிக்கனி**

சஞ்சிகையை வெளியிட்டு வருகிறோம், இப்பயிற்சியில் இணையும் மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கும், முன்னோடிப் பரீட்சையும் நடைபெறும். இவற்றோடு புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கீழ்க்காணும் நூல்களும் வெளியிடுகிறோம்.

பொது விவேகம் (செயல்நூல்) - 60.00
பொது விவேகம் (பாடநூல்) - 75.00
மாதிரி வினாவிடை ஆண்டு 4 - 100.00
மாதிரி வினாவிடை ஆண்டு 5 - 100.00

மற்றும் ஆக்கத்திறன் செயற்பாடு ஆண்டு2, ஆண்டு3
நாமும் சுற்றாடலும் ஆண்டு2, ஆண்டு3

Bright இன் பாஷைப்பயிற்சியும் விளக்கமும் ஆண்டு 1,2,3,4,5 ஆகியன வெளிவரவுள்ளன. மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LIMITED
P.O.BOX 162, S-27, FIRST FLOOR
COLOMBO CENTRAL SUPERMARKET COMPLEX
COLOMBO-11 T.P: 434770


தொடர்புகளுக்கு:
தினமுரசு வாரமலர்
த.பெ.எண். 1772
கொழும்பு.


## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

**கிளைமையகம்**
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# வாகனம் போனால் ஊர் நடுங்கும்

அண்மையில் கண்டி பூரணவத்தை பாதை தொடர்ந்து பெய்த மழை காரணமாக மழை நீர் பெருக்கெடுத்து போக்கு வரத்து பாதை நிரம்பி வழிந்து பாதைக்கு கீழே உள்ள வீடுகளின் மேல் மண் இடிந்து சரிந்து கிடக்கின்றது. இப்படி சரிந்து விழுந்தவை கவனிப்பாரற்றுக் கிடந்து, சரிந்த மண்ணில் மரங்களும் முளைத்து விட்டன. பாதை இரு மருங்கிலும் கால்வாய்கள் இல்லாமையினாலும் வீடுகள் இருக்கும் அதாவது பாதைக்கு கீழே உள்ள வீடுகளுக்கு பாதுகாப்பான உறுதியான சுவரொன்றில்லாமையினாலும் பாரிய வாகனங்கள் போகும் போது இந்த ஊர் மக்கள் நடுங்க வேண்டியுள்ளது.

பாதை உறுதியாக இல்லாமையினால் வாகனங்கள் போகும் பொழுதும் மண் சரிவு ஏற்படுகின்றது. அதே போன்று வீடுகளின் பின்னால் போகும் பெரிய கான் நிறைந்து வீடுகளையும் பாதித்துக் கொண்டு போவதும் கஷ்டமாக இருக்கிறது. இந்த ஊர் மக்கள் மலசல கூடத்தை கான் வழியே திருப்பி விடுவதும் பெரும் அதிருப்தியை தருகிறது. கண்டி மாநகரசபை இதை கவனிக்குமா?

பூரணவத்தை மரீனா நியாஸ்–கண்டி.

# பசறையில் ஒரு குறை!

பசறை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஹொப்டன் உப தபாற் கந்தோரில் தமிழ்தெரிந்த அதிகாரிகள் இன்மையினால் இப்பகுதியில் செறிந்து வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது சொந்த தேவைகளை பூர்த்தி செய்வதில் பெரும் இன்னல்களை அடைகிறார்கள். இப்பகுதிக்கு ஒரு தமிழ் அமைச்சர் இருந்தும் கூட மக்களின் குறையை தீர்க்கமாட்டாரா என இப்பகுதி பொதுமக்கள் கேட்கிறார்கள்.

**சுவிஸ்/ டென்மார்க்/ இத்தாலி/ ஜேர்மன்/ ஃபிரான்ஸ்/ அவுஸ்திரேலியா/நோர்வே நாடுகளுக்கான**

**தினமுரசு வாரமலர் சந்தா விபரம்**

ஒரு வருடத்திற்கு–தபாற் செலவு உட்பட ரூபா 2250/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்களுக்கு–தபாற் செலவு உட்பட ரூபா 1130/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்களுக்கு–தபாற் செலவு உட்பட ரூபா 590/=

| மத்திய கிழக்கு நாடுகள் | அமெரிக்கா/கனடா |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 1365/= (52 வாரங்கள்) US$38 | ஒரு வருடத்திற்கு ரூபா 2790/= (52 வாரங்கள்) US$57 |
| ஆறு மாதங்களுக்கு ரூபா 975/= (26 வாரங்கள்) US$20 | ஆறு மாதங்களுக்கு ரூபா 1420/= (26 வாரங்கள்) US$29 |
| மூன்று மாதங்களுக்கு ரூபா 485/= (13 வாரங்கள்) US$11 | மூன்று மாதங்களுக்கு ரூபா 730/= (13 வாரங்கள்) US$16 |

பெயர் சுயமுகவரி ஆகிய விபரங்களை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி

THINAMURASU VAARAMALAR
P.O. BOX. 1772
COLOMBO.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவங்கள் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.


படிப்பகம்

www.padippakam.com

# வெலி ஓயா- வெளிவராத மறுபக்கம்!

அநேகமாக அனைவருமே முரசை பத்திரமாக சேகரித்து வைத்திருப்பீர்கள்.

105 வது முரசில் 'யுத்த சதுரங்கம்-முற்றுகை எங்கே?' என்ற தலைப்பின் கீழ், "மூன்றாம் கட்ட ஈழப்போர் கிழக்கில் தீவிரமாகும். வடக்கு-கிழக்கை பிரிக்கும் மைய நிலமான 'வெலிஓயாவில்' (மணல் ஆறு) புலிகளது கவனம் திரும்பும்" என்று கூறியிருந்தேன்.

ஆனையிறவு இராணுவ முகாம், பூநகரி முகாம் போன்றவற்றை அண்டியிருந்த புலிகளது அணிகள் குறைக்கப்பட்டன. அவை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு தாக்குதல் நடத்த அனுப்பப்பட்டன.

முன்னேறிப் பாய்ச்சலை முறியடிக்கும் 'புலிப்பாய்ச்ச'லுக்காக அந்த அணியில் ஒரு பகுதி திருப்பி அழைக்கப்பட்டது என்ற விபரங்களை '110 வது முரசில்' தந்திருந்தேன்.

இவற்றைக் குறிப்பிடும் காரணம், இன்றைய எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் தரும் தகவல்களை சுலபமாக புரிந்து கொள்ள உதவும் என்பதற்காகவே!

எந்தவொரு யுத்த நடவடிக்கையிலும் மூலோபாயம், தந்திரோபாயம் என்பவை யுத்தத்தை நடத்திச் செல்ல முக்கியமானவையாகும்.

யுத்தம் எந்த இலக்கை அடைய வேண்டும் என்ற திட்டம் 'மூலோபாயம்' என்று அழைக்கப்படும்.

இலக்கை அடையும் திட்டத்தை நிறைவேற்ற பல கட்டங்களை கடந்தாக வேண்டும். அந்தக் கட்டங்களை எவ்வாறு கடந்து செல்வது என்பதற்கு பல உப திட்டங்கள் இருக்கும். அவைதான் 'தந்திரோபாயங்கள்' என்று அழைக்கப்படும்.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் புலிகளது மூலோபாயம் கிழக்கை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது.

அவ்வாறு கட்டுப்பாட்டில் கொண்டு வர புலிகள் வகுத்துள்ள தந்திரோபாயங்கள் என்ன?

**1. கிழக்கில் உள்ள பலவீனமான பாதுகாப்புப்படை நிலைகளைத் தாக்குவது.**

**2. படையினரது நடமாட்டங்களை கட்டுப்படுத்தி, தமது நடவடிக்கைகளை விரிவாக்குவது.**

**3. கிழக்கில் அரசியல் ரீதியில் தமக்கு எதிராக உள்ள சக்திகளை ஒழிப்பது.**

**4. வடக்கு-கிழக்கை பிரிக்கும் குடியேற்றங்களை அகற்றுவது.**

இந்த தந்திரோபாயத்தில் முக்கியமான சம்பவம்தான் வெலிஓயாத் தாக்குதல்.

'மணல் ஆறு' என்றழைக்கப்பட்ட பகுதிதான் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமாக 'வெலிஓயா'வாக மாற்றப்பட்டது.

வடக்கையும்-கிழக்கையும் இணைக்கும் மையபூமியாக மணலாறு (வெலிஓயா) இருப்பதால் இரண்டு வகையில் அதன் முக்கியத்துவம் இருக்கிறது.

ஒன்று, பூகோளரீதியாக, மற்றொன்று, போர் இயல் ரீதியாக.

மணலாறு வெலிஓயாவாக மாற்றப்பட்டு திட்டமிட்ட குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனால், வடக்கு-கிழக்கு, தமிழர்களது நிலத் தொடர்ச்சி உள்ள பாரம்பரிய பிரதேசம் என்ற அம்சம்- அதாவது தேசிய இன அடையாளங்களில் ஒன்று அழிக்கப்படுகிறது.

போர் இயல் ரீதியாக எடுத்துக் கொண்டால், கிழக்கில் புலிகளது போருக்கு வடக்கிலிருந்து விநியோகம், மற்றும் தரைவழி உதவிகள் செல்வதை மணலாறு தடுக்கிறது.

முல்லை மாவட்டத்தின் மணலாறு தடைசெய்யப்பட்ட பிரதேசம் என்ற 84ம் ஆண்டு டிசம்பர் 21ம் திகதி முதல் இன்று வரை அரசாங்க உத்தரவு அமுலில் இருக்கிறது.

முல்லைத் தீவு மாவட்டத்தின் அருமை, வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அதன் முக்கியத்துவம் குறித்து ஆரம்பம் முதலே புலிகள் புரிந்துகொண்டு இருந்தனர்.

1984இல் கொக்கிளாய், நாயாறு பகுதியிலும், பின்னர் 85ல் டொலர்ஃபாம், கென்ற்ஃபாம் போன்றவற்றிலும் குடியேற்றவாசிகள் மீது புலிகளது தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன.

எனினும், புலிகளது மேற்கண்ட தாக்குதல்களின் பின்னர் குடியேற்றங்களை அரசு நிறுத்திவிடவில்லை. குடியேற்றங்களுக்கு பாதுகாப்பாக இராணுவ வேலிகள் புதிதாக உருவாக்கப்பட்டன; முகாம்கள் பலப்படுத்தப்பட்டன.

கிணறு வெட்டப் பூதம் வெளிவந்த கதைபோல குடியேற்றங்கள் மீது தாக்குதல் நடத்தியதால் புதிய இராணுவ முகாம்கள் முளைத்தெழுந்தன.

இதனைப் புலிகளும் உணர்ந்து கொண்டதால் மணலாற்றுப் பகுதியில் உள்ள முக்கியமான இராணுவ முகாமை தாக்கியழிக்க திட்டமிட்டனர்.

25.7.93 அன்று மணலாற்றில் இருந்த ஜானகபுர (மண்கிண்டி மலை என்பது பழைய பெயர்) இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்டது. அதன் அருகே இருந்த இரண்டு மினி இராணுவ முகாம்களும் புலிகளால் ஒரே நேரத்தில் தாக்கப்பட்டன.

மணலாற்றில் இருந்த மிக முக்கியமான முகாம் மண்கிண்டி மலை (ஜானகபுர) முகாமாகும்.

சுமார் 500 புலிகள்(பெண் புலிகள் உட்பட) அத் தாக்குதலில் பங்குகொண்டனர். புலிகளது படைத்துறைத் துணைத்தளபதி பால்ராஜ், மூத்த தளபதி சொர்ணம், முல்லை மாவட்ட சிறப்பு தளபதியாக இருந்த அன்பு ஆகியோர் தலைமையில் தாக்குதல் நடைபெற்றது.

முப்பது நிமிடத்தாக்குதலில் 'ஜானகபுர' இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. புலிகளது தரப்பில் 9 பேர் பலியானார்கள். படைத்தரப்பில் எழுபதுக்கு மேற்பட்டோர் பலியானார்கள். படையினரது புல்டோசரை எடுத்து முகாமை இடித்து தகர்த்த புலிகள், 5 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களோடு திரும்பினார்கள்.

இந்த நடவடிக்கைக்கு பிரபாகரனால், 'இதயபூமி 1' என்று பெயரிடப்பட்டது. இதயபூமி என்று பெயரிட்டிருந்தால் அத்தோடு அந்த நடவடிக்கை முடிந்தது என்று அர்த்தம்.

ஆனால், 'இதயபூமி 1' என்று பெயர் வைத்தமை, இதயபூமி 2....3 என்று மணலாற்றில் புலிகளது நடவடிக்கை தொடரும் என்பதை அப்போதே கோடிட்டுக் காட்டியது.

இதயபூமி 1 நடவடிக்கைக்குப் பின்னர் 'ஜானகபுர' இராணுவ முகாம் மீண்டும் பலம் அதிகரிக்கப்பட்ட நிலையில் உருவானது.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் மணலாற்றில் உள்ள இராணுவ வேலியை உடைக்கும் நடவடிக்கை, தந்திரோபாயரீதியில் புலிகளுக்கு மிக முக்கியமானதாக இருந்தது.

எனவே-93ம் ஆண்டு எந்த மாதத்தில் ஜானகபுர முகாம்மீது தாம் தாக்குதல் நடத்தினார்களோ- அதே மாதத்தில்-அதே திகதியில், அதே முகாமை முக்கிய குறியாக வைத்து தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டனர்.

இடையில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக மூன்று நாட்கள் தள்ளி 28ம் திகதி அதிகாலையில்தான் புலிகளால் தாக்குதலை ஆரம்பிக்க முடிந்தது.

இவ்வாறான தாமதமும் தாக்குதல் பற்றிய செய்தி படைத்தரப்புக்கு வந்துசேருவதற்கான கால அவகாசத்தை கொடுத்திருக்கலாம்.

சுமார் 1500 புலிகள் வரை தாக்குதலில் பங்குகொண்டனர். புலிகளது மகளிர் படையணி முக்கிய பங்கெடுக்கும்வகையில் தாக்குதல் அணி ஒழுங்கமைக்கப்பட்டது.

தரைவழியாகவும், கடல் வழியாகவும் தாக்குதல் நடத்தவும், திரும்பிச் செல்லவும் புலிகள் திட்டமிட்டிருந்ததாக நம்ப முடிகிறது.

புலிகளது தாக்குதல் திட்டத்தை படைத்தரப்பு ஐயத்துக்கிடமின்றி அறிந்துகொண்டது.

அதனை அடுத்து படைத்தரப்பு மிக நேர்த்தியான ஒரு வியூகத்தை வகுத்தது.

புலிகளை முகாம் நிலப்பரப்பின் உள்ளே வர அனுமதித்துவிட்டு, சுற்றிவளைத்து தாக்குவதுதான் திட்டம். அதற்கேற்ப நிலக்கண்ணிகள் தாராளமாகப் புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

28ம் திகதி அதிகாலை புலிகளது மகளிர் படையணி ஜானகபுர முகாம் பகுதிக்குள் புகுந்தது. கிட்டத்தட்ட நூறு பேர் கொண்ட அணி முகாமுக்குள் ஊடுருவ முற்பட்ட நேரத்தில் நிலக்கண்ணி வெடிகள் முழங்கியிருக்கின்றன.

வியூகத்துக்குள் சிக்கிய முதல் அணி அனேகமாக அழிக்கப்பட்ட நிலையில் ஹெலிக் கொப்டரும் வந்து குண்டுகளை வீசியிருக்கிறது.

போர் நடந்த பகுதி வெளிப்பிரதேசமாக இருந்தமையால் புலிகளை இனம்கண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. பதுங்கி-நிலை எடுத்துக் கொள்ளக்கூடிய வசதிகளும் புலிகளுக்கு அதிகம் இருக்கவில்லை.

துப்பாக்கிச் சமருக்கு அதிக வேலையில்லாமலேயே படையினர் புலிகளது தாக்குதல்களை முறியடித்திருக்கிறார்கள்.

புலிகளும் படையினரை உள்ளே அனுமதித்துவிட்டு வியூகம் வகுத்து தாக்குவது வழக்கம்.

மணலாற்றில் புலிகளது பாணியிலேயே படைத்தரப்பு புலிகளை எதிர்கொண்டு தாக்கியிருக்கிறது.

புலிகளுக்கு மணலாற்றுத்தாக்குதல் இராணுவரீதியில் பலத்த தோல்வி என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், படைத்தரப்பு தனது வெற்றி குறித்து வெளியே கூறும் தகவல்களும் கள நிலவரங்களும் வேறு வேறாகவே இருக்கின்றன.

5000 புலிகள் வந்தார்கள் என்று படைத்தரப்பு கூறுவது தனது புஜபலத்தை உயர்த்திக் காட்டுவதற்காகவே என்பது தெளிவு. 5000 புலிகள் தாக்குதலுக்கு வந்திருந்தால் பலியான புலிகளது எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கும்.

படைத்தரப்பிலும் இழப்புக்கள் கூடுதலாக ஏற்பட்டிருக்கும்.

முன்கூட்டியே தகவல் தெரிந்துவிட்டது என்பதை படைத்தரப்பே கூறியிருக்கிறது. அப்படியிருந்தும் தாக்குதல் நடத்த வந்த புலிகளது அணிகளில் குறைந்த பட்சம் சரிபாதியளவான அணிகளைக் கூட அழித்தொழிக்க படைகளால் முடியவில்லை.

ஐந்து முகாம்கள் சுற்றியிருக்க மத்திய முகாமான ஜானகபுர முகாமுக்குள் புலிகள் ஊடுருவி இருக்கிறார்கள். தமது ஒரு அணி வியூகத்திற்குள் சிக்கியதும் புலிகள் படைத்தரப்பின் தாக்குதல்களில் சிக்காமல் தமது அணிகளைப் பின்நோக்கி நகர்த்தியிருக்கிறார்கள்.

தமது தரப்பில் பலியான 80 பேர் வரையான உடல்களையும், தமது ஆயுதங்களையும் சுமந்துகொண்டு புலிகள் செல்ல முடிந்திருக்கிறது.

ஆக, படைத்தரப்பு தமது முகாம்களை பாதுகாத்தால் மட்டுமே போதும் என்றளவில்தான் தனது பலத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. புலிகளது அணிகளை முற்றாக அழித்தொழிக்கும் கடும் மோதலுக்கு படைத்தரப்பு முன்வர முடியவில்லை.

கனரக வாகனங்கள், ஆயுதங்கள், வான் படை, கடற்படை உதவிகள், முன்கூட்டியே தகவல் தெரிந்துவிட்ட சாதகம், சுற்றிலும் சிங்கள மக்களது குடியிருப்புக்கள், ஊர்காவல் படைகள் இத்தனையும் இருந்தும்கூட, தாக்கவந்த புலிகளது அணிகளில் பாதியைக் கூட பொறிக்குள் சிக்கவைக்க படையினரால் முடியவில்லை.

புலிகள் தாக்கினால் படைகளுக்குத்தான் அதிக இழப்பு வருவரு வழக்கம் என்ற கருத்து நிலவுகிறது. அதனால் மணலாற்றில் புலிகளது தாக்குதல் முறியடிக்கப்பட்ட செய்தி ஆச்சரியமான விஷயமாகிவிட்டது.

தொலைக்காட்சிகள் மூலம் புலிகளது சடலங்கள் காண்பிக்கப்பட்டதோடு ஆச்சரியம் மேலும் அதிகமாகிவிட்டது. இதனால், படைத்தரப்பின் பலவீனங்கள் யார் கண்ணிலும் படவில்லை.

பக்கச் சார்பற்ற விமர்சனம் என்பதற்கு அப்பால் படைகள் வெற்றிபெற்றால் ஆகா, ஓஹோ என்று பாராட்டும் விமர்சகர்கள் ஒரு புறமும், புலிகள் ஒரு தாக்குதல் நடத்தினால் இனிப்படைகள் யுத்தம் செய்யவே துணியப் போவதில்லை என்று துள்ளிக்குதிக்கும் விமர்சகர்கள் மறுபுறமும் நின்று மக்களிடம் தவறான மாயைகளை உருவாக்கி வருகிறார்கள்.

'சண்டே ரைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்ட தலையங்கம் ஒரு நல்ல உதாரணம். வெலிஓயா புலிகளுக்கு ஒரு 'வாட்டலூ' என்று தலைப்பிட்டிருந்தது.

வெற்றிகள் குவித்த மாவீரன் நெப்போலியன் தோல்வியைச் சந்தித்த போர் முனைதான் 'வாட்டலூ'

ஆனால், விஷயம் என்னவென்றால் 'வாட்டலூ' போர் முனையோடு நெப்போலியனது கதை முடிந்துவிட்டது. அதனால்தான் 'நெப்போலியனுக்கு ஒரு வாட்டலூ' என்று சொல்வதுண்டு.

அதனையும் வெலிஓயா மோதலையும் ஒப்பிடமுடியாது. ஏனெனில், 180 புலிகள் பலியானதோடு புலிகளது கதை முடிந்து விடப்போவதில்லை. தவிர 1991ல் ஆனையிறவு முற்றுகையில் 500க்கு மேற்பட்ட புலிகள் பலியாகியிருந்தனர்.

ஒரு மாத முற்றுகையை முறியடித்து படைத்தரப்பு பெற்ற மாபெரும் வெற்றி அது. அப்படியிருக்கும் போது 83ம் ஆண்டுக்குப் பின் படைகள் பெற்ற பெரிய வெற்றி என்று வெலிஓயா மோதல் குறிப்பிடப்படுவதும் ஆச்சரியம்தான்.

93ல் தவளைப் பாய்ச்சலில் புலிகள் தரப்பில் 456 பேர் பலியானார்கள். ஆனாலும் அதில் படைத்தரப்பின் இழப்புக்கள் அதிகம் என்பதால் அதனை வெற்றியாக கொள்ள முடியாது. ஆனால் ஆனையிறவுச் சமர்தான் படைத்தரப்பு யுத்த வரலாற்றில் பெற்ற மிகப் பெரிய வெற்றியாகும். ஆனால், அதுவே புலிகளுக்கு ஒரு வாட்டலூவாக மாறவில்லை என்பதுதான் கவனத்திற்குரியது.

'வெலிஓயா' மோதல் புலிகளுக்கு ஒரு 'வாட்டலூ' என்றால் கிழக்கின் தளபதி நளின் அங்கமனவை படைத்தரப்பு பலி கொடுத்திருக்க முடியாது.

இதே சமயம், புலிகளது தரப்பின் பலவீனமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதிகமான பெண்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதும், வயதில் குறைந்தவர்கள் புலிகளது அணிகளில் அதிகம் இருப்பதும் ஆட்பற்றாக்குறையை தெரியப்படுத்தியுள்ளன.

கெரில்லாத்தாக்குதல்களிலும், படையினர் எதிர்பாராத முனைகளில் தாக்குதல் நடத்துவதிலுமே புலிகளது பலம் தங்கியிருக்கிறது. முன்னேறிப் பாய்ச்சலை முறியடிக்க புலிகள் நடத்திய புலிப்பாய்ச்சலில் கூட படைத்தரப்பை தமது வியூகத்தில் சிக்கவைத்து முற்றாக அழித்தொழிக்க புலிகளால் முடிந்திருக்க வில்லை.

தமதுதரப்பின் 18 சடலங்கள் தவிர ஆயுதங்கள், மற்றும் பலியானோர், காயமடைந்தோர் சகிதம் படைகள் பின்வாங்கிச் செல்லக் கூடியதாக இருந்தது.

ஆக, சமபலநிலையில் இருதரப்பும் இருப்பதையே யுத்த கள நிலவரம் வெளிப்படுத்துகிறது. இவற்றுக்கு மத்தியில் தமது பலம் குறித்து சற்றே மிகைப்படுத்தும் பிரசாரத்தில் புலிகளும், மிக அதிக மிகைப்படுத்தலில் படைத்தரப்பும் ஈடுபட்டிருக்கின்றன.

புலிகளைப் பொறுத்தவரை வெலிஓயா மோதலில் பலி கொடுத்த உறுப்பினர்களுக்காக மற்றொரு தாக்குதலை அவர்கள் நடத்தியேயாக வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

தற்போதைய தாக்குதல் தோல்வியடைந்தமையால் 'இதயபூமி-2' என்று அதற்கு பெயரிட்டதை புலிகள் மறைத்திருக்கிறார்கள். தவிர தமது ஆயுத தளபாட இழப்புக்கள், கடலில் பறிகொடுத்த படகுகள் குறித்தெல்லாம் புலிகள் மௌனமாக இருக்கிறார்கள்.

இந்த மௌனம் மற்றொரு தாக்குதலுக்கான அறிகுறியாகவே தெரிகிறது.

□□





## தொண்டாவின் துணிச்சல்?

அமைச்சர் தொண்டமான் வடக்கு-கிழக்கு விவகாரத்தில் துணிச்சலாகப் பேசுகிறார். பிரபாவை 'பகத்சிங்'கோடு ஒப்பிட்டுப்பேசி சர்ச்சையிலும் சிக்கிக் கொண்டார்.

அதேசமயம், அவசரகால சட்ட விவாதத்தில் அவரது கட்சி உறுப்பினர்கள் புலிகளுக்கு சின்னதாக ஒரு குட்டுக் குட்டுகிறார்கள். அவசரகால சட்டத்தையும் ஆதரிக்கிறார்கள். மலையக நிலவரத்தையும் வடக்கு-கிழக்கு நிலைமைகள் பாதித்தே வருகின்றன. மலையகத்திலும் பரவலான கைதுகள் நடந்துவருகின்றன. இவற்றைத் தடுக்க அமைச்சர் தொண்டாவாலும் முடியவில்லை.

இது தவிர மலையக தோட்டத்துறை தனியார் மயப்படுத்தப்படும் விடயத்தில் களத்தில் இறங்கிப் போராடும் தொண்டாவின் துணிச்சல் காணாமல் போயிருக்கிறது. 'சிங்கத்திற்கு வயதாகிவிட்டதா? அல்லது, சில சிக்கல்களில் இருந்து மீள்வதற்கு சிங்கத்திற்கு அரசின் உதவி அவசியமாக இருக்கிறதா?' இதுதான் மலையகத்தின் தற்போதைய நிலவரத்தில் எழுந்துள்ள கேள்விகள்.

புதிய சக்தி என்று எதிர்பார்க்கப்பட்ட சந்திரசேகரனும் தனது குருவின் பாதையில் நடந்துகொண்டிருக்கிறார். ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி விடயத்தில் பொது ஜன முன்னணி தான் கொடுத்த வாக்குறுதியில் நழுவியது மெய்!.

ஆனால் எதிர்த்துப் போராட இது தருணமல்ல என்று நினைக்கிறார் சந்திரசேகரன். ஆகவே கிடைப்பதை முதலில் பெற்றுக்கொள்வது என்பதுதான் சந்திரசேகரனின் தற்போதைய அரசியல் தந்திரோபாயமாக இருக்கிறது.

இவை குறித்து வரும் வாரம் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

## அதிரடி அய்யாத்துரை



பொன்னான தலைவரின் புத்திரர் மீது கண்வைத்து 'கன்' பாவிக்க ரெண்டு எழுத்தார் தலைநகருக்கு வந்தவையாம். அதில் ஒருவர் சீருடையினரிடம் மாட்டிய தாலை விசயம் புத்திரர் காதுக்கும் எட்டிப்போட்டுது. ரெண்டு எழுத்தாரும் விமர்சிக்கப்பட வேண்டும் எண்டு போனமாதம் பேட்டி கொடுத்த புத்திரர் அடிச்சார் பாருங்கோ ஒரு கரணம்! ரெண்டு எழுத்தாரை பாராட்டி கனடாவிலை போய் பேட்டி கொடுத்தாராம். ரெண்டு எழுத்து பிரமுகர்கள் யாரையாவது சந்திக்கலாமோ எண்டு அலைஞ்சாராம்....ம்ஹூம்...ஒருத்தரும் சந்திக்க முன்வரேல்லையாம். கவலையோடு திரும்பிவந்து மேலும் தற்காப்பு அறிக்கைகள் விடுறதிலை கண்ணாயிருக்கிறார்.

"ஆறு மாதத்திலை ஈழம் கிடைக்கும்" அதுவும் பொன்னான தலைவரின் புத்திரர் கனடாவிலை கொடுத்த பேட்டி தானுங்கோ. 'காலத்தை கணக்கிடுகிறதை விட்டுப்போட்டு கையாலை உதவி செய்யலாமல்லோ? புத்திரருக்கு மலேசியாவில இருக்கிற றப்பர் எஸ்டேட், கொழும்பில இருக்கிற சொத்துக்களையெல்லம் குத்து மதிப்பாக கணக்குப் பார்த்தனான். பத்து வருஷத்துக்கு நிதி திரட்டாமல் ரெண்டு எழுத்தார் சண்டை பிடிக்க நிச்சயமாகப் போதும். வித்துக் குடுக்கலாமே? யார் வேண்டாமெண்டு சொன்னது? மடியைப் பொத்திப் பிடிச்சுக்கொண்டுதான் அப்பாவும் அரசியல் பேசினவர். மகனும் அவ்வழிதானோ.....?

கிரிக்கெட் ஆட்டம் நடக்கும்போதுதான் 'ரன்' எண்ணுறதும் எவ்வளவு எண்டு 'ஸ்கோர்' சொல்லுறதும் வழக்கம் பாருங்கோ. ஆனால், ஆட்டம் முடிஞ்ச பிறகும் 'ரன்' குவிக்கிற சாதனை நம் நாட்டிலை தான் நடக்குது. எதைச் சொலுறன் எண்டு தெரிஞ்சாச் சரிதான்.

தலைநகரில் குடியிருக்கும் பதிவுத் துண்டை கசங்காமல் கிழியாமல் கொண்டு திரிஞ்ச நேரத்திலை, அது அவசியமில்லை எண்டு உயர் மட்ட அறிவித்தல் வந்தது. 'பெரியாளே சொல்லுறார்- பிறகென்ன?' எண்டு போட்டு 'துண்டில்லாமல்' போனவை கதை கந்தலாகிப் போச்சு. கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரிகள் வரம் கொடுக்காத கதைதானுங்கோ- தொடர்கதை.

தேனகத்திலை தினமும் ஒரு வதந்தி பரவுது பாருங்கோ. ரெண்டு எழுத்தார் எங்கையெல்லாம் பாயக்கூடும் எண்டு சனம் நினைக்குதோ அங்கிருந்தெல்லாம் மூட்டை முடிச்சுகளோடு சனம் வெளியேறிக்கொண்டிருக்குதுகள். மோதல் முடிய சாதல் தங்களுக்குத்தானே எண்டு சனம் பயப்பிடுறதிலையும் நியாயம் இருக்குது தானே பாருங்கோ.

தாமரைப் பூவிலை தொடப்போய் தலை நகர மத நிறுவனம் ஒண்டு படாதபாடு படவேண்டிய நிலை வந்திட்டுது. சமாதான விஜயம் செய்த பிரபலமான வணக்கத்துக்குரியவர் கூட வருத்தப்பட வேண்டியதாய் போட்டுது. பிடிச்சது ஒரேயொரு கம்பியூட்டர் படம் தானாம். கட்டுக்கட்டாய் பிடிச்சது எண்டு கதை கட்டி விட்டதுதான் வணக்கத்துக்குரியவரின் வருத்தமாம். தலைநகரச் செய்திகளே இப்படி திரிபுபட்டால் பிறநகரச் செய்திகள் எப்படி வரும் எண்டு சொல்லத் தேவையில்லையல்லோ!

வடக்கிலிருந்து வெளியே வர சற்றே தளர்த்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் மீண்டும் இறுக்கப்பட்டிருக்கிறதாம். ஆள் தட்டுப்பாடுதான் பிரதான காரணம் எண்டு தகவல்.

வெளிநாட்டுக்குப் போறதெண்டா 'எல்லாம் சரியெண்டு' ஏஜென்சிமார் சொன்ன பிறகுதான் கொழும்புக்கு வரவேணுமாம். தலைநகர விடுதிகள் சிலவற்றில் போய் சீருடையினர் சொல்லியிருக்கினமாம். ஏஜென்சிமார் அடுத்தவாரம் எண்டு சொல்லுறது 'எந்த வருஷத்து அடுத்த வாரம்?' எண்டு தெரியாமல்தானே சனம் காயுது. அது தெரியாமல் சட்டம் போடக் கூடாதெல்லோ?

விலைவாசி இப்போது எந்த இடத்தில் குடியேறியிருக்கிறது எண்டு தெரியுமோ? கவிதையில் கண்டு பிடியுங்கள்-

"சீறி எழுந்த
செயற்கைக்கோள்
விண்ணைக் கிழித்து
விரைந்தபோது
விலைவாசிக்கு
வணக்கம் சொன்னது."

(கேசவ சேகர்)




படிப்பகம்

www.padippakam.com

# இரகசியமாக வந்த அமெரிக்க ஆயுதம்!

அற்புதன் ♣ ♠ எழுதுவது





ரஞ்சன் லாலா

# அரசியல் தொடர்

# கண்ணிவெடியில் சிக்கிய யாழ் தேவி!



## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## 38



### எதிர்பாராத திருப்பம்

ஒழுங்கை வழியாக திரும்பிவிட்டால் இராணுவத்தினரால் துரத்திச் செல்ல முடியாது என்று தெரிந்து கொண்டுதான் கிட்டு மோட்டார் சைக்கிளை திருப்பினார்.

எதிர்பார்த்தது போலவே இராணுவத்தினரால் உடனடியாகத் துரத்திச் சுட முடியவில்லை.

அப்போதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

ஒழுங்கை வேலியில் கட்டப்பட்டிருந்த மாடு ஒன்று தெருவைக் கடந்து எதிர்ப் பக்கமாக மேய்ந்து கொண்டிருந்தது.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கயிற்றில் சிக்கி வீதியில் புரண்டது.

விரைந்து வந்துகொண்டிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின.

கிட்டு எழுந்து அருகில் இருந்த வாழைத்தோட்டத்துக்குள் பாய்ந்து விட்டார்.

ரஞ்சன் லாலாவை துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துவிட்டன.

கிட்டுவைத் துரத்திய இராணுவத்தினர் பொழிந்த துப்பாக்கிக் குண்டுகள் வாழைகளை முறித்து வீழ்த்தின.

கிட்டு தப்பிச் சென்று விட்டார்.

ரஞ்சன் லாலா மரணமானார்.

இச்சம்பவம் நடைபெற்ற திகதி 13.07.1984. 1984ல் புலிகளுக்கு ஏற்பட்ட மிகப் பாரிய இழப்பு அது.

ரஞ்சன் லாலா என்பது இயக்கப் பெயர். க.ஞானேந்திரமோகன் என்பது தான் சொந்தப் பெயர். பருத்தித்துறைதான் சொந்த ஊர். வயது 23.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற புலிகளது கெரில்லாத் தாக்குதல்கள் அனைத்திலும் பலியாகும்வரை பங்குகொண்டவர் ரஞ்சன்லாலா என்பது குறிப்பிடத்தக்கது.

### சயனைட் விபரீதம்

இந்தச் சம்பவம் பற்றி ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும்.

இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டபோது கிட்டுவிடம் சயனைட் குப்பி இருந்தது.

அதனை தொய்வு மருந்து என்று கூறி இராணுவத்தினரை கிட்டு ஏமாற்றிவிட்டார். கிட்டு நினைத்திருந்தால் 'சயனைட்' அடித்திருக்கலாம் ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை.

இதேபோல மற்றொரு சம்பவம் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகே நடந்தது.

அப்போது குருநகரில் இருந்த இராணுவத்தினர் அடிக்கடி வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு.

புலிகள் அமைப்பைச் சேர்ந்த வாசன், சின்னக் கண்ணாடி அல்லது அலெக்ஸ் ஆகிய இருவரும் கொய்யாத் தோட்டம் வீதி வழியாக வந்து கொண்டிருந்தனர்.

இராணுவத்தினரின் சந்தேகப் பார்வை அவர்கள்மீது விழுந்தது.

இருவரையும் அழைத்து வீதியில் வைத்து விசாரிக்க இராணுவத்தினர் முற்பட்டபோது, வாசன் சயனைட் அடித்துவிட்டார். அவரைப்பார்த்து அலெக்சும சயனைட் அடித்தார்.

இருவரும் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

18.7.84 அன்று இந்தச் சம்பவம் நடந்தது.

வாசனின் சொந்தப் பெயர்: ஜயம்பிள்ளை மணிவாசகன். (வயது 23) சொந்த ஊர்: நெடுந்தீவு. சின்னக் கண்ணாடி அல்லது அலெக்ஸின் சொந்தப் பெயர்: வேதரத்தினம் மொரிஸ். சொந்த இடம்: கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

### வெளிநாட்டுப் பிரசாரம்

1984 இல் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் பலர் 'ஈழவிடுதலை' அவசியம் என்பதை வலியுறுத்திப் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தனர்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களால் நடத்தப்படும் பிரசாரங்கள் இலங்கையில் உள்ள போராளி அமைப்புக்களால் பிரபலப்படுத்தப்பட்டும் வந்தன.

உலக ஆதரவைத் திரட்டும் முயற்சிகளும் நடக்கின்றன என்ற செய்தியைத் தெரிவிப்பதே அதன் நோக்கமாகும்.

84 இல் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க்கில் உலகத் தமிழீழ மாநாடு ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டது.

இதன் பின்னணியில் இருந்தவர் டாக்டர் பஞ்சாட்சரம்.

டாக்டர் பஞ்சாட்சரம் தொடர்பாக தமிழ் அமைப்புக்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. யின் ஆளாக அவர் இருக்கக்கூடும் என்பதுதான் சந்தேகம்.

இதனால் பஞ்சாட்சரம் கூட்டும் மாநாட்டில் கலந்து கொள்ள தமிழ் அமைப்புக்கள் மறுத்துவிட்டன.

புலிகள் அமைப்பை எப்படியாவது மாநாட்டில் கலந்துகொள்ள வைக்க பலத்த முயற்சி நடந்து வந்தது.

இதற்கிடையே டாக்டர் பஞ்சாட்சரம் தமது நியூயோர்க் மாநாடு ஏன் கூட்டப்படுகிறது என்பதை விளக்கியிருந்தார்.

விடுதலை இயக்கங்களை ஒன்றிணைத்து ஒரு தேசிய அரசியல் இராணுவத் தலைமையை உருவாக்குவதும் தமது நோக்கங்களில் ஒன்று என அவர் தெரிவித்திருந்தார்.

இது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

அமெரிக்காவின் கரங்களுக்குள் போராளி அமைப்புக்களை கொண்டுசெல்ல பஞ்சாட்சரம் திட்டம் போடுவதாகக் கருதப்பட்டது.

சென்னையில் தங்கியிருந்த தமிழ் இயக்கத் தலைவர்கள் நியூயோர்க் மாநாட்டில் கலந்து கொள்ள தமது பிரதிநிதிகளை அனுப்ப மறுத்துவிட்டனர்.

### பிரபாவின் கடிதம்

டாக்டர் பஞ்சாட்சரத்துக்கும் புலிகளுக்குமிடையே தொடர்பு இருப்பதாகவும் ஒரு சந்தேகம் கிளப்பப்பட்டது.

இதனையடுத்து புலிகளின் தலைவர் பிரபாகரனால் டாக்டர் பஞ்சாட்சரத்துக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

கடிதத்தின் ஒரு பகுதி இது:

"விடுதலை இயக்கங்களை ஒன்றிணைத்து ஒரு தேசிய அரசியல் இராணுவத் தலைமையை உருவாக்குவது மாநாட்டின் நோக்கங்களில் ஒன்று என்பதாகத் தெரிகிறது. இவ்வித ஒற்றுமை முயற்சிகளை நான் வரவேற்கிறேன். எனினும் இந்த முயற்சிகள் தமிழீழத்தில் மேற்கொள்ளப்படுவதையே நான் விரும்புகிறேன்.

அந்நியநாடு ஒன்றில், அதுவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைநகரில், சி.ஐ.ஏ. உளவு ஸ்தாபனத்தின் சிலந்தி வலைக்குள் இருந்து எமது போர் முறைத் திட்டங்கள் பற்றிப் பேசுவதற்கு நாம் தயாராக இல்லை.

விடுதலை இயக்கங்கள் மத்தியில் 'சோசலிசத் தமிழீழம்' என்ற இலட்சியத்தில் ஒருமைப்பாடு உண்டு என்பது நீங்கள் அறியாததல்ல.

எனினும், இந்த இலட்சியத்தை அடைவதற்கான போருபாயங்கள், போர் முறைத் திட்டங்கள் போன்றவற்றில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

இது மிகவும் சிக்கலான விவகாரம். போர் நுட்பமும், போர் அனுபவமும் சார்ந்த விசயம். இயக்கத் தலைமைகள் மிகவும் இரகசியமாக, பரஸ்பர நம்பிக்கையுடன் பரிமாறிக் கொள்ள வேண்டியது.

இவற்றை எல்லாம் சர்வதேச மாநாடுகளில், அதுவும் அமெரிக்காவின் திறந்த அரங்குகளில் விவாதிக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதாயின் மிகவும் கட்டுப்பாடுடைய தேசிய இராணுவ அமைப்பொன்றை முதலில் கட்டி எழுப்ப வேண்டும். இதனையே நாம் இன்று செயற்படுத்தி வருகிறோம்.

ஏனைய விடுதலை அணிகளும் எம்மோடு இணைந்து செயற்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை. போராட்ட சூழ்நிலைகள் இந்த ஒற்றுமையைப் பிறப்பிக்கும்."



தாக்கப்பட்ட நிலையில் புகைவண்டிப் பெட்டிகள்

என்று தெரிவித்திருந்தார் பிரபாகரன்.

இக் கடிதம் 19.05.84 என்று தேதியிடப்பட்டு டாக்டர் பஞ்சாட்சரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### உறவுகளில் போட்டி

வெளிநாடுகளில் இருந்த விடுதலை அமைப்புக்களோடும் தமிழ் இயக்கங்களின் வெளிநாட்டுக்கிளைகள் தொடர்புகளை பேணி வந்தன.

இதில் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இரண்டும் முன்னணியில் இருந்தன.

1984ன் இறுதியில் சென்னையிலிருந்த சோவியத் யூனியன் தூதுவராலயத்தோடு தொடர்புகளை ஏற்படுத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் முற்பட்டது.

1980களில் வெளிநாட்டு விடுதலை இயக்கங்கள் புலிகள் அமைப்பை விட ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், புளொட் அமைப்புகளுடன் தான் பரிச்சயமாக இருந்தன.

வெளிநாட்டு விடுதலை இயக்கங்களிடம் தம்மை முற்போக்கு அமைப்புக்களாகக் காட்டிக் கொள்வதில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட் அமைப்புக்களிடையே கடும் போட்டி நிலவியது.

### அமெரிக்காவின் தந்திரம்

1984ல் இலங்கை அரசுக்கு அமெரிக்கா வழங்கிய ஆயுத உதவி அம்பலத்திற்கு வந்தது.

இதற்கு முன்னர் ஜே.ஆர்.ஜயவர்த்தனா அமெரிக்காவோடு இரகசிய ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளார். அந்த ஒப்பந்தப்படி அமெரிக்கா வழங்கும ஆயுத உதவிக்குப் பதிலாக திருக்கோணமலை துறைமுகத்தை அமெரிக்க தளமாக மாற்ற இசைந்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனை ஜே.ஆர். ஜயவர்த்தனா வன்மையாக மறுத்திருந்தார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி அமெரிக்க தலைநகரான வொஷிங்டனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

100 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதம் பெறுவதற்காகவே அவர் சென்றிருந்தார். ஆனால் முயற்சி பயனளிக்கவில்லை என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இதே காலகட்டத்தில் அமைச்சர் ஹமீத், பிரதமர் பிரேமதாசா ஆகியோரும் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்தனர்.

அமைச்சர் ஹமீத்தும், லலித் அத்துலத் முதலியும் ஒன்றாக லண்டனில் தங்கியிருந்தனர். இவ்வாறான நடவடிக்கைகள் ஆயுத உதவி பெறும் இரகசிய பேச்சுக்கள் நடப்பதாக சந்தேகத்தை ஏற்படுத்தின.

வியட்நாம் யுத்தத்தின் பின்னர் அமெரிக்கா எந்தவொரு நாட்டுக்கும் நேரடியாக ஆயுதங்களை விநியோகிக்காமல் இருந்தது.

தனது ஆயுதக் கிடங்குகளை வேறு நாடுகளில் வைத்திருந்து, அங்கிருந்தே ஆயுதங்களை விநியோகித்து வந்தது அமெரிக்கா.

உதாரணமாக, அங்கோலா சோசலிச அரசுக்கு எதிராகப் போராடிய கிளர்ச்சியாளருக்கு போர்த்துக்கல்லிலிருந்த தனது ஆயுதக்கிடங்கில் இருந்தே அமெரிக்கா ஆயுதங்களை விநியோகித்துக்கொண்டிருந்தது.

### அம்பலமானது எப்படி?

இலங்கை அரசுக்கும் போர்த்துக்கல்லிலிருந்த தனது ஆயுதக் கிடங்கு மூலமாகவே ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முன்வந்தது.

போர்த்துக்கல்லிலிருந்து ஆயுதங்களை ஏற்றிவர சயர் நாட்டு விமானம் பயன்படுத்தப்பட்டது. சயர் நாடு அமெரிக்காவின் நட்பு நாடாகும்.

சயர் நாட்டு சரக்கு விமானமான டி.சி.8 என்ற விமானம் 16.000 கிலோ கிராம் எடையுள்ள ஆயுதத் தளபாடங்களோடு பேர்த்துக்கல் நாட்டிலிருந்து புறப்பட்டது.

போத்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் இருந்து புறப்பட்டு, இஸ்ரேலின் தலைநகரான டெல் அவிவ் விமான நிலையத்திலும், ஓமானில் மஸ்கற் விமான நிலையத்திலும் எரிபொருட்களை நிரப்பிக் கொண்டு நேராக கொழும்பு வருவதுதான் டி.சி.8 விமானத்தின் பயணத் திட்டமாகும்.

விமானத்தின் கொள் அளவைவிட அது சுமந்து வந்த எடை அதிகமாக இருந்தமையால் எரிபொருள் தீர்ந்துவிட்டது.

அதனால், வேறுவழியின்றி இந்தியாவில் கேரளமாநில தலைநகரான திருவனந்தபுரம் விமான நிலையத்தில் டி.சி.8 விமானம் இறக்கப்பட்டது.

எதிர்பாராத இந்த நிகழ்வால், சயர் நாட்டு விமானத்தின் ஆயுதக் கடத்தல் விவகாரத்தை இந்தியா அறிந்து கொண்டது; விசயமும் அம்பலமானது.

ஆயுதங்களோடு வரும் விமானங்கள் இந்தியா தவிர்ந்த வேறு நாடுகளில் தரித்து வருவதற்கான அனுமதி பெறுவதே இலங்கை அமைச்சர்கள் பாங்கொக், சிங்கப்பூர் போன்ற நகரங்களுக்கு விஜயம் செய்ததின் இரகசியம் என்று இதன் பின்னர் பேசப்பட்டது.

### சொன்னதும்–செய்ததும்

இதேவேளை, பிரிட்டிஷ் அரசு இலங்கையில் தமிழர்களது பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்; மனித உரிமைகள் மீறப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கூறியது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி பிரிட்டனுக்கு சென்றிருந்தார். அவரது விஜயம் பற்றி பிரிட்டிஷ் அரசு பின்வருமாறு சொன்னது:

"தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று சிறீலங்கா தேசிய பாதுகாப்பு மந்திரியிடம் கூறப்பட்டிருக்கிறது."

இந்தச் செய்திகள் இலங்கை பத்திரிகைகளிலும் வெளிவந்து கொண்டிருந்தபோது–

அதே பிரிட்டிஷ் அரசு 10 நவீன போர்ப் படகுகள், இயந்திரத் துப்பாக்கிகள் என்பவற்றை இலங்கை அரசுக்கு தருவதாக ஒப்புக்கொண்டது.

"மின்னுவதெல்லாம் பொன்னல்ல," அது போல, நாடுகளுக்கிடையேயான உறவுகளில் வெளியே சொல்லப்படும் செய்திகள் யாவும் மெய்யல்ல.

கூட்டுச் சேரா நாடுகள் அமைப்பில் இலங்கையும் ஓரங்கம்.

தென்னாபிரிக்காவோடு ஒட்டுமில்லை, உறவுமில்லை என்பது கூட்டுச் சேரா நாடுகளது கொள்கை.

ஆனால், ஜே.ஆர். அரசுக்கு, 84ம் ஆண்டு ஏழாம் மாதத்தில் தென்னாபிரிக்காவிலிருந்து ஆயுதம் வந்தது. அதைக் கொண்டு வந்ததும் சயர் நாட்டு டி.சி.8 விமானம்தான்.

இதே சமயம் தென்னாபிரிக்க ஜனாதிபதி பீட்டர் போத்தா இலண்டனுக்கு விஜயம் செய்தபோது ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் புலிகளது இலண்டன் கிளையும் கலந்து கொண்டது. எதிரிக்கு எதிரி நண்பன்தானே!

### யாழ்தேவிக்கு குறி.

1985ம் ஆண்டில் இராணுவ நடவடிக்கையை போராளி இயக்கங்கள் தரப்பிலிருந்து முதலில் ஆரம்பித்து வைத்தது ரெலோ இயக்கம்.

09.01.85 அன்று யாழ்தேவி புகையிரதம் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினரை சுமந்து கொண்டு சென்றது.

பழைய முறிகண்டி என்னுமிடத்தில் கண்ணிவெடிகளை வைத்துவிட்டுக் காத்திருந்தனர் போராளிகள்.

12 பெட்டிகளோடு வந்த யாழ்தேவி கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியது.

நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள்.

இரவு 08.30 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதல் அதுவரை நடந்த கெரில்லாத் தாக்குதல்களில் பாரியதாகும்.

புகைவண்டிப் பாதையில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதும் அதுவே முதல் முறையாகும்.

இத்தாக்குதலில் முன்னின்று செயற்பட்டு வெற்றிக்கு காரணமாக இருந்தவர் தாஸ்.

### உட்கொலை

பருத்தித்துறையைச் சேர்ந்த தாஸ் ரெலோ அமைப்பின் இராணுவ நடவடிக்கைகளுக்கு வடக்கில் முக்கிய பொறுப்பாளராக இருந்தவர்.

இவர் பின்னர் ரெலோ இயக்க உள் முரண்பாடு காரணமாக யாழ் பொது மருத்துவமனையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

ரெலோ தலைவர் சிறி சபாரத்தினத்தின் உத்தரவின் படி, பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்து, தாஸும் அவரது விசுவாசிகள் சிலரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். தாஸின் கொலையோடு ரெலோவின் இராணுவ நடவடிக்கைகள் வேகம் குன்றியமையும் குறிப்பிடத்தக்கது. இதுபற்றி பின்னர் ஒரு சமயத்தில் விளக்கமாக கூறுவேன்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# அரசின் தீர்வுத்திட்டம்

அலசுவது—இராஜதந்திரி

# இனப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாகுமா?

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை சந்திரிகா ஆட்சியாளர்கள் தயாரித்து வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்வுத் திட்டம் பற்றி ஆங்காங்கே சில விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. லிபரல் கட்சித் தலைவர் டாக்டர் சானக்க அமரதுங்க வெளியிட்டுள்ள கருத்தில், அரசின் தீர்வுத் திட்டம் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இனப்பிரச்னை தொடர்பாக வைக்கப்படக்கூடிய ஒரு சிறந்த தீர்வுத்திட்டமாக அமையுமென்று தெரிவித்துள்ளார்.

இது தவிர தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்களும் அரசின் தீர்வுத் திட்டத்தை பெருமளவு எதிர்பார்ப்புகளுடன் நோக்குவதாக கூறியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் சிரேஷ்ட தமிழ் அரசியல் பிரமுகருமான திரு.மு.சிவசிதம்பரம் தீர்வுத் திட்டம் பற்றிக் கருத்து வெளியிடுகையில், "எத்தகைய நல்ல அம்சங்களை அரசின் தீர்வுத் திட்டம் உள்ளடக்கியிருந்தாலும் பல தடைகளைத் தாண்டியே அத்திட்டம் நடைமுறைக்கு வரவேண்டியுள்ளது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகளால் அத்திட்டம் முதலில் நிறைவேற்றப்பட வேண்டும். இதன் பின்னர் நாட்டு மக்களின் முன்பாக அத்தீர்வுத்திட்டம் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். இவற்றையெல்லாம் கடந்த பின்னரே அத் தீர்வுத்திட்டம் எவ்வளவு தூரம் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஏற்புடையதாகும் என அறிந்து கொள்ள முடியும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இன்று வடக்கு-கிழக்குப் பிரச்னை ஒரு பூதாகாரமான நிலையை எட்டியுள்ளது. வடக்கு-கிழக்குப் பிரச்னை என்பது இன்று அப்பிரதேசங்களுக்குள் மட்டும் முடங்கியிருக்கவில்லை. அப்பிரச்னையின் தாக்கம் நாடு தழுவியதாகவும், பிராந்திய ரீதியாகக்கூடப் பாதிப்புக்களை ஏற்படுத்தியதாகவும், சர்வதேச சமூகத்தின் கவனத்தைப் பெற்றதாகவும் இருக்கின்றது.

இந்நிலையில் இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்களால் முன்வைக்கப்படவிருக்கும் தீர்வுத்திட்டம் என்பது வடக்கு-கிழக்கின் அனைத்துத் தரப்பு அரசியல் சக்திகளையும் திருப்திப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகின்றது.

அடுத்த கட்டமாக நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகின்றது. இதுதவிர இன்றைய பூலோக ரீதியான சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்களைக் கருத்தில்கொண்டதாகவும் இலங்கை அரசின் தீர்வுத்திட்டம் உலக சமூகத்தின் முன்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

எனவே, இலங்கையில் அனைத்துத் தரப்பு மக்களையும் மட்டுமல்லாது சர்வதேச சமூகத்தினையும் கவனத்தில் கொண்டதாகவே சந்திரிகா அரசின் தீர்வுத் திட்டம் அமைந்திருக்க வேண்டும்.

ஏனெனில் இலங்கையின் இன்றைய இனப்பிரச்னை சர்வதேச சமூகத்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் இலங்கை இனப்பிரச்னை பெரும்பாலும் இலங்கையின் ஓர் அரசியல் பிரச்னையாக மட்டுமே இருந்து வந்தது. சிங்கள, தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தைக் களமாகக் கொண்டு இனப்பிரச்னை தொடர்பான கருத்து மோதல்களில் குதித்திருந்தனர்.

தமிழ் அரசியலாளர்கள் அன்றைய ஆட்சியாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு நேர்மையான உடன்பாடுகளை எட்டுவதற்கு தமது ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தார்கள்.

இருந்தபோதிலும் பேரினவாத சக்திகள் அவ்வப்போது தமது கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. 1958ம் ஆண்டு தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் இனக்கலவரம் பூதாகாரமாக வெடித்தது.

இதன்பின்னரே தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில், தாம் பாதுகாப்பற்றவர்கள் என்ற உணர்வைக் கொண்டிருக்க ஆரம்பித்ததுடன், விதம் விதமான கோணங்களில் பல்வே'று வடிவங்களையும் பெ'ற்ற இனவாத விஷமத்தனங்கள், அடாவடித்தனங்களுக்கு முகங்கொடுக்கலானார்கள்.

இந்நாட்டில் சிங்களம் மட்டுமே அரச மொழி; பௌத்தமதமே அரச மதம் என்று ஆரம்பித்த இனவாதம் காலப்போக்கில் சிறுபான்மை இனமக்களின்- குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் உரிமைகள், கல்வி, வேலைவாய்ப்புக்கள், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றிலும் ஊடுருவ ஆரம்பித்தது.



யாழ்-சென்ஜோன்ஸ் மைதானத்தில்—ஹெலி மூலம் செல்லும் தூதுக்குழுவை எதிர்பார்த்து வரவேற்க காத்திருந்த புலிகள். தற்காலிகமாக மாறிய நட்பு.

இந்நிலையிலேயே தமிழ்த்தலைவர்கள், தமிழ் மக்களின் தனித்துவம், சுய கௌரவம், மற்றும் பிரதேச பாரம்பரியம் என்பவற்றைப் பாதுகாக்கும் வகையில் குரல் எழுப்ப ஆரம்பித்தனர்.

தமிழ் அரசியல் தலைவர்களின் ஆரம்பக்கோரிக்கைகள் தகுந்த வகையில் அன்று அணுகப்பட்டிருக்குமேயானால் இன்றைய சந்ததியினர் இரத்தவெறி பிடித்த மோதல்களில் ஈடுபடும் சூழ்நிலைகள் தோன்றியிருக்க மாட்டாது.

மிகவும் அமைதியாகவும், அரசியல் சாணக்கியத்துடனுமே தமிழ்த் தலைவர்கள், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து உரிமைகளையும் பெற்றவர்களாக பாதுகாப்புடனும் சுயகௌரவத்துடனும் வாழவேண்டுமென்பதே தமிழ் மக்களின் ஆரம்பகால எதிர்பார்ப்பாக இருந்தது. அன்று அவர்கள் பிரிவினை பற்றியோ அல்லது தீவிரவாதப்போக்குடனோ நடந்துகொண்டிருக்கவில்லை.

ஆனால், சுதந்திர இலங்கையில் காலத்துக்குக்காலம் ஆட்சிக்குவந்தவர்கள் தமது அரசியலுக்கு இனவாதத்தையே தொனிப்பொருளாகக் கொண்டனர்.

இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்கள மக்களின் ஆதரவுடன் மட்டுமே நாட்டைப் பரிபாலிக்கவும் அம்மக்களின் ஆட்சியுரிமையை மேலும் பலப்படுத்துவதன் மூலம் தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றலாம் என்பதே இந்நாட்டின் முக்கிய தேசியக் கட்சிகளின் நோக்கமாக இருந்தது.

ஆனால், தமிழ் அரசியலாளர்களின் கண்களில் மண்ணைத் தூவும் நடவடிக்கைகளே பேரினவாத சக்திகளால் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் ஏற்கப்பட்டபோதிலும் கூட அவற்றைக் கிழித்தெறிந்து 'இனவாதத்தீயை' பேரினவாத சக்திகள் கொளுந்துவிட்டெரியச் செய்தன.

ஆனால், இன்று நிலைமை மோசமாகிவிட்டுள்ளது. எதுவுமறியாத அப்பாவிச் சிங்கள-தமிழ் மக்களை மோதச் செய்யும் வகையில் தூண்டிவிடப்பட்ட இனவாதம், இன்று முழு இலங்கைக்குமே நாசத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

## எல்.ரி.ரி.ஈயினரின் நிலைப்பாடும் அறியப்படவேண்டியது அவசியம்!

சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் முது பெரும் தமிழ்த் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் பாராளுமன்றில் இப்படி உரை நிகழ்த்தியிருந்தார்:

"தமிழர்கள் சமஷ்டி முறையில் நியாயமான கோரிக்கையை முன்வைக்கிறார்கள். இக் கோரிக்கையை ஆட்சியாளர்கள் ஏற்று தகுந்த அரசியல் தீர்வை முன்வைக்கத்தவறினால், எதிர்காலத்தில் இந்நாட்டில் பிரிவினைக்கான ஒரு போராட்டத்தை சந்திக்க நேரிடும்" என்று தீர்க்கதரிசனத்துடன் கூறியிருந்தார்.

சமஷ்டி அடிப் படையிலேயே தீர்வு; அதிகாரப்பரவலாக்கம் என்று இன்று பல்வேறு கருத்துக்கண்ணோட்டங்களும் அரசின் உத்தேச தீர்வுத்திட்டம் பற்றிப் பேசப்படுகின்றது.

ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வுதான் சிறந்ததொன்றாகும் என்று மூத்த தமிழ் அரசியல் தலைவர்கள் மூன்று தசாப்தங்களுக்கு முன்னரேயே தெரிவித்திருந்தனர்.

இன்றைய ஆட்சியாளர்கள் சமஷ்டி என்ற அடிப்படையில் தமது தீர்வுத்திட்டத்தை வெளிப்படையாகவும், நேரடியாகவும் அறிவிப்பார்களா? என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது.

அத்துடன் அரசின் உத்தேச தீர்வுத்திட்டம் இன்றைய சந்ததி தமிழ் அரசியல்வாதிகளால் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது கேள்விக்குரியதாக இருக்கின்றது.

மூத்த தமிழ்த்தலைவர்கள் மிதவாதப் போக்குடன் ஜனநாயக வழிநின்று முன்வைத்த சமஷ்டி அடிப்படையிலான தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையையே, இன்றைய சந்ததி தமிழ் அரசியலாளர்களும் வலியுறுத்தி நிற்கக் காணப்படுகின்றனர்.

இன்றைய தமிழ் அரசியல் சந்ததியினரின் நிலைப்பாடு என்பது பெரும்பாலும் தீவிரவாதப் பின்னணியைக் கொண்டதாக இருக்கின்றது.

இனவாதத்தீயின் கொடுமையை நன்குணர்ந்தவர்களாக, அனுபவித்தவர்களாக இன்றைய சந்ததியினர் காணப்படுகின்றனர். அத்துடன் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள், பாதுகாப்பு சுய கௌரவத்துக்காக ஆயுதமேந்திப் போராடியவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக இன்றைய சந்ததித் தமிழ் தீவிரவாதத் தலைவர்கள் தமிழ் மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்திய போராட்டமே இன்று இலங்கைப்பிரச்னையை உலகறியச் செய்வதாக இருக்கின்றது.



எனவே சந்திரிகா ஆட்சியாளர்கள் இனப் பிரச்னையை தீர்ப்பதற்கான தமது தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வந்திருப்பது வரவேற்புக்குரியதே.

ஆனால், அத்தீர்வுத்திட்டம் எதிர்கால நலன்களை கருத்திற் கொள்ளும் அதே சமயம், கடந்த கால அனுபவங்களையும் கருத்திலெடுத்ததாகவே அமைந்திருக்க வேண்டும்.

இனப்பிரச்னைத் தீர்வுக்கென மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், தீர்வுத்திட்டங்கள் என்பன கடந்தகாலங்களில் ஏன் முறிவடைந்தன? எத்தகைய காரணிகள் அவற்றில் தோல்விக்குடந்தையாக இருந்தன என்பதை அறியப்பட்டிருத்தல் வேண்டும்.

இதன்மூலமே குறைபாடுகள் கண்டறிந்து ஆக்கபூர்வமான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கமுடியும்.

வடக்கு-கிழக்கு இணைப்பு, தாயகக் கோட்பாடு என்பவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டம் ஏற்படுவதையே வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## மூத்த தமிழ் தலைவர்கள் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு வலியுறுத்திய சமஷ்டி கோரிக்கை!

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளில் வடக்கு-கிழக்கின் பலம்மிக்க ஆயுதப்போராட்ட அமைப்பாகவிருந்து வரும் எல்.ரி.ரி.ஈயினர் மிகத் தீவிரமாகவே இருந்து வருகின்றனர்.

எல்.ரி.ரி.ஈயினரின் பலத்தை உணர்ந்த நிலையில் எந்தவொரு அரசியல்தீர்வும் அவர்களைத் திருப்திப்படுத்துவதாக அமையவேண்டுமென்பது ஜனாதிபதி சந்திரிகா கூட தாம் பதவிக்கு வந்ததும் வழங்கிய பல்வேறு பேட்டிகளிலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இன்று எல்.ரி.ரி.ஈயினருக்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்குமிடையிலான உறவில் பலத்த விரிசல் ஏற்பட்டுள்ளது.

எல்.ரி.ரி.ஈயினர் ஒரு பலம் மிக்க அமைப்பினர் என்பதை சந்திரிகா எதிர்க்கட்சியில் இருந்தபோது நன்குணர்ந்திருந்தார்.

தற்போது ஆட்சிபீடத்தில் இருக்கும் தறுவாயில் எல்.ரி.ரி.ஈயினரின் பலம் கடந்த சில மாத யுத்த நிலவரம் மூலம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில் தாம் முன்பு குறிப்பிட்டதுபோல எல்.ரி.ரி.ஈயினரைத் திருப்திப்படுத்த தீர்வுத்திட்டத்தை வடக்கு-கிழக்கில் நடைமுறைப்படுத்த முனைவது கடினமான காரியம் என்பதை ஜனாதிபதி சந்திரிகா அறிய வேண்டியவராகின்றார்.

இலங்கையின் அரசியல் அவதானிகள் சிலர் கூட ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் தீர்வுத்திட்டம் எல்.ரி.ரி.ஈயினரைத் திருப்திப்படுத்துமா? என்று தெரிவித்துள்ளனர்.

ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வுத்திட்டத்தை வெறுமனே வெளியிடுவதன் மூலம் இனப்பிரச்னை தீர்ந்துவிடப்போவதில்லை.

நாடுதழுவிய ரீதியில் எல்.ரி.ரி.ஈயினர் உட்பட அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அம்சங்கள் இடம்பெறும் பட்சத்திலேயே அத்தீர்வுத் திட்டம் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்க முடியும்.

எனவே அத்தகையதொரு உன்னதமான தீர்வுத் திட்டமாக அரசின் தீர்வுத் திட்டம் அமையுமா? அதனை முழுநாடுமே ஏற்றுக் கொள்ளும் சாதகமான சூழ்நிலைகள் ஏற்படுமா? என்பது பற்றி எதனையும் அவசரப்பட்டு கூறமுடியாதுள்ளது.



# தருவது - ரசிகன் (2)

ஜிகாத்-புனித யுத்தம்.
அபு-ஜிகாத்-புனிதயுத்தத்தின் தந்தை.
அபு ஜிகாத் என்று அழைக்கப்பட்டவர் கலீல் அல்-வாஸீர். அவரது போர்க்குணமிக்க வாழ்க்கையில் ஒரு துளி இக் கதை.....

# ஜிகாத் ஜிகாத் அபு ஜிகாத்

அரபாத்..., யாசிர் அரபாத்!

அல்-வாஸீர் திரும்பி தனது நண்பரை நோக்கினார்.

"தெரியுமல்லவா?"

"தெரியும்!"

என்றார், தனது விழிகளால் அரபாத்தை வியந்து கொண்டே, நண்பர்.

தனது நண்பரை அரபாத்திடம் அறிமுகம் செய்து வைத்தார் அல்-வாஸீர். மூவரும் அமர்ந்தார்கள்

"அல்-ஃபட்டாவின் இராணுவப் பிரிவில் அல்-வாஸீர்தான் முக்கிய தூண்."

சொன்னவர் குரலில் கோபமிருந்தது. சொன்னவர் முகத்தில் சிறு கோடு கீறியது

அல்-வாஸீர் யாரை அறிமுகப்படுத்தப் போகிறார்?

வருபவர் 'முக்கியமானவர்' என்பதை அல்-வாஸீர் சொன்னதிலிருந்து நண்பர் புரிந்து கொண்டார்.

அதனால் எதிர்பார்ப்பு அதிகமானது. வெளியே காலடிச் சத்தம்.

கதவு திறந்தது.

அல்-வாஸீர் எழுந்து சென்று உள்ளே வந்தவரை கட்டியணைத்துக் கொண்டார்.

நண்பருக்கு ஒரே ஆச்சரியம். 'இவரா...? இருவரும் இணைந்து செயற்பட்டால் இனி இஸ்ரேலியர்களுக்கு நித்திரை கொள்ளவே நேரமிருக்கப்போவதில்லை'

என்று நினைத்தார் நண்பர்.

நினைக்கப்படக் காரணமானவர்- அல்-வாஸீர். காத்திருந்து சந்தித்தவர்-

போல் மீசை இருந்தது. மேலே நீண்ட மூக்கு. அதற்கும் மேலே சின்னக் கண்கள். கறுப்பு நிறத்தில் கோட் சூட் அணிந்திருந்தார். வட்டமாயிருந்த பெரிய மேசைமுன்பாக அவருக்கு அருகிலும், எதிரிலும் இஸ்ரேலின் முக்கிய அதிகாரிகள் அமர்ந்திருந்தனர்.

இரகசியக் கூட்டம். இஸ்ரேலிய உளவுப் பிரிவான 'மொசாட்' உயரதிகாரிகள்தான் அங்கு கூடியிருந்தனர் என்பது ஒன்றே போதும்- அது எத்தனை இரகசியமான கூட்டம் என்பதை ஊகிப்பதற்கு.

"சுவர்களுக்கும் செவியிருக்கும். மெல்லப் பேசு! நீ பேசும் ஒவ்வொரு விடயமும் எதிரியை வெல்லப் பேசுகிறாய் என்பது நினைவில் இருக்கிறதல்லவா? அதனால் உன் ஒரு சொல் கூட எதிரியின் செவிக்கு எட்டிவிடக்கூடாது."

இதெல்லாம் உளவுக் கலையில் வித்தை காட்ட கற்றுத்தரும்போது சொல்லிக் கொடுக்கப்படுவது.

'மொசாட்' அதிகாரிகள் தாழ்ந்த குரலில் தான் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

"அதாவது- அரபாத்தும், அல்-வாஸீரும் கைகுலுக்கிக் கொண்டார்கள். இருவருமே பயங்கரமான பயங்கரவாதிகள்!"

சற்றே குள்ளமாக இருந்த அதிகாரி மேசையின் மத்திவரை ஒட்டகம் போல் கழுத்தை நீட்டிக்கொண்டு,

"இனிமேல்தான் விழிப்புத் தேவை. ஊடுருவித் தாக்கும் திட்டங்களை அல்-வாஸீர் தனது மூளையில் உற்பத்தி செய்து கொண்டிருப்பதாகத் தகவல்!"

"ஓஹோ....இலக்குகள்?"

தனது சக அதிகாரியின் கேள்வியை காதில் வாங்கியபடி குள்ள அதிகாரி தனது கைக்கடிகாரத்தில் ஒரு பட்டனைத் தட்டினார்.

கடிகாரத்தில் இருந்த திரையில் சங்கேத வார்த்தைகளில் சில தகவல்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

மீண்டும் பட்டனைத் தட்டினார். நிமிர்ந்து சக அதிகாரிகளை நோக்க, அவர்கள்



அவரையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"முதல் இலக்கு முக்கியமான இராணுவ அதிகாரிகள்: அத்தோடு நாங்களும்!"

வழுக்கைத் தலையரான ஒரு அதிகாரி தனது முரட்டுத்தனமான குரலில், "அல்-வாஸீருக்கு அந்தச் சந்தர்ப்பமே இல்லாமல் செய்து விட்டால்....? இதுவரை திரட்டிய தகவல்களின்படி பார்த்தால், அல்-வாஸீருக்கு பாதுகாப்பு அதிகமில்லை என்று தெரிகிறது"

சக அதிகாரிகள் ஆச்சரியமான குரலில்,

"அப்படியா?"

"ஆம் அப்படித்தான்! எனது பாதுகாப்பைவிட பாலஸ்தீனத்தின் விடுதலைதான் எனக்கு முக்கியமாகப்படுகிறது. ஒரு அல்-வாஸீர் இறந்துபோனால் இன்னும் நூறு அல்-வாஸீர்கள் எழுந்து வருவார்கள். ஆனால் நமக்கென்று இருப்பதோ ஒரு பாலஸ்தீனம். அதனை இழந்தோம் என்பது தற்காலிகம். நிரந்தரமாய் இழந்தோமானால் இன்னொரு பாலஸ்தீனத்திற்கு நாம் எங்கே போவோம்?"

அல்-வாஸீரின் குரலில் உணர்ச்சி பூத்திருந்தது. அவர் சொன்னதை வாங்கிய அல்-ஃபட்டா இயக்கத்தின் செயற்குழுவுக்கு அவர் கூறியது சரியாகப்படவில்லை.

செயற்குழு உறுப்பினர் ஒருவர் தன் கருத்தைச் சொன்னார்:

"உங்கள் உணர்ச்சியை நாமும் பகிர்ந்து கொள்கிறோம்- புரிந்துகொள்கிறோம். ஆனாலும் உங்களை இழக்க நாங்கள் தயாராக இல்லை. நீங்கள் பாலஸ்தீனத்தின் சொத்து."

அல்-வாஸீர் தனது வழக்கமான புன்னகையோடு-

"நான் அழிக்கப்படலாம். நம்மை அழிக்க முடியாது!"

"ஏன் அழிக்க முடியாது?"

என்று கேட்டார் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர்.

"ஜோர்தானில் இருந்து அல்-வாஸீர் வெளியேற்றப்பட்டு விட்டார்"

"தெரியும். தங்கியிருக்க ஒரு தளம் இல்லாமல் நாடோடியாகத் திரியும் எதிரியை நசுக்குவது சுலபம் அல்லவா ஜெனரல்?"

அமைச்சர் சொன்னதை ஆமோதிப்பது போல தலையசைத்து விட்டு, இராணுவ ஜெனரல் சொன்னார்:

"அல்-வாஸீர் இப்போது எங்கிருக்கிறார்? என்ன செய்கிறார்? என்பதை 'மொசாட்' மூலமாக உடனே அறிய வேண்டும்."

"அறியலாம்!"

"அதன்பின்னர்தான் அல்-வாஸீரின் கதையை முடிக்கும் வலையை விரிக்க வேண்டும்."

"நல்லது. ஆனால் இனியும் தாமதித்தால் அல்-வாஸீர் நம்மைத் தேடி வந்து 'நலமா?' என்று கேட்கப்போகிறான். அதனால் தாமதிக்காமல் வலையை விரிக்க வேண்டும். திட்டம் தயாராகட்டும்!"

"திட்டம் தயார்"

என்றார் அல் -வாஸீர் தன்னைப் பேட்டிகாண வந்திருந்த குவைத் பத்திரிகை நிருபரிடம். பத்திரிகையின் பெயர்-'அல்- அன்பார்.'

"திட்டம் என்னவென்று சொல்ல முடியுமா?"

"எதற்கு? எதிரியைத் தயார் படுத்தவா? திட்டத்தை தெரிவிக்க முடியாது. நோக்கத்தைச் சொல்லலாம்."

"சொல்லுங்கள்!"

"எழுங்கள்! பாலஸ்தீனியர்களே எழுங்கள்!" என்று ஆயிரம் ஆயிரம் பிரசுரங்கள் அடித்து விநியோகிக்கப்போவதில்லை. 'இஸ்ரேலியர்களை விரட்ட பாலஸ்தீன பூமியின் புத்திரர்களால் முடியும்' என்று கூட்டம் போட்டு பேசப்போவதில்லை."

"அப்படியானால்....?"

"இஸ்ரேலிய இராணுவத் தளங்களை நோக்கிப் பாயப்போகிறோம். எதிரி மீதான எமது வெற்றி எங்கள் மக்களை- சோகத்தை துடைத்துவிட்டு துணிச்சலோடு எழுந்து நிற்க வைக்கும். 'எம்மாலும் முடியும்-முடியும்' என்று நம்பிக்கை கொள்ளவைக்கும். பொறுத்திருந்து பாருங்கள், ஸியோனிச தளங்கள் சிதையப்போகின்றன!"

"யார் சிதையப் போவது என்பதைப் பார்த்துவிடலாம்!"

'மொசாட்' உயர் அதிகாரி சீறினார். அவர் முன்பாகக் கிடந்தது 'அல்-அன்பார்' பத்திரிகை.

மேசையில் இருந்த கறுப்புத் தொலைபேசி-காதலன் கைவைக்க சிணுங்கும் பெண் போல-மெல்லிய சப்தத்தில் குறி காட்டியது.

உயர் அதிகாரி றீசிவர் காதில் பொருத்தி "ஹலோ" என்றார்- விறைப்பாக சல்யூட் செய்தார். காரணம் மறுமுனையில் பாதுகாப்பு அமைச்சர் ஏயர் வெய்ஸ்மன். அவர் சொன்னார் முறுமுனையில் இருந்து:

"நல்ல செய்தி ஒன்று சொல்லப் போகிறேன். அல்-வாஸீர் கதைக்கு முற்றுப் புள்ளியிட நீங்கள் அனுப்பிய திட்டம் அங்கீகரிக்கப்பட்டு விட்டது."

"ஓ...காட்...நன்றி."

"இருக்கட்டும்! காரியம் நடக்கட்டும்!"

(தொடர்ந்து வரும்)

# ஹலோ டாக்டர்!




"ஹலோ! டாக்டர் -நேற்று வரலாம் என்று நினைத்தேன். பயங்கரமான காய்ச்சல். 'நோய் என்றால் தானே என்னிடம் வரவேண்டும், அதற்கு வராமல் அறுக்க வருகிறானே' என்று நினைப்பீர்கள்."

"அதெல்லாம் ஒன்றுமில்லை, காய்ச்சல் அதிகமாக இருந்தால் செய்யக் கூடிய கைவைத்தியம் ஒன்று சொல்கிறேன். குளிர்ந்த தண்ணீரில் துணியை நனைத்து நெற்றியில் போட்டுக் கொள்ளுங்கள். காய்ச்சலின் தாக்குதலில் உள்ள கடுமை குறையும்."

"இனிப்பான தகவலுக்கு நன்றி.... ஆ...இனிப்பு என்றவுடன் தான் காரம் நினைவுக்கு வருகிறது. எனக்கு காரம் என்றால் பிரியம் டாக்டர். ஆனால் ஒரு பயம்."

"என்ன பயம்?"

"மிளகாய் அதிகம் சாப்பிட்டால் புற்றுநோய் வருமென்று மிரட்டுகிறார்கள். உண்மையா டாக்டர்?"

"நான் சொல்லும் தகவலைக் கேட்டால் மிளகாய்த் தோட்டம் ஒன்றையே குத்தகைக்கு எடுத்துவிடுவீர்கள். மிளகாய் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மை-தீமைகளை ஆராய 'யேல்' பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியே நடத்தி முடித்திருக்கிறார்கள்."

"அவர்களும் மிளகாய் ருசியர்களாக்கும்!"

"நிறைய மிளகாய் சாப்பிட்டால் புற்றுநோய் வருவரு தடுக்கப்படுகிறதாம். இது தவிர வயிற்றில் 'அல்சர்' வருவதையும் மிளகாய் தடுக்குமாம். அதுமட்டுமல்ல, ஸ்பெயின் நாட்டுக்காரர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமோ? நிறைய மிளகாய் சாப்பிட்டால் கண் பார்வை நன்றாகத் தெரிகிறதாம்."

"வாவ்...."

"இந்தோனேசிய நாட்டுக்காரர்கள் குழந்தை பிறப்பது எளிதாக இருப்பதற்காக மிளகாய் சாப்பிடுகிறார்கள். மலேசியாவில் ஜீரண சக்திக்காக மிளகாய் சாப்பிடுகிறார்கள்"

"மிளகாயில் இத்தனை விஷயம் இருக்கிறதா? பலே....பலே..! சரி, டாக்டர் மீண்டும்-இனிப்புக்கு வருகிறேன். கர்ப்பிணிப் பெண்கள் இனிப்புச் சாப்பிடுவது நல்லதா? கூடாதா? இது என் மனைவி கேட்டது."

"கூடாது. இனிப்புப் பண்டங்கள், வடை, மற்றும் எண்ணைய்ப் பலகாரங்களை கர்ப்பிணிப் பெண்கள் தவிர்ப்பது உத்தமம். குறிப்பாக கொழுப்புப் பொருட்கள் சாப்பிடுவதை பத்துமாதங்களுக்கு ஒத்திப் போடுவது நல்லது."

"நன்றி-டாக்டர், புதிய மருத்துவக் கண்டு பிடிப்பு ஏதாவது?"

"ஆச்சரியம்! ஆனால் உண்மை. இதயத்தில் ஓட்டை போட்டுக்கொண்டு 127 பேர் அமெரிக்காவில் வாழ்கிறார்கள்"

"அடடே...எப்படி ஓட்டை போடுகிறார்கள்?"

"ஆயிரம் வோட்ஸ் கார்பன்-டை ஒக்சைடு லேசர் மூலம் ஓட்டை போடுகிறார்கள். இதயத்தில் இரத்த ஓட்டம் நின்றுவிட்டால் ஆள் குளோஸ் என்ற கவலை இனியில்லை. இதயத்தில் ஓட்டை போட்டு அதனுள் இரத்த ஓட்டத்தை ஏற்படுத்தி விடலாம்."

"இந்தச் சிகிச்சை முறை பரவலாகி விட்டதா டாக்டர்?"

"இல்லை, அமெரிக்க அரசு இன்னமும் அனுமதி கொடுக்கவில்லை. தற்போது பரீட்சார்த்தமாக அமெரிக்காவிலுள்ள சில



மருத்துவ மனைகளில் அந்த சிகிச்சை நடந்துவருகிறது."

"இறுதியாக ஒரு குறும்பான கேள்வி. முத்தமிடுவதால் உடலுக்குக் கேடா டாக்டர்?"

"காதைக் கொடுங்கள் சொல்கிறேன் முத்தமிடுகிறோமல்லவா? அதனால் பல இரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன. உடல் நலத்திற்கு முத்தம் உபயோகம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்."

"இது போதும் இனி.... வருகிறேன் டாக்டர்"

# யார் இந்த உறவு?

இங்கிலாந்து இளவரசி டயானாவின் கன்னத்தோடு ஒட்டியிருக்கும் நபர் யார்? அறிய ஆவலாய் உள்ளவர்கள் மட்டும் 12ம் பக்கம் சென்று விடையைப் பாருங்கள்.



# கறுப்பு இனத்தில் வெள்ளைக் குழந்தைகள்?

தென்னாபிரிக்காவில் ஒரு பிரச்சனை. கறுப்பு இன மக்களுக்குள் சில பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பளிச்சென்று வெள்ளையாகப் பிறக்கின்றன.

அசப்பில் நீக்ரோக்கள் போல இருந்தாலும் நிறம் வெள்ளை. இவர்களை 'அல்பினோக்கள்' என்று அழைக்கின்றனர்.

ஒரு வகையான நோய்தான் குழந்தைகள் அப்படி வெள்ளையாகப் பிறக்கக் காரணம் என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

கண்கள் சுருங்கி இருக்கும், இளம் வயதில் கண் பார்வை மங்கிவிடும். தோல் புற்றுநோய் ஏற்படும். வெய்யிலில் வெளியே சென்றால் உடல் முழுவதும் எரிச்சல் ஏற்படும். இதெல்லாம் 'அல்பினோக்கள்' எதிர்நோக்கும் பிரச்சனை. ஆனால் இவை உடல் ரீதியான பிரச்சனைகள்.

'அல்பினோக்களின்' மனதை வாட்டும் பிரச்சனையும் இருக்கிறது. அதுதான் பெரிய பிரச்சனை. 'அல்பினோக்களை' கறுப்பர்களும் தங்கள் இன மக்களாக ஏற்றுக் கொள்வதில்லை. வெள்ளையர்களும் ஏற்றுக் கொள்வதில்லை.

இதனால் பிறக்கிற குழந்தை அல்பினோவாக இருந்தால் உடனே கொன்று விடுகிறார்கள்-

தென்னாபிரிக்காவிலுள்ள ரிச்சர்ட் பிஸ்லினா தம்பதிக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்தன. மூன்றும் 'அல்பினோக்கள்'. ஆனால் அவர்கள் வெறுக்கவில்லை. அன்போடு நேசித்து வளர்த்து வருகிறார்கள்.

வெள்ளையரிடமிருந்து கறுப்பு இன மக்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது. அல்பினோக்களுக்கு எப்போது விடுதலை?


ஒரே பிரசவத்தில் பிறந்த மூவருடன் தாயார்

www.padippakam.com



## தகவல் பெட்டி

# "எங்கே.... ஆ-ஆ-காட்டு!"

இங்கிலாந்தில் உள்ள ஷபாரி பார்க்கில் பயங்கரமான திமிங்கிலம் ஒன்றை வளர்த்து வருகிறார்கள். ஆளையே சுருட்டி விழுங்கும் திமிங்கிலத்தை பரம சாதுவாக பக்குவமாகப் பழக்கி வளர்த்திருக்கிறார் டேவிட் டெய்லர். இவர் ஒரு மிருக ஆய்வாளர். திமிங்கிலத்திற்கு ஏதோ வருத்தமாம். அதுதான் 'ஆ'காட்டச் சொல்லிப் பரிசோதிக்கிறார் டேவிட். 'எப்போது டேவிட்டின் ருசியை இந்த திமிங்கிலம் பரிசோதிக்கப் போகிறதோ.... யப்பா!' என்று உங்களுக்குப் புல்லரிக்குமே!

# வயதோ 64 - வந்தவளோ 16

ஒரு பக்கம் கிண்ணம், மறு பக்கம் கன்னம். இரண்டிலுமே ஆசை. இத்தனைக்கும் கும்மாளம் போடும் மிஸ்டர் பிரிஸ்கிக்கு வயதோ 64. பிரிஸ்கியின் 50 வது வயதில் மனைவி மரணமாகிவிட்டார். சோகத்தை மறைக்க மதுவோடு வாழ்ந்தார் 14 வருசம். மது மட்டும் ருசித்து சலித்துப் போனதால் மாது தேடினார். (வாடகைக்கு அல்ல, வாழ்க்கை நடத்த) பத்திரிகைகளைப் புரட்டி மணமகள் விளம்பரம் தேடி முகவரி பிடித்து கடிதம் போட்டார். விதம் விதமாக வந்த பல பெண்கள் அவரை மணமகனின் அப்பா என்று நினைத்து 'வணக்கம் அங்கிள்' என்றார்களாம். அசட்டுச் சிரிப்போடு பிரிஸ்கி "நான்தான் மணமகன்" என்றதும் பல பெண்கள் அலறியடித்துக் கொண்டு ஓடிவிட்டார்களாம். இறுதியில் 16 வயது மங்கை லிசா, பிரிஸ்கியை மணக்க மனப்பூர்வமாக சம்மதித்தார். ஜாம் ஜாம் என்று திருமணம் நடந்தது. திருமணத்தின் பின்னர் தேனிலவுக்கு போய்விட்டு வந்த பிரிஸ்கி என்ன சொன்னார் தெரியுமோ? "எனக்கு இளமை திரும்பிவிட்டது". 64 இலும் அதிஷ்டக் கட்டை



லிசா-தனது 64 வயது கணவனுடன் என்புருசன்தான் எனக்கு மட்டும்தான்



# மீசையுள்ள மிருகம்

மீசையுள்ள இந்த மிருகம் 'வல்ரஸ்' என்று அழைக்கப்படுகிறது. குளிர்ப்பிரதேசங்களில் தான் இது காணப்படுகிறது. நேரில் கண்டால் பயந்து போய்விடுவோம். நீண்ட கோரைப் பற்கள் 'குத்தி விடுவேன் குத்தி' என்று மிரட்டும். மீசை மயிர்கள் தடிப்பாக இருக்கும். அதனையும் அச்சமில்லாமல் ஆசையோடு வளர்த்து-தனது செல்ல மிருகத்திற்கு ஆசையாக ஒரு முத்தம் கொடுக்கலாம் என்று துடிப்பவரை மீசை தடுக்கிறது. 'வல்ரஸுக்கு'ம் குறும்பு அதிகம். தனது மீசையால் எஜமானின் தாடையில் உரசி கிச்சு-கிச்சு மூட்டுகிறது பாருங்கள்.

# சிலையர்களான தலைவர்கள்!

சிலை எழுந்து பேசுமோ? என்று கேட்டால், பேசும் என்று துணிந்து சொல்லலாம். அதாவது சிலையில் உள்ள கலை காலம் காலமாகப் பேசிக் கொண்டேயிருக்கும். படத்தில் இருப்பது அமெரிக்காவில் 'ரஸ்மோ மலையில்' செதுக்கப்பட்ட அமெரிக்கத் தலைவர்களது சிலைகள். சகல நாடுகளிலும்தான் சிலை வைக்கிறார்கள். அவற்றிலே பல சிலைகள் திறப்புவிழாக்களுக்குப் பின்னர் கவனிக்கப்படுவதே அபூர்வம். ஆனால், மலையில் செதுக்கப்பட்ட இந்தச் சிலைகள் உலகமே கவனிக்கும் விதமாக பிரசித்தி பெற்றுவிட்டன. சிலையர்களான தலைவர்களுக்கும் இது தக்க மரியாதை. மலையளவான கௌரவம்.



# நாயானது மரத்தின் மேலே

## ஹொய்யா..... ஹொய்...



'புல்டோக்' ரக நாயார்தான் மரத்தின் மேலே. இவரைச் சாதாரணமாக நினைக்கக் கூடாது. மரம் ஏறும் போட்டியில் உலக சாம்பியன் பட்டம் வாங்கி 'கின்னஸ்' சாதனை படைத்திருக்கிறார். அருகில் நாயாரின் எஜமான்.



படிப்பகம்

www.padippakam.com

# சி னி வி சி ட்

## முப்பது லட்சம் ரூபா ஆசை

பக்காவான வியாபாரியான ரவிமாறன் என்பவருக்கு ஒரேயொரு ஆசை. ஒரு முறை ஒரேயொரு முறையாவது கோவை சரளாவோடு நேரடியாக நடித்துவிட வேண்டும் என்பதுதான் ஆசை. கையில் இருந்த பணத்தையெல்லாம் கொட்டி (30 இலட்சம்) 'வசந்தம்' என்றொரு படத்தை தயாரித்து சரளாவோடு சரளமான ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார் ரவிமாறன். படத்தின் பெயர் 'வசந்தம்' ரவிமாறனுக்கு வசந்தம் போகா மலிருந்தால் சரிதான்.

## வருகிறார் வருகிறார்

இம்மாதம் திரைக்கு வருகிறது ராசய்யா. சென்னையில் மட்டும் நான்கு பெரிய திரையரங்குகளில் நான்கு காட்சிகளாக ஓடப்போகிறது. கடந்த ஒரு மாதகாலமாக 'முன்னோட்டம்' போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

'ராசய்யா' படத்தை அடுத்து பிரபுதேவா நடித்துள்ள படங்களில் 'லவ்பேர்ட்ஸ்' தீபாவளிக்கு வெளியாகும். அதையடுத்து 'மிஸ்டர் ரோமியோ' திரைக்கு வரும்.

## வா மீனா வா

கதாநாயகிகள் கலக்குவது கொஞ்சக்காலம் தான் என்றாலும் பந்தாவுக்கு குறைச்சலில்லை. அப்படித் தான் மீனாவும். மள மளவென்று படங்களை ஒப்புக் கொண்டு விட்டு உரிய திகதியில் கமராவுக்கு முன் தோன்ற முடியாமல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கிறார். ரஜினியோடு 'முத்து' படத்திலும், சத்யராஜுடன் 'மாமன் மகள்' படத்திலும் நடித்துவரும் மீனா 'முத்து' படத்தில்தான் கூடுதல் கவனம் செலுத்துகிறார். ரஜினி கோபப்படுவார் என்று பயம். இதனால் மீனாவுக்காகக் காத்திருக்கிறார் சத்யராஜ். சத்யராஜ்-மீனா நடித்த சில காட்சிகள் ஏற்கனவே எடுக்கப் பட்டு விட்டன. இல்லாவிட்டால் மீனாவுக்குப் பதிலாக வேறு ஒருவரை நடிக்க வைத்திருப்பார்கள்.

## கரிஷ்மா வருகிறார் கலக்க

இந்திப் பட நடிகைகள் தமிழ் படங்களில் தலை காட்டுவது (தலைமை மட்டுமா) வர வர அதிகமாகிக் கொண்டே போகிறது.

பிரசாந்துடன் ஜோடியாக நடிக்க கரிஷ்மா கபூர் இறக்குமதி செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடக்கிறது. 'ஜோக்கர்' படத்தில் பிரசாந்தோடு நடிக்க கரிஷ்மா கபூரை அணுகியிருக்கிறார்கள். தமிழ்படவுலகுக்கு கரிஷ்மா வருவார் பின்னே! முரச சினிவிசிட்டுக்கு வந்திருக்கிறார் முன்னே!



கார்த்திக்-கனகா
படம்:- கட்டப்பஞ்சாயத்துக்காரன்.

## அப்படியா? சங்கவி?

சொன்னால் நம்பமாட்டீர்கள். சங்கவி மறுத்துவிட்டார். அதாகப்பட்டது, 'விஷ்ணு' படத்தில் சங்கவியை ஒரு மோசமான நடன அசைவைச் செய்யுமாறு கேட்டாராம் இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர். "இது ரொம்ப ஓவர் சார்" என்று ஒரேயடியாக 'நோ' சொல்லி விட்டாராம் சங்கவி. அளவுக்கு மிஞ்சினால் கவர்ச்சியும் கசக்கும் என்று நினைத்தாரோ சங்கவி.

## திரையில் புதியவை

தமிழ் நாட்டில் தற்போது (கடந்தவாரம்) திரைக்கு வந்துள்ள படங்கள்: அசுரன் (அருண் பாண்டியன்-ரோஜா) 'லாக்கப்டெத்' (தேவராஜ்-நிரோசா) 'காந்தி பிறந்த மண்' (விஜயகாந்த்-ரவாலி-ரேவதி)



## சுந்தர புருஷன்
## வில்லனுக்கு பதவி உயர்வு?

கோடிகளைக் கொட்டிப் படமெடுப்பதில் குறியாக இருக்கும் பட நிறுவனங்களில் ஒன்று சூப்பர் குட் பிலிம்ஸ்.

'நாட்டாமை' படத்தில் சளைக்காமல் பணத்தைக் கொட்டி களைத்துப் போகுமளவுக்கு வசூல் கறந்தார்கள். இப்போது அர்ஜுன், ரம்பா, மீனா நடிக்கும் செங்கோட்டை, பிரபுதேவா-ஷில்பா ஷெட்டி நடிக்கும் 'மிஸ்டர் ரோமியோ? என்ற இரு படங்களை தாராளமாகப் பணம் கொட்டித் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இரு படங்களும் விரைவில் வெள்ளித் திரைக்கு வரப்போகின்றன.

இப்போது புதிதாக ஒரு படத்திற்கு பூஜை போட்டு விட்டார்கள். படத்தின் பெயர்: சுந்தர புருஷன். சூப்பர் குட் பிலிம்ஸ்- இலண்டன் பிலிம்ஸ் இரண்டும் இணைந்து பணம் செலவு பண்ணி எடுக்கப் போகிறார்கள்.


வில்லனாக நடித்து வந்த லிவிங்ஸ்டனுக்கு (பெயரைமாற்றாமலே) பதவி உயர்வு. சுந்தர புருஷனில் அவர்தான் கதாநாயகன். கதாநாயகி ரம்பா. செங்கோட்டை படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ரம்பாவை சூப்பர் குட் பிலிம்ஸாருக்குப் பிடித்து விட்டது. அதுதான் புதிய படத்திலும் நடிக்க வைத்து தட்டிக் கொடுக்கிறார்கள்.

## யார்?

பளிச்சென்று சிரிப்பவர் யார்?

'பம்பாய்' படத்தில் ஹம்மா, ஹம்மா பாடலுக்கு வந்து ஆடி விட்டுப் போனாரே அவரேதான். இந்திப் பட வுலகில் படுவேகமாக முன்னேறி வருகிறார். உபயம்: தாராளமான கவர்ச்சி. சோனாலி பாண்ட்ரே இந்திப் படவுலக சிலுக்கு.

சோனாலி பாண்ட்ரே
இந்திப்படவுலக
சிலுக்கு



## நனைந்த நக்மா

நக்மா- அரவிந்த சாமி நடித்துவரும் 'மௌனயுத்தம்' பற்றி கடந்த இரண்டு வாரமாக செய்தி தந்தோம். இது மூன்றாவது வெற்றிகரமான வாரச் செய்தி. நக்மா பொப் பாடகியாக நடிக்கிறார். பொலிஸ் அதிகாரியான அரவிந்த சாமியை காதலிக்கிறார் நக்மா. பாடல் காட்சி இல்லாமல் காதலா? இருக்கிறது. நக்மாவை நனைய வைத்தால்தானே கண்களுக்கு குளிர்ச்சி. அதனால் மழையில் நனைந்து ஒரு பாடல். மழையை உண்டாக்குவதற்காக மோட்டார்களை வைத்து ஆற்றிலிருந்து நீர் எடுத்து பைப்புக்கள் மூலம் மேலிருந்து கொட்டினார்களாம். படத்தில் வில்லன் ரகுவரன். அவரையும் அவர் கூட்டத்தையும் அடித்து நொறுக்கி அரவிந்த சாமி விலங்கு மாட்டுவது தான் உச்ச கட்டம்.



## கொடுக்காதது ஏன் சிவாஜிக்கு

திலீப்குமாருக்கு கொடுத்தது போல சிவாஜிக்கும் 'தாதா சாகேப் பால்கே' விருது வழங்கியிருக்க வேண்டும். செய்யவில்லை. காரணம், விருது வழங்கு வதிலும் அரசியல் புகுந்திருப்பதுதான் என்று புளுங்குகிறார்கள் தமிழ்ப்பட உலகத்தினர்.

'செவாலியே' விருதை சிவாஜிக்கு வழங்கிய பிரான்ஸ் அரசு, சிவாஜி பற்றிய 'தொலைக் காட்சி தொடர்' ஒன்றை தயாரிக்கவும் உதவியிருக்கிறது. இந்திய தேசிய தொலைக் காட்சியில் (தூரதர்ஷன்) 'சிவாஜி புகழ்மாலை' என்ற பெயரில் அது ஒளிபரப்பாகப் போகிறது. பிரான்ஸ் அரசுக்கு சிவாஜி பற்றி தெரியுமளவுக்கு இந்திய அரசுக்கு தெரியாமல் போவது ஏன்? ஒரே பதில், அரசியல்!

## முகப்பில்

சத்யராஜ்
படம்:- வில்லாதி வில்லன்.

ஷில்பா ஷெட்டி
படம்:-மிஸ்டர் ரோமியோ

ஷொட் !

## அடிவாங்கிய படங்கள்

'கிரீடம்' என்ற பெயரில் தமிழுக்கு வந்த மொழி மாற்றுப் படத்தில் நாகார்ஜுன்-ஸ்ரீதேவி நடித்தும்கூட தமிழ்ப் பட ரசிகர்களது வரவேற்பைப் பெறவில்லை.

இதனால் 50 நாட்களை பிடிக்கும் முன்னரே தியேட்டரை விட்டு ஓடிவிட்டது 'கிரீடம்'. ஆனால், நாகார்ஜுன் மனிஷா நடித்து தமிழில் மொழி மாற்றி வந்த 'எல்லாமே என் காதலி' குறை சொல்ல முடியாதளவுக்கு வசூல்பண்ணிவிட்டது..

நாசர் மிகவும் கஷ்டப்பட்டு, ஈடுபாட்டோடு இயக்கி, மிகக் கஷ்டப்பட்டு வெளியிட்ட படம் அவதாரம். 50 நாளைக்கூட சந்தோஷமாகத் தொட முடியவில்லை. வியாபாரரீதியாக படு தோல்வி. ஆனால், தரமான படம் ஒன்றை இயக்கிய பெருமை மட்டும் நாசருக்கு லாபம்.

## அன்று முக்காபலா இன்று 'பச்சபலா'

'முக்காலா முக்காபலா' காதலன் படப்பாடலை உச்சரிக்காத இளம் உதடுகள் மிக மிகக் குறைவு. அதனால் பாட்டுக்கு பலா அழகு என்று நினைத்துவிட்டார்களோ என்னவோ புதிய பாடல் ஒன்றிலும் பலா வருகிறது.

பாடலின் சில வரிகள் இதோ: "அக்கா மக பச்ச பலா....அது ஆட்டம் பாட்டம் இங்கே செல்லாது...அக்கா மக பச்ச பலா..பலா....பலா....பச்ச பலா..."

பாடல் இடம் பெறும் படம் 'மிஸ்டர் மெட்ராஸ்' பிரபு-சுகன்யா ஜோடி.. சுகன்யாவைத் துரத்தித் துரத்தி விளையாடித்து பிரபு பாடுவது போல் வருகிறது. அந்த பலாப் பாடல் படப்பிடிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன.



ஷொட் !

## மறுபடியும் சி…

'அரண்மனை… பிரபலமான … போனார். 'சீவல… தான் கிளப்பி… யாராவது தேடி… விட்டார் அஹா…

'பிரியதர்ஷி… படத்தில் நடிக்க … அஹானா. தி… மாணவர்கள் அ… இருவரும் க… அறிமுகமாகிறா… புதியவர்கள் என்… பயிற்சி கொடுக்…

## நாவல்கள்…

கமலுக்கு இ… வெல்லம். நல்… தலைப்புக்களும் 'மகளிர் மட்டும்' ஏற்கனவே நாவ… தான். இப்போ… பெயரை மாற்றி … தனது புதிய பட… இருக்கிறார் … பார்த்தசாரதி … பெயர்தான் அ… வித்தியாசம்தான்…


படிப்பகம்

www.padippakam.com

## டு சொல்லுகிறோம்

பூ நடிகை 'மாமன்' இயக்குநரோடு சேர்ந்து சில பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டாராம். இயக்குநர் வீட்டில் விஷயமறிந்து அமளி துமளி. அது பற்றியெல்லாம் இருவரும் அலட்டிக் கொள்வதாகவே தெரியவில்லை. சமீபத்தில் நட்சத்திர விடுதி ஒன்றில் இருந்து இருவரும் வெளியே வருவதைப் பார்த்து இருக்கிறார்கள் திரையுலகப் புள்ளி ஒருவர். அவர் மூலம் விஷயம் கசிந்து கோடம்பாக்கம் முழுவதும் பரவிட்டது. ஆனால் பூவுக்கு வெட்கமில்லை.

'கவி' என்ற பெயர் முடியும். யாரந்த நடிகை என்று ஊகித்திருப்பீர்கள்தானே? இந்திப் படங்களில் நடிக்க ஆவலாய் இருக்கிறார். பிரபல இந்திப் பட நாயகன் ஒருவர் சென்னைக்கு வந்தபோது 'நடிகை' வீட்டில் தடபுடலான கவனிப்பாம்.

நடிகரும், இயக்குநருமான 'புதிய பாதைக் காரர்' நிம்மதி இழந்து தவிக்கிறாராம். அவரை ராமன் என்று நினைத்தேன். கோவலரை விட்டாரே என்று 'சீதை' புலம்புகிறாராம். இதனால் வீட்டில் உரிய கவனிப்பு இல்லாமல் புதிய பாதைக்காரர் உடைந்து கொண்டிருக்கிறாராம்.

முன்பெல்லாம் 'பிகு' பண்ணிய 'ரஞ்சிதா' நடிகை இப்போது மாறிவிட்டார். இயக்குநர்களுக்கு தொலைபேசி மூலம் தூது விட்டுக் குழைகிறாராம். உச்சத்தில் இருந்து இறங்கும் போது தான் சிலருக்கு பணிவும், குழைவும் வந்து சேருகிறது.



## அப்பாவின் தயாரிப்பு

சொந்தப் படம் தயாரித்து ரோஜா கையைச் சுட்டுக்கொண்டது பழையகதை. இப்போது ரோஜாவின் அப்பா சொந்தமாக ஒரு படம் தயாரிக்கிறார். மொழிமாற்றுப் படம். 'லேடி கமிஷனர்' என்ற பெயரில் தமிழுக்கு வரும் படம் இது. கன்னடத்தில் மாலாஸ்ரீ நடித்து வெற்றி பெற்ற படத்தைத் தான் அப்பா தமிழில் தயாரிக்கிறார். செல்வமணி சகிதம் வந்து குத்துவிளக்கேற்றினார் ரோஜா.

## 'அய்யோ பாவம், அரவிந்தசாமி'

அரவிந்த சாமியும்-ஸ்ரீதேவியும் நடித்துவரும் 'தேவராகம்' படம் இரண்டே இரண்டு நாள் படப்பிடிப்போடு நின்றுகொண்டிருக்கிறது.

'தேவராகம்' படத்தின் இயக்குநர் பரதன். பரதன் முன்னர் வேறு ஒரு பட அதிபரிடம் நாலரை லட்சம் ரூபாயை கைநீட்டி வாங்கியிருந்தார். 'அக்னிபிரவேசம்' என்னும் படத்தை இயக்கித் தருவதாக வாங்கிய பணம் அது. பின்னர் பட அதிபரோடு ஏதோ பிரச்சனை. அதனால் பரதன் கழன்றுவிட்டார். வாங்கிய பணத்தை வேறு படத்தை எடுக்கும்போது தருவேன் என்று வாக்குறுதி கொடுத்தார் பரதன். ஆனால் சொன்னபடி செய்யவில்லை.

கோபம் வந்த பட அதிபர் நேராக நீதிமன்றத்திற்கு போனார். பணத்தைக் கொடுத்துவிட்டு படம் எடுக்கலாம். என்று 'தேவராகம்' படப்பிடிப்புக்கு தடை போட்டுவிட்டது நீதிமன்றம்.

இதனால் மிகப் பாதிக்கப்பட்டிருப்பவர் அரவிந்தசாமிதான். 'தேவராகம்' படத்திற்காக தாடி வளர்த்திருக்கிறார் அரவிந்தசாமி. வழக்கு முடிந்து எல்லாம் 'ஷேப்' ஆனால்தானே 'ஷேவ்' எடுக்கலாம்.



சிரஞ்சீவி-ரம்பா
படம்:- ரௌடி பால்

## தம்பிக்கு ஒரு வாய்ப்பு

பிரபுதேவாவின் குடும்பம் முழுவதுமே திரையுலகுக்குள் மூழ்கிக்கொண்டிருக்கிறது. பிரபுதேவாவின் மற்றொரு தம்பி நாகேந்திர பிரசாத்தும் பிஸியான நடிகராகப் போகிறார். (ஏற்கனவே பாடல் காட்சிகளில் தோன்றியிருக்கிறார்) இந்தி நடிகை தேவயானியோடு ஒரு படத்தில் நடிக்கிறார் நாகேந்திர பிரசாத். நல்ல சந்தர்ப்பம். ரஜினிகாந்த் ரசிகராக நடிக்கிறார் நாகேந்திர பிரசாத். ரேவதி-ரகுவரன் ஜோடியாக நடிக்கும் 'தொட்டா சிணுங்கி' படத்தில்தான் அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

தொட்டா சிணுங்கியில் மாறுபட்ட பாத்திரம் ஒன்றில் மேடைப்பாடகனாக நடிக்கிறார் கார்த்திக். படப்பிடிப்புக்கள் வேகமாக நடந்துவருகின்றன. செப்டம்பர் மாதத்தில் திரையிட உத்தேசமாம்.

பெண்ணு என்
தானே சிரிக்குது
கண்ணு என்
நீரில் குளிக்குது.
பூவைக் கிள்ளும்
நினைப்போ? — தன்
தேவை சொல்லும்
சிரிப்போ?
கவியரசு கண்ணதாசன்.



கரிஷ்மா கபூர்

## மினி சினி

* 'அபூர்வ சகோதரர்கள்' 'சதிலீலாவதி' 'பாசவலை' போன்ற பழைய படங்களின் பெயரைத் தனது படங்களுக்கு வைத்து வரும் கமலஹாசன் அண்மையில் 'உத்தமபுத்திரன்' என்ற பெயரை படங்களின் பெயரைப் பதிவு செய்யும் பிலிம் சேம்பரில் பதிவு செய்துள்ளார்.

* 'பெரிய குடும்பம்' படத்திற்குப் பின்னர், பிரபுவுக்கு ஜோடியாக 'மிஸ்டர் மெட்ராஸ்' படத்தில் நடித்துவரும் வினிதா, மலையாளத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக ஒரு படத்திலும், தெலுங்கில் நாகார்ஜுனுக்கு ஜோடியாக ஒரு படத்திலும் நடித்து வருகிறார்.

* பாரதிராஜா இயக்கத்தில் விஜயகாந்த்-ரோஜா நடிக்கும் 'வாக்கப்பட்ட பூமி' படத்தின் பெயரை 'கரிசல் மண்' என்று மாற்றத் திட்டமிட்டுள்ளனர். பாரதிராஜா இயக்கிய 'கருத்தம்மா' படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் 'கரிசல் மண்'.

* 'அஞ்சலி', 'சிங்காரவேலன்' உட்பட பல படங்களில் பாடியுள்ள இளையராஜாவின் மகள் பவதாரிணி, தற்போது 'ராசய்யா' படத்தில் 'மஸ்தானா...மஸ்தானா..' என்ற பாடலை ரோஜாவுக்காகவும், 'சந்திரலேகா'வில் வனிதா விஜயகுமாருக்காகவும் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.

* டாக்டர் ராஜசேகர் கதாநாயகனாக நடிக்க 'கிழக்குச்சீமையிலே' 'கருத்தம்மா' படங்களுக்கு கதை-வசனம் எழுதிய ரத்னகுமார் இயக்குவதாக இருந்த 'இந்தியன் 1995' படத்தை தற்போது 'அதர்மம்' படத்தை இயக்கிய ரமேஷ் கிருஷ்ணன் இயக்குகிறார்.

* எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் அவரது மகன் விஜய்-சங்கவி நடித்து வரும் 'விஷ்ணு' படத்தில் விஜய்யும், அவரது தாயார் ஷோபா சந்திரசேகரும் இணைந்து டூயட் பாடலொன்றைப் பாடியுள்ளனர்.

* 'ஹைவே' படத்திற்குப் பின்னர் சுரேஷ்கோபி மலையாளத்தில் நடித்துள்ள 'சாதரம்' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தப் படத்தில் சுரேஷ் கோபிக்கு ஜோடியாக ரஞ்சிதா நடித்திருக்கிறார்.

* 'நாட்டாமை' படத்திற்குப் பின்னர் பிரபு, ரஜினி, சத்தியராஜ் படங்களை இயக்கும் வாய்ப்புப் பெற்ற கே.எஸ்.ரவிக்குமார் விரைவில் கே.பாக்கியராஜ் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தை 'சின்னத்தாயி' 'ராசாமகன்' போன்ற படங்களைத் தயாரித்த எம்.வேதா தயாரிக்கிறார்.

* இரண்டு கன்னடப்படங்களைத் தயாரித்துள்ள நடிகை லட்சுமி, மூன்றாவதாக ஒரு கன்னடப்படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். இதை இவரது கணவர் சிவசந்திரன் இயக்குகிறார்.

* இரண்டு வருடங்களுக்கு முன் இந்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'கல்நாயக்' படத்தை இயக்கிய சுபாஷ் கையின் இயக்கத்தில் தற்போது வெளிவரவுள்ள 'திரிமூர்த்தி' படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. அனில் கபூர்.

ஷொட் 2

ஷொட் 2



விஜயகாந்த்
படம்:- காந்தி பிறந்த மண்

...' படத்தின் மூலம் ...னா எங்கே ...பாண்டியிலும்' ...ச்சே என்று இதோ கிடைத்து

...ன்னும் புதிய ...தமாகியுள்ளார் ...டக் கல்லூரி ... அசோக்குமார் ...யகன்களாக ...கதாநாயகன்கள் அஹானாதான் ...ண்டிருக்கும்.

## ...பெயர்கள்

...ங்கள் என்றால் ...லக்கியங்களின் ...க்கும். 'மகாநதி' ...ன்ற பெயர்கள் ...வந்த பெயர்கள் ...துரோகி' என்ற ...ப் புனல்' என்று ...த பெயர் சூட்டி... ...வா. இந்திரா ...திய நாவலின் ...எதிலுமே கமல்



படிப்பகம்

www.padippakam.com

# நீங்களும் அழகிதான்

நீங்கள் இயற்கையாகவே அழகாக இருக்கிறீர்களா? சில பெண்கள் இயற்கையாக அழகாக இருந்தும் தங்களைக் காட்சிப் படுத்திக் கொள்ளும் வகை அறியாத



காரணத்தால் அழகற்றவர்கள் போல் காட்சி தருவார்கள்.

பெண்கள் தங்கள் உடல் வண்ணத்திற்கு ஏற்ற வண்ணத்தில் உடை உடுத்தப்பழகிக் கொண்டால் மிகச் சாதாரண தோற்றமுடைய பெண்களும் கட்டழகிகளாகக் காட்சிதர முடியும்.

இளநீலம், ரோஜா வண்ணம் அல்லது செம் மஞ்சள் போன்ற இலேசான வண்ணம் கொண்ட உடைகளை அணிவது கறுப்பு நிறமுடைய பெண்களின் தோற்றத்தில் அழகைச் சேர்க்கும்.

மாநிறம் கொண்ட பெண்கள் தூய வெள்ளை ஆடைகளை அணிந்தால் எடுப் பாகவும் எழிலாகவும் இருக்கும்.

சற்று உடல் பருமனாக உள்ள பெண்கள் மெலிந்த தோற்றம் பெற வேண்டுமென்றால் சற்று அழுத்தமான வண்ணம் கொண்ட சேலை அணிய வேண்டும். அப்போது உடல் பருமன் அதிகமாகத் தெரியாது.

மிகவும் உயரமான தோற்றமுடைய பெண்கள் அகலக்கரையும், படுக்கைக் கோடுகளும் கொண்ட அழுத்தமான வண்ண முடைய சேலைகளை அணியவேண்டும். இது உயரம் குறைவாக இருப்பதுபோன்ற தோற்றத்தை உண்டாக்கும்.

சேலையின் வண்ணத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வண்ணமுடைய கலரில் பிளவுஸ் அணிந்தாலும் உயரத் தோற்றத்தை குறைத்துக் காட்டும். நவீன பாணியில் உடுக்கும் பெண்கள் நேர் கோடுகளைக் கொண்ட உடைகளை அணிந்தால் உயரத்தைக் குறைத்துக் காண்பிக்கும்.

சிறு சிறு புள்ளிகள், சிறு அளவில் பூக்கள் உள்ள உடைகளை அணிந்தாலும் உயரத் தோற்றத்தை குறைத்துக் காண் பிக்கும்.

பெண்கள் எத்தகைய தோற்றம் உடையவர்களாக இருந்தாலும் மக்கள் திரளாக வரக்கூடிய திருமண விழாக்கள், கோயில் போன்ற இடங்களுக்குச் செல்லும் போது கண்களைப் பறிக்கும் விதத்தில் பகட்டாக உடை அணியாமல் இருப்பது நல்லது.

# குழந்தைகள் கவனிக்கிறார்கள்!

குழந்தைகள் எதையுமே கூர்ந்து கவனிப்பார்கள்.



ஒரு குழந்தையிடம், 'எதிர் வீட்டு மாமா எப்படி நடப்பார்?' என்று கேட்க, அந்த மூன்று வயதுக் குழந்தை வலது காலை ஒரு பக்கமாய் வளைத்து துள்ளித் துள்ளி நடந்து காட்டியது.

ரஜினியின் ஸ்டைலைப் பற்றிக் கேட்க முடியைக் கோதி முகத்தைத் திருப்பிச் சிரித்தது.

எதிர் வீட்டு மாமாவை அந்தக் குழந்தை ஒரு நாளைக்கு சில முறைகளே பார்க்க வாய்ப்புண்டு. ரஜினியையும் படங்களில் சில முறை பார்ப்பதுண்டு. ஆனாலும் அந்த நடை, உடை, பாவனையை எல்லாம் குழந்தை கூர்ந்து கவனித்து மனதில் பதித்து வைத்திருக்கின்றது.

அப்படியென்றால் வீட்டினுள்ளே குழந்தையுடனேயே இருக்கும் பெற்றோர்களை எப்படிக் கவனிக்கும்? அடுத்தவர்களை விட அதிகமாகவே ஒவ்வொரு அசைவு களையும் மனதில் பதிவு செய்யும்.

பெற்றோர்களின் குணங்களையே குழந்தைகள் பிரதிபலிக்கும். அப்பா குடிகாரன் என்றால், குழந்தையும் பிற்காலத்தில் குடிகாரனாய் மாற வாய்ப்புக்கள் உண்டு.

ஒரு குழந்தையின் தந்தை கித்தார் வாசிப்பவர். அவரைப் பார்த்தே குழந்தையும் வாசிக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறது. குழந்தை களுக்கு முன் பெற்றோர்கள் சண்டை போட்டுக் கொள்வதால் அதன் மனதில் காரணமே தெரியாமல் ஒரு பயம் பதிந்துவிடுகின்றது. பயத்தால் அதன் மனமும், வாழ்க்கையும் பாதிக்கப் படும். போட்டிகள் நிறைந்த எதிர்காலம் கேள்விக் குறியாய் தோன்றும். குழந்தை களுக்கு முன் பெற்றோர்கள் சண்டை போடுவது, கெட்ட வார்த்தைகள் பேசுவது, அடுத்தவர்களை குறை கூறுவது போன்ற வற்றை தவிர்க்க வேண்டும். பெற்றேகளின் நடை, உடை, பாவனையின் சாயலாய் குழந்தைகள் இருப்பார்கள். நடப்பினால் கெடவும் வாய்ப்புக்கள் உண்டு. ஆனாலும், அடிப்படையில் பெற்றோர்களிடமிருந்தே குழந்தையின் வாழ்க்கை தொடங்கப்படுகிறது.

அதனால் பெற்றோர்கள் ஒழுக்கமாய் நடந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் குழந்தைகள் கவனிக்கிறார்கள்.

# பாலியல் வன்முறை



89 நிமிடங்களுக்கொரு முறை ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள். நாள் தோறும் எட்டுப் பெண்கள் வரதட்சணைக் கொடுமையால் இறக்கிறார்கள். 12.5 நிமிடங்களுக்கொரு பெண் கணவனால் அடித்துத் துன்புறுத்தப்படுகிறாள். அதேபோல சீதனக் கொடுமையால் அரை மணி நேரத்திற்கு ஒரு பெண் துன்பப்படுகிறாள். தினசரி 31 பெண்களாவது ஏதோ ஒரு வகையில் வஞ்சிக்கப்படுகிறார்கள். 19 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு பெண் 'ஈவ் டீஸிங்சில்' சிக்கிக் கொள்கிறாள்.

நகரங்களை விட கிராமப்புறப் பகுதிகளில்தான் கற்பழிப்பு, வஞ்சித்தல், அடித்துத் துன்புறுத்துதல் போன்ற சம்பவங்கள் நடக்கின்றன.

இந்த புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ளது இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 'இன்ஸ்டிடியூட் ஒஃப் கொம்யுனிகேஷன் ஸ்டெடிஸ்" என்னும் நிறுவனம்.

**பரிசுக் கூப்பன்**
**மகளிர் மட்டும்**
**இல 24**

## மகளிர் மட்டும்
### -பரிசுப் போட்டி-

முதல் அதிஷ்டசாலிக்கு
**தங்கநகை**

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.

# ஒரு [illegible] மிருகமும்

## லேடீஸ் ஸ்பெஷல்

புதுடில்லியே கலங்கிக் கொண்டிருக் கிறது. டில்லியின் ராஜாக்களான அரசியல் வாதிகளே ஆடிப்போய் இருக்கிறார்கள்.

காரணம்-ஒரு கொலை!

ஈவிரக்கமற்ற கொலை!

கொல்லப்பட்டது ஒரு பெண்! அவள் பெயர் நயினா. சஹானி.

தந்தூரி ரொட்டி செய்யும் பெரிய அடுப்பில் அவள் உடலைப் போட்டு விறகாய் எரித்திருக்கிறார்கள்.

வெண்ணெய் போதவில்லை, அதனால் கடதாசிகளையும் போட்டு உடலை எரித் திருக்கிறார்கள்.

எரித்தது யாரால்? எவனைத் தன்




சுஷில் சர்மா

கணவன் என்று நயினா சஹானி கைப்பிடித்தாளோ அவனால்! துணைவனே காலனின் தூதனாகி விட்டான்.

548 அறைகளைக் கொண்ட புதுடில்லி யில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதியில் உள்ள அடுப்புத்தான் ரொட்டிக்கு பதிலாக மனித உடலை எரிக்கும் கொலையடுப்பாக மாறியது. மாறியதல்ல-மாற்றப்பட்டது.

இனி-கதைச் சுருக்கம்:

சீக்கிய குடும்பத்தில் பிறந்த நயினா சஹானி அழகான பெண். வாழ்க்கையில் பிரபலமாக வேண்டும் பெரியாளாக வர வேண்டும் என்பது போன்ற ஆயிரத்தெட்டுக் கனவுகள்.

அதனால் அரசியலில் நுழைந்தாள். அரசியலில் பெரும் புள்ளிகளுக்கு அழகான பெண்களை விநியோகித்து வந்தார்கள் டில்லியில் உள்ள இளைஞர் காங்கிரஸ் பிரமுகர்கள்.

கையொப்பம் வாங்கி தமது காரியத்தை நிறைவேற்ற, கட்டில் தான் வசதியான இடம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

நயினா சஹானியும் விநியோகிக்கப் பட்டாள். தற்போது இந்திய தேசிய அரசியலில் பிரபலமாக உள்ள புள்ளிகள் சிலர் அந்த புள்ளிமானிடம் மயங்கிப் போனார்கள்.

கட்டில் மூலமாக கட்சியில் உயர்ந்தாள் நயினா சஹானி. டில்லி இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளராகப் பதவி கிடைத்தது.

நயினா தட்டினால் பெரிய புள்ளிகளது அலுவலகக் கதவுகள் மட்டுமல்ல, மனக் கதவுகளும் திறக்கும்.

இதற்கிடையே நயினாவுக்கு சில காதல் அனுபவங்கள். அவற்றில் வெற்றி பெற்று கல்யாணத்தில் முடிந்த காதல் சுஷில் சர்மாவோடு ஏற்பட்ட காதல் தான்.

சுஷில் சர்மா டில்லி இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்தவர். அழகான பெண்கள் என்றால் அவருக்கு அல்வா. பெண்களை விநியோகித்து வங்கிக் கணக்கில் லகரங்களை குவித்த கில்லாடி.

அடி-தடி-ரகளையிலும் பிரபலம். ராஜீவ் காந்தியோடு கூட மிரட்டல் தொனியில் பேசி தேர்தலில் டிக்கெட் கேட்டவர். ராஜீவ் கொடுக்கவில்லை.

"கட்சியை விட்டே துரத்த வேண்டும்." என்று சொன்னாராம் ராஜீவ். அப்போதே துரத்தியிருந்தால் இப்போது இந்திரா காங்கிரசின் மானம் கப்பலேறியிருக்காது.

நயினா சஹானியை மணந்து கொண்ட சுஷில் சர்மாவுக்கு அவளது போக்குப் பிடிக்கவில்லை.

நயினாவுக்கும் நிறையக் கனவுகள். பழைய தொடர்புகளை இரகசியமாக பத்திரப்படுத்தி தொடர்ந்து வந்தாள்.

சுஷில் சர்மாவும் அழகான பெண்களை ஓரம்கட்டிக் கொண்டு போய் கும்மாளம் தான். இதனால் இருவருக்கும் பிரச்சனை.

அடி-உதை-சித்திரவதை-சுஷில் சர்மா வின் மூர்க்கத்தனத்தை சகிக்க முடியாமல் நயினா மிரட்டியிருக்க வேண்டும். சுஷில் சர்மாவின் இரகசியங்களில் முக்கால் பங்கு அவளுக்குத் தெரியும்.

இதன் தொடர்ச்சிதான் கிளைமாக்ஸாக நடந்த கொலை.

துப்பாக்கியால் நயினாவை சுட்டுக் கொலை செய்து விட்டு, 'பெட்சீட்டில்' உடலை சுற்றியெடுத்துக் கொண்டு தனது காரில் 'அசோக் யாத்திரி' ஹோட்டலுக்குப் போனான் சுஷில்.

அந்த ஹோட்டல் அரசுக்கு சொந்த மானது. அங்கிருந்த ரெஸ்டாரெண்ட் குத்த கைக்கு விடப்பட்டிருந்தது. குத்தகை எடுத்த தில் சுஷிலுக்கும் பங்கு உண்டு.

ரெஸ்டாரெண்டில் இருந்து சகலரையும் வெளியே அனுப்பிவிட்டு, பிணத்தை உள்ளே கொண்டு சென்றான் சுஷில். அவனுக்கு உதவியது ரெஸ்டாரெண்ட் மனேஜர்.

பிணத்தை அடுப்பில் போட்டு எரித்த போது பெரிதாகப் புகையாகி எழுந்தது. ஹோட்டலின் பின்புறம் வசிக்கும்பெண்மணி புகையைக் கண்டுவிட்டு ஹோட்டல் தீப் பிடித்துவிட்டது என்று ஊரைக் கூட்டி விட்டாள். பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உள்ளேபோய் பார்த்தபோது விஷயம் அம்பலம்.

சுஷில் சர்மா எப்படியோ தப்பி தமிழ் நாட்டுக்கு ஓடியது, முன் ஜாமின் எடுத்தது, பின்னர் பெங்களூரில் சரணடைந்தது எல்லாம் விறு-விறுப்பான காட்சிகள்! இப்போது பொலிஸ் கவனிப்பில் இருந்து உளறிக் கொண்டிருக்கிறான்.

"செத்துப் போனது என் மனைவி நயினா அல்ல. எனக்கும் கொலைக்கும் ஒரு தொடர்புமில்லை. கொலை நடந்த போது நான் டில்லியில் இல்லை" என்றெல்லாம் சொல்லும் சுஷில் சர்மாவின் பேச்சை யாருமே ஒரு பொருட்டாக எடுக்கவில்லை.

ஆனால், அரசியல்வாதிகளுக்கு தலை சுற்றுகிறது. 'நயினாவோடு யார் பெயரைச் சம்பந்தப்படுத்தி தொலைக்கப் போகிறானோ சுஷில்?' அதுதான் அவர்கள் கவலை.

நயினாவின் நடத்தையில் தவறுகள் இருக்கலாம். ஆனால் சுஷில் ஒன்றும் சுத்தமானவன் அல்ல.

சுஷில் விலங்கில் மாட்டிக் கொண்டான் நயினவை உபயோகப்படுத்திவிட்டு இப் போது ஒன்றும் தெரியாதவர்கள் போல இருக்கும் அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்வார்கள். காரணம், அதிகாரம் அவர்கள் கையில்!

# இரு பக்க உறவுகள்

எந்த உறவும்-இரண்டு பக்கத்தில் இருந்தும் வரவேண்டும்.

அது உங்கள் மாமியாராகவோ, குழந்தை யாகவோ, கணவராகவோ இருந்தாலும் சரி.

விட்டுக்கொடுத்து, பெறுவதுதான் சுமுகமான சிறந்த உறவுக்கு வழி.

அதற்காக கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன், காஸ் அடுப்பில் போட்டு உங்களை எரித்தாலும் கண்கண்ட தெய்வம் என்று நினைக்க வேண்டும் என்று சொல்ல வரவில்லை.

உறவை ஏற்படுத்திக் கொள்வது சுலபம். அதைத் தொடர்ந்து காப்பாற்றுவது தான் கடினம்.

கொஞ்சம் சமயோசிதம்! கொஞ்சம் சரியான அணுகுமுறை இவற்றால் யாரையும் நீங்கள் சுலபமாகக் கையாண்டு விடலாம்!

ஒவ்வொருத்தருக்கும் ஒரு தனியான



ஆளுமை (பெர்சனாலிட்டி) இருக்கும் என்பதை கருத்தில் வைத்திருங்கள். அவரவர்க்கு தனியான கருத்துக்கள், எண்ணங்கள் உண்டு என்பதை நினைவில் வைத்திருங்கள். உணவில், உடையில் செக்ஸில் என்று சகல விடயங்களிலும் தனிக் கருத்துக்கள் இருக்கலாம்.

எந்தெந்த விஷயங்களுக்கு வாழ்க்கை யில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை அறிந்து வைத்திருங்கள்.

தொழிலிலோ, அல்லது அலுவலகத் திலோ வெற்றி பெறுவதை விட குடும்ப வாழ்வில் வெற்றி காண்பது கடினம். ஆனால்-முயன்றால் முடியாதது எதுவு மில்லை.

# அகத்தில் உள்ளது புருவத்தில் தெரியுமா?

பெரும்பாலும் சோகம், கலக்கம், மயக்கம், நிறைவு, கருணை, காதல், கிளர்ச்சி, வெறுப்பு, காமம், கோபம் போன்ற எல்லா



மனோநிலைகளையும் தத்ரூபமாக காட்டுபவை புருவங்கள். உதாரணமாக களைத்திருக்கும் ஒருவரை சுருங்கிய இமைகள் எடுத்துக்காட்டும்.

01. அடர்ந்த புருவம் பொதுவாக வனப்பு மிக்கவர் என்று காட்டும்.

02. மெல்லிய புருவம் உள்ளவர் வாடிய மனநிலையில் உள்ளவர்.

03. இராணுவ வீரர்கள், தலைவர்கள், அரசர்கள் போன்றவர்களுக்கு அடர்ந்த புருவம் இருப்பது நல்லது.

04. அடர்ந்த புருவமாயினும் மெல்லிய முடி உடையவரரியின் நல்ல மனவளர்ச்சி உடையவர் எனக் கருதப்படுவர்.

05. நீண்ட வளைந்த புருவங்களை உடையோர் பொதுவாக அப்பாவிகளாகவும், அறிவிலிகளாகவும் கருதப்படுகின்றனர்.

06. நீண்ட புருவங்கள் தனித்தன்மை மற்றும் உற்சாகமற்ற மனிதரைக் குறிக்கிறது.

07. குறுகிய புருவம் உள்ளவர்கள் சட்டென்று முடிவுக்கு வரும் அனுபவம் மிக்கவர்.

08. மேலெழுந்தவாரியாக அமைந்த புருவ அமைப்புள்ளவர் நல்ல முற்போக்காளர், எதையும் சாதிக்கலாம் என்று எண்ணுபவர்.

09. கீழ் நோக்கி வளைந்த புருவமுள்ளோர் தற்பெருமையுடையோர்.

10. கோடுகள் வரைந்தது போன்று உருவ அமைப்புள்ளவர் கருணையற்ற உள்ளம் உடையவர்.

11. வளைந்து அலைபோல் புருவம் இருந்தால் பயங்கரவாதியாக இருப்பர்.

என்ன, உங்கள் புருவத்தைத் தடவிப் பார்க்கிறீர்களா? இதெல்லாம் நூறு வீதம் சரியாக இருக்கும் என்று நம்ப வேண்டாம்.

# இவர் தான்-அந்த உறவு

8ம் பக்கத்தில் டயானாவின் கன்னத்தில் ஒட்டியிருந்தவர் இவர்தான். பிரிட்டனின் நம்பர்வன் தொழிலதிபர். பெயர், லோர்ட் பால்ம் பே. டயானாவின் நீண்டகால குடும்ப நண்பர். பல மாதங்களின் பின்னர் சந்தித்த மகிழ்ச்சியில் விழித்திருந்த கமராக்களை மறந்துவிட்டார்கள்.





படிப்பகம்




## மௌனம் ஏன்?

பேச்சு- வெள்ளி
மௌனம் - தங்கம்
என்பதனால் தான் நீ
மௌனியாகினாயா?

இல்ல...
என் இதயச்சந்தையில்
உன் பேச்சுக்கு
பெறுமதி
உயரவேண்டுமென்று
கறுப்பு சந்தையில்
பதுக்கிவைத்திருக்கிறாயா?

வெறும்
வார்த்தைகளை
அடுக்கி அடுக்கியே
காதல் மாளிகையை
கட்டிவிட முடியாதென்ற
முடிவுக்கு வந்து விட்டாயா?

எதுவாக
இருந்தாலும் பேசு!
செத்துக் கிடக்கும்
என் இதயம்
புத்துயிர் பெறப்போவது
அதனால் தானே!

மீராவோடை-எஸ்.நளீம்.

## கவிஞர்கள்

கடதாசியில்
கண்டதையும் கிறும்
எழுத்துலக
இலக்கிய பிரசவிப்பாளர்கள்.

•••

கருப்பொருளைக்
களங்கமின்றி
கடுகாகத் தருபவர்கள்.

•••

காலத்தின்
கோலத்திற்கேற்ப
வியாபிக்கும்
கருத்தை
விருப்புடன்
விதைப்பவர்கள்.

•••

விளையும் கவியை
வியாபார நோக்கின்றி
வையகத்துக்கு இயம்பும்
வளமான விற்பன்னர்கள்.

வீரமுனை வானவர்கோன்.

## நிம்மதி போயாச்சு

நிம்மதி ஓடிப் போயாச்சு- இப்போ
நெருக்கடி நிலைமை வந்தாச்சு
சும்மா இருக்கவும் முடியல்ல- மூலை
சுருண்டு கிடக்கவும் மனமில்லை.

வீதிக்குத் துப்பாக்கி வந்தாச்சு - அதன்
வேட்டுக்கு உயிர்கள் குறியாச்சு
பாதிக்கு மேலினம் அழிவாகும் - எண்ணி
பார்த்திட ஆயுளும் குறைவாகும்.

வானிலே பொம்பரும் வட்டமிடும் - இடை.
வந்து சுழன்றுமே குண்டு விடும்
கானின் விலங்கதாய் மாந்தரோட - இதை
கண்டு ஹெலியதும் சுட்டு விழ்த்தும்.

சுற்றி வளைப்புகள் தொட்டு வர - பெரும்
தொல்லைகள் சூழ்ந்துமே கொண்டாச்சு
பற்றி எரியுமே வீடுகளும் - உயிர்
பறித்த உடல்களும் சேர்ந்தெரியும்.

மடியில் நெருப்புடன் அம்மாவும் - துடி
துடித்த மனதுடன் அப்பாவும்
இடிந்த உளத்துடன் அண்ணாவும் - இங்கு
ஒடிந்த நிலையினில் உள்ளாரே.

-கேணிப்பித்தன்-

## தீர்வு இதோ!



மொழிப் பிரச்சனைக்கு
புதிய தீர்வு...!

தமிழ் மாணவர்களுக்கு
சிங்கள ஆசிரியர்கள்-
ஆங்கிலம் கற்பிப்பது...!

கோவுஸ்ஸ ராம்ஜீ-எல்ல.

## அமுதும் நஞ்சும்

உனை
அமுது என்றேன்!
யாருக்கும் தெரியாமல்
பருகு என்றாய்!

பூ மணத்தது;
நீ புன்னகைத்தாய்.
தேன் தெறித்தது;
நீ காதல் மொழி சொன்னாய்!

வான் சிவந்தது;
நீ வெட்கப்பட்டாய்!
தேர் வடம் இழந்தது;
நீ நடைபயின்றாய்!
நெஞ்சில் போர் மூண்டது;
நினைவுகளுக்குள்..!

நீ பார்வை கணை தொடுத்தாய்!
காதல் வேர் விட்டது!
நீ....
விதை போட்டாய்;
ஊருக்கு எட்டியது!

உனக்கு என்னைத்
தெரியாதென்றாய்;
கனவுக்குள் விழுந்து
விட்டேன்!
காற்றாகி எனைக்
கருக்கி விட்டாய்....!

யாருக்கும் தெரியாமல்
பருகினால் நீ அமுதுதான்!
ஊர் கண்டபின்தான்
உணர்ந்தேன்-
உண்டது எனை அழிக்கும்
நஞ்சென்று...!

ஜெயந்தி ஜெய்சங்கர்-கொழும்பு 13



## காத்திருப்பேன்....!

என் கற்பனைகள்
தடவிப் பார்க்கும்
இருதயம் நீதானா....?

என் கனவுகள்
குளித்து வரும்-
பால் நதி நீதானா....?

இல்லையானாலும்
பரவாயில்லை....

உன் இருதயம்
என் இருதயத்தோடு
பழகட்டும்....!

உன்னுடைய உயிர்
என்னுடைய உயிரோடு
ஒட்டிக் கொள்ளட்டும்...!

என் வாலிபத்தை
உன் வாலிபம்
உடைக்கட்டும்!

எனது வாழ்க்கையில்
உனது வாழ்க்கையும்
உனது வாழ்க்கையில்
எனது வாழ்க்கையும்
உரசி
தீப்பற்றிக் கொள்ளட்டும்....!

எனது உணர்வுகள்
அரைவாசியும்,
உனது உணர்வுகள்
அரைவாசியும்;
ஒன்றோடு ஒன்று
கைகோர்த்து
சொர்க்கம் போகட்டும்....!

நீ..
சம்மதம் தருவாயா.....?

நீ வருவாயா...
என் பிருந்தாவனத்துக்கு?
நீ வருவாயா....
என்
இளமையின் அந்தப்புரத்துக்கு?
நீ வருவாயா...
என்
கனவுகளின் ஞானமடத்துக்கு?

நீ வருவாயோ....!
இல்லையோ...!

உன் ஞாபகங்களாலேயே
நான் வாழ வேண்டும்...!
உன் நாமதங்களாலேயே
நான் எரியவேண்டும்....!

ஸாபிறா ஏ மஜீத்-அக்கரைப்பற்று.



இது பற்றி என்னால்
சத்தம் போட்டு
அழக்கூட முடியாது..!
காரணம்-
நான் ஒரு ஊமை;
நான் ஒரு குருடன்;
நான் ஒரு செவிடன்!
ஆதலினால்
நான் ஒரு தமிழன்..!

## இரத்தம் தோய்ந்த மண்





என் கண்ணீரைக்கூட
கன்னம் வழியே
வெளியேற விடாமல்
உள்வழியால்
இதயம் நோக்கிச் செல்வதற்கு
ஏற்பாடு செய்திருக்கிறேன்...!
காரணம்-
கண்ணீரைச் சேமிக்க வேண்டும்...
எதிர்காலத்தில் அழுவதற்கு!

அங்கு சிந்திக் கொண்டிருக்கும்
என் இரத்தத்திற்காக
இங்கிருந்து ஒப்பாரி வைக்கிறேன்!

துப்பாக்கிகளைப் பற்றி
இம்மியளவும் தெரியாதவர்கள்,
ஆயுதங்கள் பற்றிக்
கனவுகூட காணாதவர்கள்
தேவாலயத்திலிருந்து
தேவலோகம் சென்றதை யெண்ணித்
தனியாகப் புலம்புகிறேன்!

அந்தப் போதனா
வைத்தியசாலையில்
சதைச் சகதியாய்
சிதறிக் கிடக்கும்
மனித உடல்களுக்கு மத்தியில்
மனிதாபிமானத்தைத் தேடுகிறேன்!

ஒன்றுமேயறியாத
தாய்மாரும் குழந்தைகளும்
தலை சிதறி இறந்ததைக் கண்டு
நெஞ்சு குமுறுகின்றது!

செல்லுங்கள்..
அப்பால் செல்லுங்கள்!
தயவு செய்து என்னைத்
தனிமையில் இருக்கவிடுங்கள்-
அந்த இரத்தம் தோய்ந்த மண்ணில்
ஒரு வெள்ளை ரோஜாச் செடியை
நடுவது பற்றிச் சிந்திக்க வேண்டும்!

எம்.சுரேஷ்.

## ஒற்றைச் சிறகு

என் ஒற்றைச் சிறகை
உன்னோடு
எடுத்துக் கொண்டு
வானத்தை எனக்கு
விட்டு வைத்துள்ளாய்!

அன்பின் சிகரங்களில்
எனை
ஏற்றிவைத்திருந்து விட்டு
அதல பாதாளங்களில்
எனை உருட்டிவிட்டாய்!

நான் வளர்த்த
காதல் நந்தவனம்
வாடிக் கிடக்கிறது!
அத்தனைக்கும்
நீர் வார்த்தே
என் விழிகள்
குழி விழுந்தன!

என் இளமையோடு
காதல் ஒப்பந்தம்
கைச்சாத்தானது- அது
எனக்குக்
கல்லறை கட்டியதைக்
கடைசியில் தான் உணர்ந்தேன்!

என் இளமைப் பூங்கா
கண்ணீரையும்
செந்நீரையும்
சந்தித்தே
சுடுகாடாய்ப் போனது!

ஒற்றைச் சிறகை மட்டுமே
ஏந்தி வந்த காதல்
எனைப் பறக்க விடவில்லை!

இருட்டு வாழ்க்கை வாழும்
வௌவால்கள் கூட
கொடுத்து வைத்தவைதான்!
நிலாக்கால
நிசிகளில்
தன் சோடியோடு
பறந்து திரியும்
பரவசம்
நம்மில் யாருக்குக்
கிட்ட முடியும்?

நான்...
ஒற்றைச் சிறகை
வைத்துக் கொண்டு
இன்பச் சிகரங்களின்
அடிவாரங்களில்
அலைந்து திரிகிறேன்!

பஹீமா ஜஹான் ஸவாஹிர்-மெல்சிரிபுர




## இந்த வாரம் உங்கள் பலன்

(06.08.95 முதல் 12.08.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

கர்க்கடகம் - சூரியன், வெள்ளி
சிம்மம் - புதன்
கன்னி - செவ்வாய்
துலாம் - இராகு
விருட்சிகம் - வியாழன்
கும்பம் - சனி
மேடம் - கேது

சந்திரன்-, விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| புதன்- துன்பம் மறையும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனப்போராட்டம். | காலை 6 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணக்கஷ்டம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்-வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- புதிய முயற்சி, பெரியோர் நட்பு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- மனக் கஷ்டம், பண இழப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- பணவரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | மு.ப. 10 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு | காலை 7 மணி |
| புதன்- மனக்கவலை, உறவினர் உதவி | பி.ப. 1 மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள் வரவு | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் பழி, பணக் கஷ்டம் | காலை 6 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம் | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மனக்கவலை நீங்கும் | காலை 7 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பணச் செலவு | பகல் 12 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| புதன்- பகை நீங்கும், காரிய தாமதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- இனசன விரோதம் முயற்சி தடை. | காலை 6 மணி |
| வெள்ளி- உயர்ந்த நட்பு, அந்நியர் சகாயம். | காலை 9 மணி |
| சனி- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், கௌரவக் கேடு. | காலை 8 மணி |
| செவ்வாய்-பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- பயனற்ற செயல், காரியானுகூலம். | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி-வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு அதிகம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள் செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | காலை 6 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருட்செலவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | காலை 6 மணி |
| வெள்ளி- துயர் அதிகம், கௌரவம் குறையும். | காலை 7 மணி |
| சனி- முயற்சி பலிதம், வீண்குறை கேட்டல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 9

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, தொழில் சிறப்பு. | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்-துயர் நீங்கும், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- மறைமுக எதிர்ப்பு, பொருள் நட்டம். | காலை 6 மணி |
| வியாழன்-வீண் குறைகேட்டல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி-துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| சனி- பயனற்ற செயல், உறவினர் உதவி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக்கவலை. | காலை 6 மணி |
| திங்கள்- பகை நீங்கும், உறவினரால் கவலை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்-காரியத் தடை, பணச்செலவு. | காலை 7 மணி |
| புதன்- வீண்கவலை, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய நட்பு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப. 2 மணி |
| சனி- பயனற்ற செயல், மனைப் பாக்கியம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| திங்கள்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | காலை 6 மணி |
| வியாழன்- உறவினர் பகை, உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |
| வெள்ளி-தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- உறவினர் பகை, மனக்கவலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -1

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், மனக்கவலை. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், காரியானுகூலம். | காலை 7 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- மனமகிழ்ச்சி, வீண்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| சனி- புதிய முயற்சி, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7


### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்-காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- மனக்கவலை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- பொருள் வரவு, காரியத் தடை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5





## சிரிக்கும் அரும்பு

அன்னைமடித் தொட்டிலிலே
ஆடுதொரு பிள்ளை- தேன்
கரும்பான இதழ்களிலே
அரும்புதொரு முல்லை!

சின்னமணி வாய்மலர
சிந்துதம்மா முத்து! - நம்
சிந்தையெல்லாம் மயங்குதம்மா
தாய் கொடுத்த சொத்து!

புன்னகையின் ஓவியத்தில்
புதுமைமிகும் காட்சி! - இளம்
பூவிழியின் ஓரத்திலே
பொற்கவிதை ஆட்சி!

மென்மை இதழ் குறுநகையில்
மேவி வரும் தென்றல்!-தமிழ்
மேன்மையதன் வாயசைவில்
மின்னல் மயப்பந்தல்

எம்.முத்துகிருஷ்ணன்

யாரும் பணிந்திடும் தெய்வம்-பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று- இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறு கதை

# குருதட்சணை

**வே**தபுரி நாட்டு அரசனுக்கு ஒரே ஒரு மகன். அவனது பெயர் பீமசேனன். அரசர் தன் மகன் பீமசேனனுக்கு எல்லாக் கலைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும் என எண்ணினார்.

அதனால் தனது மந்திரியை அழைத்து,

"நமது பீமசேனனுக்கு சகல கலைகளையும் கற்றுத்தர ஒரு ஆசான் தேவை. அவர் எங்கிருந்தாலும் அழைத்து வாருங்கள்," என்று உத்தரவிட்டார்.

மந்திரி பல இடங்களுக்கு அலைந்து திரிந்து மறைமலை அடிவாரத்தில் குருகுலத்தில் வசித்து வந்த மாமுனிவரே சகல கலைகளிலும் வித்தகர் என அறிந்து, அவரை அணுகி மன்னரது மகன் பீமசேனனுக்கு கலைகளைக் கற்றுத்தர அவரை அரண்மனைக்கு வரும்படி அழைத்தார்.



ஆனால், அம்முனிவரோ காட்டை விட்டு விட்டு நாட்டுக்கு வர மறுத்துவிட்டார்.

"அரசகுமாரனானாலும் சரி, சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி, என் குருகுலத்திற்கு வந்து வித்தை கற்றுக் கொள்வதையே நான் விரும்புகின்றேன். அரசர் மகனையும் இங்கே அனுப்பி வையுங்கள். அதே சமயம் இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகின்றேன். மன்னன் மகன் என்பதற்காக அவருக்கு எந்தவிதத் தனிச் சலுகையும் தர இயலாது. குருகுல மாணவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்துதான் பயில வேண்டும். இதற்குச் சம்மதமானால் அவனை அழைத்து வாருங்கள்" என்றார்.

முனிவர் சொன்னதை அமைச்சர், அரசரிடம் போய்ச் சொன்னதும், அரசர் வெகுண்டு எழுந்தார்.

"ஆ, என் எல்லைக்குள் தவம் இருக்கும் ஒரு முனிவருக்கு இவ்வளவு அகங்காரமா?" எனச் சீறினார்.

அமைச்சர் அவரைச் சமாதானப் படுத்தி,

"அரசரே! நம் இளவரசருக்கு கல்வி, கலை கற்கத்தகுந்த ஆசான் அவரே என்பதில் துளியும் சந்தேகமில்லை. ஆகையால் அவரிடம் கலை கற்க நமது இளவரசரை அனுப்பிவையுங்கள். கலைப்படிப்பு முடிந்து இளவரசர் நாடு திரும்பிய பிறகு அந்த முனிவருக்கு நீங்கள் விரும்பும் தண்டனையைக் கொடுங்கள்" என்றார்.

அமைச்சர் சொன்னதிலும் நியாயம் இருப்பதை உணர்ந்த அரசர்,

"அப்படியே ஆகட்டும். பீமசேனனை ஒரு நல்ல நாள் பார்த்து அந்த முனிவரிடம் ஒப்படைத்துவிட்டு வாருங்கள்" என்றார்.

அமைச்சரும் அவ்வாறே செய்தார்.

□□

**மூ**ன்று ஆண்டுகள் முடிந்ததும் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான் பீமசேனன். அவனை நாடு திரும்பும்படி முனிவர் பணித்தார். அரசருக்கும் பீமசேனனை அழைத்துச் செல்லும்படி சொல்லி அனுப்பினார்.

போகும்போது பீமசேனன் முனிவரான தன் குருவைப் பார்த்து, "தங்களுக்குரிய குருதட்சணை செய்ய விரும்புகிறேன்" என்றான்.

"சிஷ்யா! நீ தற்போதைக்கு குருதட்சணை ஏதும் தரவேண்டாம். அதை நான் வேண்டும் போது கேட்டுப் பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறி வழி அனுப்பி வைத்தார்.

பீமசேனன் நாடு திரும்பியதும், கோபம் தீராத அரசர் தமது பணியாட்களை அனுப்பி குருகுலத்தை எரித்துவிட்டு வரும்படி தமது வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டார்.

□□

**இ**ளவரசருக்குப் பிறந்த நாள் கொண்டாட அரசர் தடல்புடலான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இளவரசர் தனது பிறந்த நாளன்று தமது குருவிடம் ஆசி பெற விரும்பி குருகுலம் சென்றார். அங்கே அது எரிந்து சாம்பலாகியிருந்தது. முனிவர் ஒரு மரத்தடியில் அமர்ந்து தவம் புரிந்து கொண்டிருந்தார். பீமசேனனுக்கு அங்கு போனபிறகே தனது தந்தை செய்த தீங்கு பற்றித் தெரியவந்தது.

"என் குருவுக்குத் தீங்கு செய்தவர் என் தந்தையாக இருந்தாலும் நான் விடேன். அவரைப் பழிக்குப் பழிவாங்குவேன்." என பீமசேனன் சீற்றமடைந்தான்.

அப்போது முனிவர் பீமசேனனை அமைதிப்படுத்தி,

"பீமசேனா! நீ விசுவாசமுள்ள சீடன் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதேசமயம் ஒரு தந்தைக்கு மகன் என்பதைப் புரிந்துகொள். என் குருகுலத்தில் படித்தவனுக்கு பழிவாங்கும் உணர்வு இருக்கக்கூடாது. அன்று நீ எனக்குக் குருதட்சணை கொடுப்பதாக வாக்களித்திருந்தாய். அதை நான் இன்று கேட்கிறேன். கொடுப்பாயா?" என்று கேட்டார்.

"என்ன ஸ்வாமி கேளுங்கள்" என்றான் பீமசேனன்.

"உன் தந்தையைக் கொல்ல மாட்டேன் என எனக்கு நீ வாக்குறுதி கொடு. அதுவே நான் கேட்கும் குருதட்சணை" என்றார் முனிவர்.

முனிவரின் உயர்ந்த குணத்தை எண்ணிக் கண்கலங்கிய பீமசேனன் முனிவர் கேட்ட குருதட்சணையைக் கொடுத்துவிட்டு, முனிவரின் கால்களில் தொட்டு வணங்கி ஆசி உடன் விடை பெற்றுச் சென்றான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.08.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 102
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 99

பரிசுக்குரியவர்:
பாலகிருஷ்ணன் இலயராஜா
கோட்லோஜ் தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| வீரையா ஜெயச்சந்திரன்<br>கே/தெ.த.மகா வித்தியாலயம், தெஹியோவிற்ற. | விஜயதாஸ் பெர்னாண்டோ<br>சென். அந்தோனிஸ் மகா வித்தியாலயம், கொழும்பு-13. |
| வி. தர்மராஜ்<br>இ/பரியோவான் தமிழ் மகா வித், இறக்குவானை. | ஏ.கே.கிரிஸ்டி குமார்<br>றோயல் கல்லூரி, கொழும்பு-07. |
| எஸ். பாத்திமா சுமையா<br>நீர்கொழும்பு. | தங்கராஜா றஜிதரன்<br>கல்லடி, மட்டக்களப்பு |
| செல்வி. நி. சுரமியா<br>நீர்கொழும்பு. | ஏ.எல்.பாத்திமா சக்கியா<br>தி/அந்நகார் மகளிர் ம.வி. மூதூர். |
| ஏ. கைறூன்நிசா<br>அல்.இக்பால் மகா வித்தியாலய, கொழும்பு-02. | இ.மாஜிதா<br>மட்/அஹமட் பரீட் வி. ஏறாவூர்-06. |

## கை குலுக்குதல்



**நா**கரிகத் தின் வெளிப்பாடாக கையை நீட்டிக் குலுக்கும் வழக்கம் உலகம் முழுவதும் உள்ளது. இது எப்படி வந்தது தெரியுமா?

முற்காலத்தில் வீரர்கள் கையில் வாள் அல்லது துப்பாக்கி வைத்திருப்பார்கள். 'என் கையில் ஆயுதம் எதுவும் இல்லை. தாக்குவேன் என்ற பயம் வேண்டாம். நாம் நட்புறவுடன் இருப்போம்.' என்பதைக் குறிப்பிட சந்திக்கும் இருவர் தமது கைகளை நீட்டிக் குலுக்குவார்கள். இப்பழக்கம் நிலைத்து விட்டது.

## வாரம் ஒரு நாடு



### ஈக்குவடோர்.

தலைநகர்: குவைட்டோ
பரப்பளவு: 2,83,561 சதுரகிலோமீற்றர்.
மக்கள் தொகை: 1.13 கோடி
மொழி: ஸ்பானிஷ், பழங்குடி கிளைமொழி
எழுத்தறிவு: 90%
சமயம்: கிறிஸ்தவம்
தனிநபர் வருமானம்: 1070 டொலர்கள்.
அமைவிடம்: தென் அமெரிக்காவின் வட மேற்கில் அமைந்துள்ளது. இதன் வடக்கில் கொலம்பியாவும்; கிழக்கிலும், தெற்கிலும் பெருவும் எல்லைகளாக அமைந்துள்ளன.
வரலாறு: ஆரம்ப காலத்தில் ஸ்பெயினின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. 1830ல் சுதந்திரமடைந்தது. 1968 முதல் இராணுவ ஆட்சியும், மக்களாட்சியும் மாறி மாறி வந்தன. 1979ல் மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிடம் இராணுவம் பொறுப்புக்களை ஒப்படைத்தது. அண்டை நாடான பெருவுடன் எல்லைப் பிரச்சனை இருந்து வருகின்றது. அதிபரும், பாராளுமன்ற உறுப்பினர்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
பொருளாதாரம்: உலகில் வாழைப்பழ உற்பத்தியில் முதன்மை பெறும் ஈக்குவடோர் கரும்பு, ஆபிரிக்கப்பனை, அரிசி ஆகியவற்றையும் உற்பத்தி செய்கின்றது. வெள்ளித்தாது முக்கியசுரங்கப் பொருள். நிறைந்த அளவில் தங்கம், துத்தநாகம் ஆகியனவும் கிடைக்கின்றன. பெற்றோலிய உற்பத்தி அதிகரிக்கப் பட்டுள்ளது.

## அறிவோம் மனதில் பதிவோம்



**நீ**லநிற இறக்கைகளும், கபில நிற வாலும் கொண்டிருக்கும் பறவையான வானம்பாடியை உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். நியூஸிலாந்து கடற்கரைத் தீவுப்பகுதிகள் தவிர உலகம் முழுவதும் இப்பறவை இனம் உள்ளது. வானம்பாடி பறவைகளில் 75 வகைகள் உள்ளன. வானம்பாடிப் பறவையில் உள்ள விசேட இயல்பு என்னவென்றால், இப்பறவை தொடர்ந்து ஐந்து நிமிடங்களுக்குப் பாடும். அத்துடன் பறந்து கொண்டு பாடும் இயல்புடையது. வானம்பாடிகளிலே புதர்வானம்பாடி என்றொரு இன ஆண் பறவையானது, பறந்தபடி பாடிக்கொண்டே கரணம் அடிப்பது போன்ற வித்தைகளைச் செய்யும்.

## சிறிய தேசிய கீதம்

உலகிலேயே மிகச் சிறியதேசிய கீதம் ஜப்பானிய தேசியகீதம் என்று அறிந்திருப்பீர்கள் அல்லவா?

அதன் பொருள் என்ன தெரியுமா?

இதுதான்:

"உங்களது ஆட்சி பத்தாயிரம் ஆண்டுகால ஆட்சிக்காலம். ஆளுங்கள்! ஆண்டவரே ஆளுங்கள்! எது வரை என்று கேட்கிறீர்களா? இன்றைய கூழாங் கற்கள் மாபெரும் பாறையாக உருவாகும் வரை... ஆண்டவரே எங்களை ஆளுங்கள்!"



## விடுகதைகளும் விடைகளும்

1. தண்ணீர்க் கரையோரம் தவமிருக்கும் வெள்ளைச் சாமியார். அவர் யார்?
2. மேலே பறப்பவனுக்குக் கீழே கடிவாளம், அவன் யார்?
3. ஆயிரம் பேர் அணிவகுத்துப் போனாலும் வந்த சுவடு தெரியாது. அவர்கள் யார்?

விடைகள்

www.padippakam.com

# ஒரு நிமிச நிசப்தம்

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

அந்த மாத நாவலைப் படித்து முடித்து கீழே வைத்தான் சபரி.

இடம்: அக்ரிகல்சுரல் பொட்டனிகல் கார்டன்.

நேரம்: இருட்டிக் கொண்டு வருகிற சாயந்தரம் ஆறுமணி.

சபரிக்கு எதிரே முழங்கால்களை கட்டிக் கொண்டு அமர்ந்திருந்த அபிநயா கேட்டாள்:

"நாவல் எப்படியிருக்கு சபரி?"

"பரவாயில்லை. இதேமாதிரி கதையை ஹாட்லி சேஸ் கூட எழுதியிருக்கார். இப்போ எதுக்காக இந்த நாவலை என்னைப் படிக்கச் சொன்னே?"

"காரியமாத்தான்!"

"எனக்குப் புரியலை.."

"நாவலில் வருகிற தினகர் தன்னோட செலவுக்கு பணம் வேணும்ங்கிறதுக்காக ஒரு கிட்னாப்பிங் பிளானைச் சொல்றான்...அந்தப் பிளான் எனக்குப் பிடிச்சிருக்கு...."

"அபி....நீ என்ன சொல்றே?" லேசாக பதற்றமானான் சபரி. அபிநயா புன்னகைத்தாள். "நானும் நீங்களும் அந்த பிளானை எக்ஸிகியூட் பண்ணப் போறோம்- கொஞ்சம் ரிஸ்கியான பிளான்தான்.. கேர்புல்லா பண்ணினா சக்ஸஸ்தான்...!"

சபரியின் முகம் தப்பிப் போயிருந்தது.

அபிநயா தொடர்ந்தாள்,

"ஒரு ரெண்டு மணி நேரம் நாம இந்த கடத்தல் நாடகத்தைப் போட்டால் போதும் சபரி, பத்து லட்சத்தை கண்ணால பார்த்துடலாம்... நான் கடத்தப்பட்டிருக்கேன்னு சொன்னா போதும்; அவர் ஒரு நிமிஷம்கூட தாங்க மாட்டார்....பணத்தைக் கொண்டு வந்து கொட்டிட்டு என்னைக் கூட்டிட்டுப் போயிடுவார்."

சபரி பயமாய் நகம் கடித்துத் துப்பினான்.

"அபி, உனக்கு ரொம்பவும் துணிச்சல் அதிகம்"

துணிச்சல் உள்ளவங்கதான் காதலிக்கணும்.... சபரி..நாம இந்தத் திட்டத்தை பணத்துக்காக செய்யலை நம்ம கல்யாணத்துக்காகத்தான் செய்யறோம்.."

"சரி உன்னோட திட்டம் தான் என்ன....? சொல்லு பார்க்கலாம்."

அபிநயா கொஞ்சம் நகர்ந்து சபரியின் அருகே வந்து உட்கார்ந்தாள். பொட்டானிகல் கார்டன் பூராவும் சாம்பல் தனமான இருட்டு கவிழ்ந்து கொண்டிருந்தது. தொலை தூரம் பட்சி வர்க்கங்கள் ஏகப்பட்ட இரைச்சலோடு மரங்களை அடைத்துக் கொண்டிருந்தன. கார்டனில் அலைந்து கொண்டிருந்த சொற்ப கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாய் கலைய ஆரம்பித்தார்கள்.

அபிநயா சொன்னாள்: "நாளைக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு நம்ம திட்டம் ஆரம்பமாகுது சபரி. நீங்களும் நானும் டவுன்பஸ் பிடிச்சு சரவணம்பட்டி போறோம்... அங்கே ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு பத்ரகாளியம்மன் கோயில் இருக்கு. நானும் அப்பாவும் ஒரு தடவை அந்தக் கோயிலுக்குப் போயிருக்கோம். கொஞ்சம் பாழடைஞ்சு போயிருந்தாலும் அழகான கோயில்."

"அந்தக் கோயில்ல நீ தங்கிக்கப் போறே.... அப்படித்தானே?" சபரி கேட்கத் தலையை ஆட்டினாள் அபிநயா.

"ஆமா... நான் அந்த கோயில்ல இருக்கிற நேரம் நீங்க ரோட்டுக்கு வந்து ஏதாவது ஒரு டெலிபோன் பூத்திலிருந்து எங்கப்பாவுக்குப் போன் பண்ணிப் பேசணும். என்னை உயிரோடு பார்க்கவிரும்பினா பத்து லட்சம் ரூபாயை ஒரு ப்ரீப் கேஸ்ல போட்டு மருதமலை போற ரோட்டுல ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி கொண்டு வந்து வெச்சுட்டுப் போகச் சொல்லணும். பணம் கைக்கு வந்து பதினைஞ்சு நாளானதும் எங்கப்பாக்கிட்ட உங்களை கூட்டிப்போய் எனக்கு வரப்போகிற கணவரா அறிமுகப் படுத்தப்போறேன். கையிலிருக்கிற பத்துலட்ச ரூபா உங்களை அந்தஸ்துக்குக் கொண்டுபோயிடும்....."



"உங்கப்பாவுக்கு விஷயம் தெரிஞ்சுட்டா....?"

"எப்படி தெரியும்.... சபரி, விஷயம் வெளியே வரணும்னா ஒண்ணு நீங்க சொல்லணும் இல்லே நான் சொல்லணும்.."

"ஒரே ராத்திரியிலே நான் பணக்காரனா மாறினா மத்தவங்களுக்கு சந்தேகம் வராதா அபி? முக்கியமா இன்கம்டாக்ஸ் ஆசாமிகளுக்கு.....?"

"உங்ககிட்ட பணம் இருக்கிற விஷயம் வெளியே யார்க்கும் தெரிய வேண்டாம் சபரி. நான் உங்களை அப்பாக்கிட்டே எப்படி அறிமுகப்படுத்தப் போறேன் தெரியுமா? உங்க பூர்வீகம் மலேயான்னு சொல்லப்போறேன். மலேயாவிலே இருக்கப் பிடிக்காமே அங்கிருந்த சொத்து பூராவையும் வித்து இந்தியன் கரன்சியா மாத்திக்கிட்டு-நீங்க இங்கே வந்ததா சொல்வேன்."

சபரி கன்னத்தைச் சொறிந்தான்.

"எனக்கென்னமோ இந்தத் திட்டம் அவ்வளவு சரியா படலை அபி. உங்கப் பாக்கிட்டே ஏகப்பட்ட பொய் சொல்லப் போறோம். ஏதாவது ஒரு பொய்யில மாட்டிக்கிட்டாலும் எல்லாப் பொய்யும் வெட்ட வெளிச்சமாயிடும்."

அபிநயா சிரித்தாள்.

"அப்படி மாட்டிக்கிட்டாலும் நீங்க கவலைப்பட வேண்டாம் சபரி. உண்மையைச் சொல்லத்தான் நான் இருக்கேனே. எல்லாத்துக்கும் காரணம் நான்தான்னு அப்பாகிட்டே சொல்லிடப் போறேன். எங்க கல்யாணம் நடக்கணும்ங்கிறதுக்காகத்தான் அந்த கடத்தல் நாடகம் போட்டோம்ன்னு உடைச்சு சொல்லிட றேன்."

"அபி"

"ம்"

"அப்படியெல்லாம் செஞ்சுட்டு பின்னாடி அவஸ்தை படறதைக் காட்டிலும் இப்பவே போய் உண்மையைச் சொல்லிட்டா என்ன?"

அபிநயா உதடு பிரியாமல் சிரித்தாள்."சபரி! நம்ம காதல் விவகாரத்தைப் பத்தின நியூஸ் லேசா கசிஞ்சு எங்கப்பா காதுக்கு போனாலும் போதும். நான் வீட்டை விட்டு வெளியே வரமுடியாது. அடுத்த மாசம் நடக்க வேண்டிய என்னோட கல்யாணம் இந்த மாசம் நடந்துடும். அப்புறம் நீங்க தாடி வளர்த்துக்கிட்டு ஆபீஸுக்கு போயிட்டு வரவேண்டியிருக்கும்."

சபரி ஒன்றும் பேசாமல் புல்லைப் பிடுங்கி பிடுங்கி வெறித்த பார்வையோடு வீசிக்கொண்டிருந்தான். அபிநயா அவனுடைய தோளைப்பற்றி உலுப்பினாள்.

"என்ன பதிலையே காணோம்?"

"நிறைய யோசிக்கணும் அபி."

"இதுல யோசனை பண்றதுக்கு ஒண்ணுமேயில்லை சபரி. இது ஒரு விளையாட்டு மாதிரிதான்."

"விளையாட்டே சில சமயம் விபரீதமாயிடும்!"

"அது நாம ரெண்டு பேரும் சேர்ந்து விளையாடற விளையாட்டு; விபரீதம் வர்றதுக்கு வாய்ப்பே இல்லை சபரி. நாம எதையுமே செய்யாமே இருந்தாத்தான் கல்யாணங்கிற பேர்ல விபரீதம் வரும்."

"அபி..."

"சொல்லுங்க சபரி..."

"நாளைக்கு விஷயம் வெளியே தெரிஞ்சு உங்கப்பா எம்மேல கோபப்படுறப்போ நீதான் உண்மையைச் சொல்லணும்.. அந்தப் பழியிலிருந்து நீதான் காப்பாத்தணும்...."

"நானிருக்க பயமேன் என் கோழைக் காதலனே!"

அபிநயா கரத்தை உயர்த்தி அபயம் காட்டிச் சிரித்தாள்.

மறுநாள் சாயந்தரம் ஆறுமணி.

காந்திபுரத்தில் சிட்டி பஸ்ஸைப் பிடித்து - அரைமணி நேரம் பயணம் செய்து பதினைஞ்சு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த சரவணம்பட்டியில் இறங்கிக் கொண்டார்கள் சபரியும் அபிநயாவும்.

சாயந்தர சூரியன் சாகும் தறுவாயில் இருந்தான்.

சரவணம்பட்டிக் கிராமம் அரை கிலோமீட்டர் தூரத்தில் ஏராளமான குடிசைகளோடு தெரிய, அதைப்புறக் கணித்து விட்டு-பொட்டல் வெளியில் தெரிந்த ஒற்றையடிப் பாதையில் நடந்தார்கள். சபரி கேட்டான்,

"கோயில் ரொம்ப தூரமா....அபி?"

"பக்கந்தான்.... பத்தே நிமிஷம்..... போயிடலாம்..."

"நீயும் உங்கப்பாவும் எதற்காக இந்தக் கோயிலுக்கு வந்தீங்க?"

"விலாவாரியா சொல்லட்டுமா....? இல்லே சுருக்கமா சொல்லட்டுமா?"

"சுருக்கமாவே சொல்லு..."

"எங்கப்பாவுக்கு சொந்த ஊர் சத்திய மங்கலம். அவர் இந்த கோயமுத்தூருக்கு வாறப்போ கையில காசில்லாமே தான் வந்தாராம். பஸ்ஸுக்கு தர்ற காசை மிச்சம் பிடிச்சா ஒருவேளை வயிறார சாப்பிடலாமேன்னு நினைச்சு சத்திய மங்கலத்திலிருந்து கோயமுத்தூருக்கு நடந்தே வந்தாராம்.... வர்ற வழியில ஒரு ராத்திரி பூராவும் அந்த பத்ரகாளியம்மன் கோயில்லதான் படுத்து தூங்கினாராம்.... அதை அடிக்கடி நினைச்சுக்கிட்டு இந்த கோயிலுக்கு வந்துடுவார்...."

"உங்கப்பாவுக்கு ஒரு நல்லவாழ்க்கையைக் கொடுத்த அதே கோயில் தான் இப்ப நமக்கும் ஒரு வாழ்க்கையை கொடுக்கப் போகுது...."

"நானும் அந்த எண்ணத்தில் தான் இந்த இடத்தை செலக்ட் பண்ணினேன் சபரி..."

கொஞ்ச தூரம் போனதும் கோயிலின் கோபுரம் சின்னதாய் தெரிந்தது.

"அந்தக் கோயிலா...?"

"அதேதான்..."

சபரி சுற்றும் முற்றும் பார்த்தான்.

பார்வை எட்டின வரைக்கும் ஆள் நடமாட்டமில்லை. வரிசையாய் தென்னை மரங்களும், காய்ந்துபோன வயல் காடுகளும் விரிந்து கிடந்தன.

"என்ன அபி.... ஆள் நடமாட்டத்தையே காணோம்...? இந்த இடத்தில நீ எப்படி தனியா இருக்கப் போறே...?

"ஆள் நடமாட்டம் இருக்கிற இடத்துல தான் பயம் வரும் சபரி. இந்தக் கோயிலுக்கு யாரும் வரமாட்டாங்க... நம்ம திட்டத்துக்கு தோதான இடம்...."

கோயிலை நெருங்கினார்கள்.

கோயில் வெகு புராதனம்.

"அபி, இந்தக் கோயிலுக்கு பூசாரி இல்லையா....?"

"இருக்காராம்... ஆனா அவர் தினசரி வரமாட்டாராம். அமாவாசையன்னிக்கு மட்டும் வருவாராம்.... ஜனங்களும் அன்னிக்குத்தான் வருவாங்களாம்..."

"நான் போன் பண்ணப் போயிட்டா... நீ மட்டும் இந்த இடத்துல எப்படி தனியா இருப்பே.... அபி? இந்த இடத்தைப் பார்த்தா எனக்கே ஒரு மாதிரியாக இருக்கு..."

அபிநயா சிரித்தாள்.

"என்னைப் பத்தி நீங்க கவலைப் படாதீங்க...சபரி...நீங்க எங்கப்பாவுக்கு டெலிபோன் பண்ணப் போயிட்டா எனக்கு துணையாயிருக்கிறதுக்காக ஒருத்தரை கூட்டிட்டு வந்திருக்கேன்...."

சபரி முகம் மாறினான்.

"யார் வந்திருக்காங்க...?"

"திருவாளர் பிஸ்டல்..." தன் தோளில் ஊசலாடிக் கொண்டிருந்த டம்பப்பையை பிரித்து அந்தச் சின்ன பிஸ்டலை எடுத்துக் காட்டினாள் அபிநயா.

"பயங்கரமான முன்னேற்பாடு..." 'சபரி புன்னகைத்தான்.

அபிநயா தன் கையிலிருந்த வாட்சைப் பார்த்தாள்.

மணி ஆறு பத்து.

மேற்கு திசை காயம்பட்டுப்போய் ரத்தமாய் சிவந்திருந்தது.

"நீங்க புறப்படுங்க சபரி...அப்பா இந்நேரம் வீட்டுக்கு வந்திருப்பார். நீங்க போன் பண்ணினா கிடைப்பார்..."

"ம்..."

"குரலை கொஞ்சம் ஏற்ற இறக்கமாக பேசுங்க..."

"ம்..."

"என்ன சபரி ஒரு மாதிரியாயிட்டீங்க.."

"பயம்மாயிருக்கு அபி..."

"பழையபடி முருங்கமரம் ஏறிட்டீங்களா...?" தன்னுடைய இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்து சபரியை முறைத்தாள் அபிநயா.

"சரி....சரி...போறேன் அபி..." நகர்ந்தான் சபரி.

"டெலிபோன் பூத்திலிருந்து பேசறப்போ ஜாக்ரதை சபரி.....! பக்கத்துல எவனாவது ஆள் இருந்துடப் போறான்... நல்லா பார்த்துக்கிட்டு பேசுங்க..."

"ம்..."

சபரி கோயிலை சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு திரும்பி ரோட்டை நோக்கி நடந்தான். இருட்டு வேகமாய்க் கவிய ஆரம்பித்தது.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: வேணுராஜ் ஆதிமூலம்
வயது: 25
முகவரி: 4/4, புகையிரத விடுதி, ஆவலிய, நுவரெலியா.
பொழுதுபோங்கு: பத்த்திரிகை, நண்பர் தொடர்பு.



பெயர்: எம். சித்தீக்
வயது: 23
முகவரி: இல. 57, திகன புதிய நகர், ரஜவெல்ல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம்,



பெயர்: ரீ. அஜீன்
வயது: 22
முகவரி: சமீரகம, முந்தல்.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை, தொலைக்காட்சி, கிரிக்கெட்.



பெயர்: சி. சாந்தகுமாரி
வயது:-16
முகவரி: விஷ்ணு ஆலய வீதி, பேத்தாழை, வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: டீ.வி., வானொலி, பத்திரிகை.



பெயர்: ஏ. அலெக்ஸ்
வயது: 25
முகவரி: AFRAS CO. P.O. BOX -7709, JEDDAH-21472, K.S.A.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: எம். நஸார்
வயது: 33
முகவரி: ARRAYYAN POOLS CO. P.O.BOX-3366, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்,டீ.வி., வானொலி.

பெயர்: ஆர். திவாகரன்
வயது: 24
முகவரி: WALDHEIM STR-04, 3012- BERN, SWITZERLAND.
பொ.போ: கதை கவிதை படித்தல், சினிமா பார்த்தல்.

பெயர்: ஆர். நஸ்ருதீன்
வயது: 35
முகவரி: P.O.BOX NO-213, AL- SURRA, KUWAIT.
பொ.போ: பேனாநட்பு, வானொலி, உதைபந்து.

பெயர்: எம். பாலா
வயது: 22
முகவரி: 160, பிரதான வீதி, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: வானொலி,டி.வி.,பத்திரிகை ,பேனாநட்பு.

பெயர்: ஏ. ஜாபிர் அலி
வயது: 21
முகவரி: 28, தெமட்டகொட வீதி, கொழும்பு-09.
பொ.போ: பாடல்கள், நண்பர் தொடர்பு.

பெயர்: கே. குமார்
வயது: 20
முகவரி: பிரதான் வீதி, நொச்சியாகமம்.
பொழுதுபோக்கு: உதைபந்து, பாடல்கள்.

பெயர்: ஏ. அஸீஸ்
வயது: 20
முகவரி: 959, கடற்கரை வீதி, புதிய காத்தான்குடி-03.
பொ.போ: பத்திரிகை வாசித்தல்.

www.padippakam.com

# மக்சீம் கார்க்கி

# 36

இன்றும் அது போலவே இருந்தது அவளுக்கு. தனக்கு வரப்போகும் புதிய துயரத்தை அவள் உணர முனைந்த போது, தனக்குத்தானே, யாரோ ஒரு இனந்தெரியாத நபருக்குச் சொல்வது போலப் பேசிக்கொண்டாள்:

"வருவதை ஏற்றுக்கொள்!"

இந்த எண்ணம் அவளது இதய வேதனையைச் சமாதானப்படுத்தியது; அவளது இயத்துக்குள்ளே தந்தி நாதம் போல் ஒலி எழுப்பியது.

ஆனால் அவளது மனத்தின் அதல பாதாளத்திலே, மங்கிய, எனினும் இடை நீங்காத நம்பிக்கையொன்றை அவள் வளர்த்து வந்தாள். எந்தச் சக்தியும் தன்னிடமிருந்து சகலவற்றையும் பறித்துச் சென்றுவிட முடியாது; நிச்சயம் ஏதாவது மிஞ்சவே செய்யும்-என்பதே அந்த நம்பிக்கை.



ஒரு நாள் அதிகாலையில், பாவெலும் அந்திரேயும் வேலைக்காகப் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் மரியா கோர்சுனவா ஜன்னல் கதவைத்தட்டி யவாறு சத்தமிட்டாள்:

"அவர்கள் இஸாயைக் கொன்று விட்டார்கள்! வா, போய்ப் பார்க்கலாம்......"

தாய் திடுக்கிட்டாள். அவளது மனத்தில் கொலைகாரனின் பெயர் மின்னிப் பளிச்சிட்டு மறைந்தது.

"யார் கொலை செய்தது?" என்று கேட்டுக்கொண்டே ஒரு போர்வையை எடுத்துத் தோளில் போட்டுகொண்டாள் தாய்.

"கொன்றவன் அவன் பக்கத்திலே உட்கார்ந்து ஒப்பாரி வைக்கவில்லை. கொன்று தள்ளிவிட்டு ஓடியே போய் விட்டான்!"

அவர்கள் இருவரும் தெருவழியே போய்க்கொண்டிருக்கும்போது மரியா மீண்டும் தொடர்ந்து பேசினாள்:

"இனிமேல், அவர்கள் மூலை முடுக்கெல்லாம் தேடி அலசிப் பார்த்து, கொன்றவனைக் கண்டுபிடிக்க முனைவார்கள். உன்னுடைய ஆட்கள் நேற்றிரவு வீட்டுக்குள்ளே இருந்தது நல்ல காலத்துக குத்தான். அதற்கு நானே சாட்சி. நான் இரவு நடுநிசிக்குப் பிறகு வீட்டுக்கு வந்தேன். அப்போது உன் வீட்டு ஜன்னலை எட்டிப் பார்த்தேன். நீங்கள் அனைவரும் மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தீர்கள்...."

"நீ என்ன சொல்கிறாய், மரியா? அவர்களை எப்படிச் சந்தேகிக்க முடியும்?" என்று பயத்தால் வெலவெலத்துப் போய்க் கேட்டாள் தாய்.

"பின்னே? யார்தான் கொன்றிருப்பார்கள்? எல்லாம் உன் சகாக்களோடு தொடர்பு கொண்ட ஒருவனாகத்தான் இருக்கவேண்டும்" என்று தீர்மானமாகச் சொன்னாள் மரியா:

"அவன் உங்களை வேவு.பார்த்துத் திரிந்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே...."

தாய் திடுக்கிட்டு நின்றாள். அவள் தொண்டை அடைத்தது. தன் நெஞ்சை ஒரு கையினால் அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"அதனால் என்ன? வீணாகப் பயப் படாதே. அவனுக்கு இந்தக் கதி கிடைத்தது ரொம்ப சரி. சீக்கிரம் வா. இல்லையென்றால் அவர்கள் உடலை அப்புறப்படுத்தி விடுவார்கள்" என்றாள் மரியா.

நிகலாய் வெஸோவ்ஷிகோவைப் பற்றிய சந்தேகம் தாயினது கால்களை பின்னுக்கு இழுத்து நிறுத்துவது போல் தோன்றியது.

"அவன் தான்-அவன் இவ்வளவு தூரத்துக்குப் போய் விட்டானா?" என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள் தாய்.

தொழிற்சாலை மதில் சுவர்களுக்குப் பக்கத்தில், சமீபத்தில் தான் எரிந்து சாம்பலாய்ப் போய் மூளியாய் நின்ற ஒரு வீட்டுக்குப் பக்கத்தில், ஒரே கூட்டமாக ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். தேனீக்களைப்போல இரைந்து கொண்டும், எரிந்து கருகிப்போன மரக்கட்டைகளின் மீது ஏறி நடந்துகொண்டும், சாம்பல் குவியலைக் கிளறிக்கொண்டும் ஜனங்கள் மொய்த்தனர். அங்கு எத்தனையோ பெண்களும், குழந்தைகளும், கடைக்காரர்களும், சாராயக்கடைப்பையன்களும், பொலிஸ்காரர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களோடு மார்பகம் நிறைய மெடல்களும், அடர்ந்த சுருண்ட வெள்ளிநிறத் தாடியும் கொண்ட உயரமான கிழவன்-அரசியல் பொலிஸ்காரன் ஒருவனும் நின்றுகொண்டிருந்தான்.

பாதியுடம்பு தரையில் கிடந்தவாறும் பாதியுடம்பு உட்கார்ந்த பாவனையிலும் இஸாய் கிடந்தான். அவனது முதுகு ஒரு கருகிப் போனகட்டையின் மீது சாய்ந்திருந்தது. தலை வலது தோளின்மீது சாய்ந்து சரிந்து கிடந்தது. வலது கை, கால்சாராயப் பைக்குள் புகுத்தப்பட்டவாறு இருந்தது. இடது கரத்தின் விரல்கள் மண்ணையள்ளி இறுகப் பிடித்திருந்தன.

தாய் அவனது முகத்தைப் பார்த்தாள். நீண்டு பரந்து கிடக்கும் அவனது கால்களுக்கிடையே கிடக்கும் தொப்பியை வெறித்துப் பார்ப்பதுபோல் அவனது ஒரு கண்பிதுங்கி நின்றது. வாய் ஏதோ வியப்புற்றதுபோல் பாதி திறந்து தொங்கியது. அவனது சிவந்த தாடி ஒரு புறமாகச் சாய்ந்து ஒட்டி நின்றது. மெலிந்த உடம்பும் குறுகிய தலையும் புள்ளி விழுந்த ஒட்டிய முகமும் மரணத்தினால் மேலும் குறுகிச் சிறுத்துவிட்டது போலத் தோன்றின. தாய் தனக்கு நேராகக் கையால் சிலுவை கீறிவிட்டுப் பெருமூச்செறிந்தாள். உயிரோடிருந்த காலத்தில் அவனைக் கண்டாலே அவளுக்கு வெறுப்புத்தான் தோன்றும்; இப்போதோ அவனுக்காக ஒரு வித அனுதாப உணர்ச்சி அவள் உள்ளத்தில் தோன்றியது.

"இரத்தக் கறையையே காணோம்" என்று யாரோ தணிந்த குரலில் சொன்னார்கள்; "இல்லை, முஷ்டியால் குத்தித்தான் கொன்றிருக்க வேண்டும்."

"காட்டிக்கொடுக்கிற பயலுக்குப் பாடம் கற்றுக் கொடுத்தாய் விட்டது!" என்று யாரோ ஒருவன் வக்கிரமாகச் சொல்லிக் கொண்டான்.

அந்த அரசியல் பொலிஸ்காரன் பெண்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே சென்றான்.

"யார்ாது? யார் இப்படிச் சொன்னது?" என்று அவன் பயங்கரமாகக் கேட்டான்.

அவனது முன்னிலையில் ஜனங்கள் பயந்து கலைந்து சென்றார்கள். சிலர் ஓடியே போய்விட்டார்கள். யாரோ ஒருவன் வர்மத்தோடு சிரித்துக் கொண்டான்.

தாய் வீட்டுக்குத் திரும்பினாள்.

"அவனுக்காக யாருமே வருத்தப் படவில்லை" என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.

அவளது கண்களுக்கு முன்னால், நிகலாயின் தடித்த உருவம் தோன்றுவது போலிருந்தது. அவன் தனது ஈரமும் இரக்கமுமற்ற குறுகிய கண்களால் அவளை வெறித்து நோக்குவது போலவும் ஏதோ அடிபட்டு விட்டதுபோல் வலது கையை நொண்டி நொண்டி வீசி வருவது போலவும் அவளுக்குப் பிரமை தட்டியது.

அந்திரேயும் பாவெலும் வந்தவுடனே, அவள் அவர்களிடம் அந்த விஷயத்தைப்பற்றி அவசர அவசரமாக விசாரித்தாள்.

"இஸாயைக் கொன்றதற்காக யாரை யாவது கைது செய்திருக்கிறார்களா?"

"இதுவரை ஒன்றும் கேள்விப்படவில்லை" என்றான் ஹஹோல்.

அவர்கள் இருவரும் மிகவும் மனம் கசந்து போயிருக்கிறார்கள் என்பதை அவள் அறிந்து கொண்டாள்.

"யாராவது நிகலாயின் பேரை வெளியிட்டார்களா?" என்று மெதுவாகக் கேட்டாள் தாய்.

"இல்லை" என்றான் மகன். அவனது கண்கள் நிலைகுத்தி நின்றன; அவனது குரலில் தெளிவு இருந்தது. "அவர்கள் அவனை சந்தேகிப்பதாய்த் தெரியவில்லை; அவன் இங்கு இல்லை. நேற்று மத்தியானம் அவன் ஆற்றுக்குப் போனான். போனவன் இன்னும் திரும்பவில்லை. நான் அவனைப் பற்றி விசாரித்தேன்....."

"எல்லாம் கடவுள் அருள்; அவன் அருள்!" என்று நிம்மதி நிறைந்து பெருமூச்செறிந்தாள் தாய்.

# தாய்

ஹஹோல் அவனை ஏறிட்டுப் பார்த்து விட்டுத் தலையைக் கவிழ்ந்து கொண்டான்.

"அங்கே அவன் கிடக்கிறான். என்ன நடந்துவிட்டது எனபதைக் தெரிந்து கொள்ளாமல் வியந்து விழிப்பது போலக் கிடக்கிறான்." என்று லேசாகப் பேசத் தொடங்கினாள் தாய்; "அவனுக்காக யாருமே வருத்தப்படக் காணோம். யாருமே ஒரு நல்ல வார்த்தை சொல்லக் காணோம். அவன் அவ்வளவு சிறுமைப்பட்டுக் கவனிப் பாரற்றுக் கிடக்கிறான். என்னவோ ஒரு உடைந்து விழுந்த உதவாக்கரைச் சாமானைப்போல் நாதியற்றுக் கிடக்கிறான்."

சாப்பாட்டு வேளையின்போது, பாவெல் திடீரெனத் தன் கையிலிருந்த கரண்டியை விட்டெறிந்து விட்டுக் கத்தத் தொடங்கினான்:

"இது எனக்குப் புரியவே மாட்டேனென்கிறது!"

"எது?" என்று கேட்டான் ஹஹோல்.

"நாம் உணவுக்காக கால்நடைகளைக் கொல்கிறோம். அதுவே மோசம். காட்டு மிருகங்களால் ஆபத்து வருமென்று தெரிந்தால் அவற்றையும் நாம் கொன்று தீர்க்கிறோம். அது சரிதான். அது எனக்குப் புரிகிறது. ஒரு மனிதன் தன்னுடைய சகமனிதர்கள் மீது காட்டு மிருகத்தைப்போல் பாய்ந்து கடித்துத் தின்ன முனைந்தால், அவனை நான் மிருகத்தைக் கொல்வதைப் போல் கொன்று தீர்க்கத்தான் செய்வேன். ஆனால் இவனை மாதிரி அனுதாபத்துக்குரிய ஒரு ஜந்துவைத் தீர்த்துக் கட்டுவதென்றால்? இவனை எப்படித் தான் ஒருவன் தாக்க நினைப்பான்?"

ஹஹோல் தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

"இவனும் ஒரு காட்டு மிருகத்தைப் போல மோசமானவன்தான்" என்றான் ஹஹோல். "நாம் கொசுவை எதற்காகக் கொல்கிறோம்? நம்முடைய உடம்பிலிருந்து அது ஒருதுளி இரத்தத்தை உறிஞ்சிவிட்டது என்பதற்குத் தானே!"

"அது உண்மைதான். நான் அதைச் சொல்லவில்லை. அது எவ்வளவு அருவருப்புத் தரும் விஷயம் என்பதைத் தான் குறிப்பிட்டேன்."

"வேறு வழியில்லை" என்று அந்திரேய் மீண்டும் தன்தோளைக் குலுக்கிவிட்டுச் சொன்னான்.

"அந்த மாதிரி ஜந்துவை நீ கொல்லுவாயா?" என்று சிறிது நேரம் கழித்துக் கேட்டான் பாவெல்.

ஹஹோல் தனது அகன்ற கண்களால் பாவெலையே வெறித்துப் பார்த்தான். பிறகு தாயின் பக்கம் திடீரெனத் தன் பார்வையைத் திருப்பினான்.

"நம்முடைய கொள்கையின் நலத்துக்காகவும், என்னுடைய தோழர்களின் நலத்துக்காகவும் நான் எதையுமே செய்வேன்" என்று துக்கமும் உறுதியும் தோய்ந்த குரலில் சொன்னான் அந்திரேய்: "அதற்காக, நான் என் சொந்த மகனைக்கூடக் கொல்லுவேன்!"

"ஆ! அந்திரியூஷா!" என்று திகைத்துப் போய் வாய்க்குள் முணுமுணுத்தாள் தாய்.

"வேறு வழியில்லை அம்மா" என்று கூறி அவன் புன்னகை புரிந்தான்; "நமது வாழ்க்கை அப்படிப்பட்டது!"

"நீ சொல்வது சரி. வாழ்க்கை அப்படிப்பட்டதுதான்!" என்றான் பாவெல்.

இதயத்துக்குள்ளே எதோ ஒன்று தட்டியெழுப்பிய மாதிரித் திடீரென உத்வேக ஆவேசத்தோடு துள்ளியெழுந்தான் ஹஹோல்.

"அதற்கு நாமென்ன செய்ய முடியும்?" என்று கைகளை ஆட்டிக்கொண்டே சத்தமிட்டான் ஹஹோல். "மக்கள் இனத்தை நாம் அனைவரும் மனப்பூர்வமாக ஒருவருக்கொருவர் நேசிக்கப்போகும் காலத்தைத் துரிதப்படுத்துவதற்காக, நாம் சிலரைப் பகைத்துத் தான் ஆகவேண்டியிருக்கிறது. நம்முடைய முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை போடுபவர்களை நாம் துடைத்துத் தீர்த்து விடத்தான் வேண்டும். தனக்குச் சுகவாழ்வும் பெயரும் கிட்டவேண்டும் என்பதற்காக, எவனொருவன் பணத்தை வாங்கிக் கொண்டு, மக்களை விலைக்குக் காட்டிக் கொடுக்கிறானோ, அவனை நாம் அழித்துத்தான் தீரவேண்டும். நேர்மையான மனிதர்களின் மார்க்கத்தை எவனாவது ஒரு யூதாஸ் வழிமறித்தால், அவர்களைக் காட்டிக் கொடுப்பதாகச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தால், அவனை ஒழித்துக் கட்டத்தான் நான் முனைவேன்! அவனை ஒழித்துக் கட்டாவிட்டால், நானும் ஒரு யூதாஸ் மாதிரியே ஆகிவிடுவேன்! அப்படிச் செய்ய எனக்கு உரிமை கிடையாது என்கிறாயா? ஆனால் நம்மை அடக்கியாள்கிறார்களே, நமது முதலாளிகள்,- அவர்களுக்கு மட்டும் உரிமை இருக்கிறதா? படை பலத்தையும் கொலையாளிகளையும் வைத்திருக்க, சிறைக் கூடங்களையும் விபசார விடுதிகளையும் நாடு கடத்தும் இடங்களையும் வைத்திருக்க, தங்களது சுகபோகத்தையும் பாதுகாப்பையும் அரணிட்டுப் பாதுகாக்கும் சகல விதமான கொலைச் சாதனங்களையும் வைத்துக்கொண்டிருக்க, அவர்களுக்கு மட்டும் என்ன உரிமை இருக்கிறது? சில சமயங்களில் அவர்களது ஆயுதத்தையே பிரயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தச் சங்கடத்துக்கு நான் ஆளானேன் என்றால் அது என்னுடைய தவறா? என்னுடைய குற்றமா? இல்லை. நானும் அதை உபயோகிப்பேன். அவர்கள் நம்மை நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தால் நானும் சும்மா இருக்க மாட்டேன். நானும் என் கையை ஓங்குவேன். அந்த உரிமை எனக்கு உண்டு. அவர்களில் ஒருவரையேனும் நான் ஒரே போடாய்ப் போட்டுக் கொல்லுவேன். எனக்குச் சமீபமாக வரும் பகைவனின் தலையை நான் நொறுக்கத்தான் செய்வேன். மற்றவர்களைவிட, எனது வாழ்க்கை லட்சியத்துக்கு அதிகமான தீங்கிழைக்க முனையும் அந்தப் பகைவனை நான் அறையத்தான் செய்வேன். வாழ்க்கை அப்படி அமைந்து கிடக்கிறது. ஆனால் அந்த மாதிரி வாழ்க்கையை நான் விரோதிக்கத்தான் செய்கிறேன்; அந்த மாதிரி இருப்பதற்கு நான் விரும்பவும் தான் இல்லை. அவர்களது இரத்தத்தால் எந்தவிதப் பயனும் விளைந்துவிடப் போவதில்லை; அது வெறும் விருதா இரத்தம், விளைவற்ற இரத்தம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நமது இரத்தம்மட்டும் பூமியில் மழை மாதிரி பொழிந்து கொட்டுமேயானால், நாம் சிந்திய இரத்தத்திலிருந்து உண்மை பிறக்கும்; சத்தியம் அவதாரம் செய்யும்! ஆனால் அவர்களது நாற்றம் பிடித்த இரத்தமோ எந்தவித மச்ச அடையாளமறுக்கள் ஏதுமின்றி மண்ணோடு மண்ணாய் மறைந்து மக்கிப் போய்விடும்! எனக்கு அது தெரியும். இருந்தாலும் இந்தப் பாபத்தை நான் என் தலையில் ஏற்றுக் கொள்கிறேன். கொலை செய்துதான் ஆக வேண்டுமென்றிருந்தால், நான் கொல்லத்தான் செய்வேன். ஞாபகம் இருக்கட்டும்! நான் எனக்காகத்தான் பேசிக்கொள்கிறேன். எனதுபாபம் என்னுடனேயே சாகும். அந்தப் பாபம் எதிர்காலத்தில் கறைபடியச் செய்யாமல் தொலையும்! அந்தப் பாபம் என்னைத் தவிர, வேறு எவரையும், வேறு எந்த ஆத்மாவையும் கறைப்படுத்தாது மறைந்து மாயும்!"

(தொடர்ந்து வரும்)

---

# இக்கரையில்

## வளன்முகி

'நிச்சயமாக எதுவுமே எமது கையில் இல்லை. இல்லாவிட்டால் இவ்வளவு காலத்துக்குப் பிறகு ஆசையாக அம்மாவைப் பார்க்கவென்று புறப்படும் போது இப்படி ஆகி இருக்குமா?'

அமைதியில்லாத முகத்தில் கவலைக் கோடுகள். புருவங்களில் ஏறியிருந்த முடிச்சு அவன் ஆழ்ந்த நித்திரையில் இல்லை என்று காட்டியது.

பெருமூச்சு ஒன்று நீளமாகப் புறப்பட



அம்மா அம்மா என்று மனது சஞ்சலப்பட்டது.

இப்போதுதான் கண்ணயர்ந்த கணவனைத் திரும்பிப் பார்த்தாள்.

திரும்பிப் படுத்துக்கொண்டாள். யாழ்ப்பாணத்தில் பிரச்சனை வரப்போகிறது என்று உணர்ந்தபோது அது வருவதற்கிடையில் நோயாளி அம்மாவைப் பார்த்து விட்டுவரலாம் என்று இவர்கள் துரிதமாக இயங்க, அவர்களை முந்திக்கொண்டு போர் கொடூரமாகச் சிரித்துக்கொண்டிருந்தது. கொண்டு போவதற்கென்று அவள் ஆசை ஆசையதாகத் தேடி தயாரித்து வைத்திருந்த உணவுப் பொருட்கள் அவளையே கேலி செய்வது போலப்பட்டது.

அம்மாவை நினைக்க அழுகை வந்தது. அப்பாவை நினைக்க இன்னும் அழுகை வந்தது. சின்னத் தங்கச்சியை நினைக்க ... குண்டு வீச்சு விமானத்தின் சத்தம் கேட்டாலே அடுப்பு முகட்டின் கீழ் பதுங்குபவள், "குத்துறான குத்துறான்... விழுந்து படு படு" என்று பதறிப் போகிறவள். அவளை நினைக்க அடிவயிற்றில் பயம்போல் ஏதோ ஒன்று சிலிர்த்தது.

'சீ நான் கலியாணம் கட்டிய படியால் தானே இந்த வவுனியாவில் இருக்க வேண்டியுள்ளது. அல்லாவிட்டால் அம்மா அப்பாவுடன் இருந்திருக்கலாம்.' தொண்டைக் குழிக்குள் துக்கம் அடைத்துக் கொள்ள இலேசாக விசும்பத் தொடங்கினாள்.

ஏதேதோ கனவுகள்....காலை உதறிக் கொண்டு திடுக்கிட்டு விழித்தான் அவன். எப்போதும் தனக்குள்ளே முடங்கிக் கொண்டு உறங்கும் மனைவி, முதுகைக் காட்டிக் கொண்டு படுத்திருந்தது பழக்கப்பட்ட மனதுக்கு குறையாக இருந்தது.

"ஜீவா..." மெல்ல அழைத்தான். மௌனமாக இருந்தாள். முதுகு அசைந்தது. அழுகிறாள் போலும். கை நீட்டி முகத்தைத் தொட்டுப் பார்த்தான். கண்ணீர் கையைச் சுட்டது. மனைவியைத் தொட்டுத் திருப்பினான்.

"இப்ப என்னம்மா நடந்தது? ஏன் அழுகை?"

அவள் எதற்காக அழுகிறாள் என்று தெரிந்திருந்தும் கேட்டான்.

"போன முறை-உங்களை கலியாணம் செய்ய முந்தி- கோட்டை அடி நேரம்-சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் 'றஸ்க்கு' (காய்ந்த பாண்) வாங்கிச்சாப்பிட்டனாங்களப்பா"

"ஓம்! அதுக்கு என்ன?"

"நான் இங்க நல்லாச் சாப்பிடுறன். அங்க என்ன பாடோ, எனக்கு கவலையா இருக்கு; போகவேணும் போலவும் இருக்கு. கிளாலி படகுச் சேவை நடக்குதாப்பா?"

"இல்லை போட் ஓடத் தொடங்கினதும் ஒருக்கால் போய் வருவம். இப்ப கவலைப் படக் கூடாது. பேசாமல் படுக்க வேணும்" சின்னக் குழந்தையாக அணைத்துக் கொண்டான்.

இவளிடம் போய் எப்படி அந்த விடயத்தைச் சொல்வது? மனது கனத்தது. இன்று மாலை யாழ்ப்பாணக் கச்சேரியில் வேலை செய்யும் நண்பன் சிவஞானத்தைக் கண்டபோது...

"என்ன சிவா போட் ஓடுதே?"

"இல்ல, நான் கச்சேரி அலுவலா 'ஸ்பெசல்' போட்டில் வந்தனான்"

"எப்படி நிலமை?"

"மச்சான் எனக்கு சரியாத் தெரியாது. கேள்விப்பட்டனான். உன்ர மிஸ்சிஸ் வீட்டில் யாருக்கோ காயமாம். அவசரமாக வந்தபடியால் போய் விசாரிக்க அவகாசம் கிடைக்கேல்ல. எதுக்கும் சரியாக அறிய முயற்சிசெய்." சொல்லிவிட்டு அவன் கொழும்பு போய்விட்டான். இவன் மனது அடித்துக்கொண்டது.

'நிச்சயமாக இதை மனைவியிடம் சொல்ல முடியாது. யாருக்கு காயம், எங்கே இருக்கிறார்கள், எப்படி உண்மை, பொய் அறிவது.' யோசித்து யோசித்து தலை இடிக்கத் தொடங்கியது. மனைவியைப் பார்த்தான். அழுதபடியால் மூக்கு அடைத்து விட்டது போலும். வாயால் சுவாசிக்கின்றாள்.

ஒருக்களித்துப் படுத்து கையை தலைக்கு முண்டு கொடுத்துக்கொண்டு ஏதோ ஒரு நம்பிக்கையில் உறங்குகின்ற மனைவியை கொட்டக் கொட்டப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுவர்க்கடிகாரம் நான்கு முறை சிணுங்கிவிட்டு ஓய்ந்தது.



படிப்பகம்

# நிலவொளிக் காதலி

நிலவு பாலாய்க் காய்ச்சிற்று!

ஆனால் இரவு ஏனோ வியர்த்துக் கொண்டிருக்கிறது.

படுக்கையில் புரண்டு படுத்தும் தூக்கம் வராமல்.... இளமையான எந்தன் இருபத்தைந்து வயதிலும் கனவுகளைத் தொலைத்து விட்டு...படுக்கையைச் சுருட்டிக்கொண்டு எழுந்தேன்.

இரவு பத்தை நெருங்கிக்கொண்டிருந்தது.

உம்மா கண்களை விரித்துப் பார்த்தாள்; கேட்டாள்.

"என்ன மவன்?"

"தூக்கம் வரல்லம்மா. வியர்க்குது. அதான் அப்படியே நம்ம வயல் வரப்புக்கு மத்தியில் இருக்கிற கோடவுன்ல போய்ப் படுக்கலாம்னு...வெற்றுக்களத்து மேட்டுல கயிற்றுக் கட்டிலில படுத்தா சுத்தமா காற்று வரும். சுகமா தூக்கமும் வரும்மா...."

"வாப்பா சத்தம் போடுவாருடா...."

"வாப்பா எப்பம்மா சத்தம்போடாம இருந்தாரு....?"

"ஒரு மாதம் கழித்து லீவுல இன்னைக்குத்தான் ஊருக்கு வந்திருக்கே. சரி சரி போய்ப்படுத்துட்டு அதிகாலையிலே வந்துடு...."

நான் கையில் குப்பி விளக்கோடு கிளம்பினேன்.

உம்மாவுக்குத் தெரியாமல் ஒளித்து வைத்திருந்த சிகரட் பாக்கெற்றையும் எடுத்துக் கொண்டேன்.

வேலை கிடைத்து கொழும்புக்குப் போனதில் இருந்து ஏதோ இயந்திர வாழ்க்கை தான். முன்னரெல்லாம் நினைத்த நேரம் வயல் வரம்பில் சுற்றி.... அருவியில் குளித்து.... வெற்று மார்போடு குளிர்காற்று தாலாட்ட களத்துமேட்டில் படுத்துறங்கிய கிராமத்து சுகமே தனிதான். வயல் வரப்பில் நடந்தேன்.

நெடு நாளைக்குப் பிறகு-

கிராமத்து தென்றலை முகர்ந்து உறங்கப் போகின்றேன்.

குப்பி விளக்கை ஓரமாய் வைத்து,

கயிற்றுக்கட்டிலை கோடவுனுக்கு வெளி முற்றத்தில் விரித்து, சிகரட்டொன்றைப் பற்றவைத்து நிமிர்ந்தபோதுதான் அதைக் கவனித்தேன். கோடவுனுக்குப் பக்கத்தில் இருந்த எமக்குச் சொந்தமான 'வயல் வீட்டில்' வெளிச்சம் எரிந்துகொண்டிருந்தது.

கிராமத்தில் எமக்குச் சொந்தமான இரண்டு மூன்று வீடுகள் மேலதிகமாய் உண்டு. அதில் இந்த வயல் வீடும் ஒன்று. மேலதிக வீடுகள் அனைத்தையும் வாப்பா யார் யாருக்கோ வாடகைக்கு விட்டிருந்தார். வாடகைக்கு விடப்பட்டதில் இந்த 'வயல் வீடும்' அடக்கம். கொஞ்ச நாளாய் வயல்வீடு காலியாய் இருந்தது. நான் கொழும்புக்குப் போனதும் யாரோ புதிதாய் குடி வந்திருக்கிறார்கள் போலும்.

'யாராயிருக்கும்?'

சுவார்ஸ்யமில்லாத கேள்வி.

அப்படியே கயிற்றுக் கட்டிலில் படுத்து...

சிகரட் துண்டைத் தூரமாய் எறிந்தேன்.

சுகமாய் காற்று வந்தது.

ஆனால் தூக்கம் மட்டும் வராமல்...

எனக்கு நேர்மேலாக வானத்து நிலவு வந்து நின்றுகொண்டது.

நிலவுதான் எவ்வளவு அழகு! நிலவென்றாலே ஒரு காதல் பிறக்கிறது!!

யதார்த்தமாய் உலகில் கள்ளங் கபடமில்லாதது 'நிலவு' மட்டும்தானோ என்னமோ? நிலவு என்று உச்சரிக்கும்போதே உதடுகள் குளிர்ச்சியடைகின்றன. மனம் குளுமையடைகின்றது. நிலவைப் பார்த்துக்கொண்டிருக்கும் நேரம் மனதிலொரு- உடம்பிலொரு புத்துணர்ச்சி எழுகிறது.

தனிமையில் பாடவேண்டும் போல் தோன்றியது.

**"வெள்ளி நிலவே வெள்ளி நிலவே!**

**வெள்ளி நி~வே வீண் சோகம்-**

**ஏனடி மானே ஏனடி....?**

**முல்லை மலரே முல்லை மலரே!**

**உன் பாரம் தீர்ப்பவர் யாரு கூறடி....?"**

'வயல் வீட்டுப் பக்கமிருந்து சத்தம் வந்தது. என் பாட்டு தடைப்பட்டது. திரும்பிப் பார்த்தேன்- அதிர்ந்தேன். வயல்வீட்டின் யன்னலுக்குள் மற்றுமொரு நிலவு தெரிந்தது. இதுவரை நான் காணாத நிலவு.... ஒரு பருவப்பெண் நிலவு.

"உஷ்... உஷ்...."

யன்னல் நிலவு அழைத்தது.

நான் மீண்டும் அதிர்ந்து, அருகில் போய் மீண்டும் மீண்டும் யதார்த்தமாய் அதிர்ந்தேன். பதினெட்டு வயதுக்குள் இப்படியொரு அழகு தேவதையா? தங்க நிறத்தில் செழுமையானதோர் மெழுகு பொம்மை.

ஊர்வசியோ, மேனகையோ, ரம்பையோ, கறிவேப்பிலையோ (ச்சீ....வார்த்தை தடுமாறுது பார்த்தீர்களா!) அப்படியோர் அழகு.

"என்ன?" என்றேன்.


"நாங்க தூங்கணும்" என்றாள்.

"சரி தூங்குங்க...."

"நீங்க பாடாமலிருங்க..."

நான் அசடு வழிந்தேன்.

> **"நான் முழுதாக என் மனதைத் தொலைத்து கட்டிலில் வந்து படுத்தேன். இப்போது தூக்கம் சுத்தமாயில்லை"**



## மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

"நான் பாடினது கேட்டிச்சா...?"

"இல்லை-வாசிச்சது கேட்டிச்சு!"

நான் மீண்டும் அசடு வழிந்தேன்.

அவள் கவர்ச்சியாய்ச் சிரித்து உள்ளே ஓடிப்போக,

நான் முழுதாக என் மனதைத் தொலைத்து...கட்டிலில் வந்து படுத்துக் கொண்டேன். இப்போது தூக்கம் சுத்தமாயில்லை.

எனக்குள் ஏதோவொன்று சுகமாய்ப் படர்ந்தது.

குளிர்க்காற்றும் வியர்த்தது.

வானத்து நிலவையும் கோபித்துக் கொண்டேன்.

ஏதோவொரு சுகம்... ஏதோவொரு தாபம்...

இதுதான் காதலா?

விடிய விடிய விழித்திருந்தேன்.

ஆம்! இதுதான் காதல்!

விடிந்ததும் ஒரே ஓட்டமாய் வீட்டுக்கு வந்து உம்மாவிடம் கேட்டேன்.

"நம்ம வயல் வீட்டுக்கு யாராவது புதிசாகக் குடி வந்திருக்காங்களா?"

"ஓ மகன். கிழக்கு மாகாணப் பக்கமிருந்து அகதியா வந்த குடும்பமொன்று வந்து குடியேறியிருக்காங்க. ஏன் மகன்?" உம்மா கேட்க.

"சும்மா!" என்றேன்.

ஆனாலும் மனதுக்குள் வலித்தது.

'அகதிக் குடும்பமா..? பாவம்..."

மனதுக்குள் சொல்லிக்கொண்டேன்.

அதே மனப்பாரத்தோடு இன்னுமோர் இனிய இரவுக்காகக் காத்திருந்தேன்.

இரவு வந்தது.

கூடவே நிலவும் வந்தது.

நான் கோடவுனுக்குள்-கட்டிலில் காத்திருந்தேன்.

வானத்தில் நிலவு எனக்குக் காவலிருந்தது.

நான் யன்னல் நிலவுக்காகக் காத்திருந்தேன்.

மனதுக்குள் பாட்டு வந்தது. பாடினேன்.

**"நிலவு வந்தது... நிலவு வந்தது**
**யன்னல் வழியாக...."**

யன்னல் வழி நிலவு கூப்பிட்டது

"உஷ்....உஷ்"

ஆவலாய் அருகில் போனேன். சொன்னேன்.

"ஸாரி..நான் பாட்டுப்பாடி உங்கள் தூக்கத்தைக் கெடுத்திட்டேனா?"

"இல்ல... நேற்றையிலிருந்து தூக்கமே கெட்டுட்டுது!"

"ஏன்?"

"தெரியல!"

"எனக்கும் அதேதான்....."

"தூக்கம் வரல்ல...."

"அப்போ...."

"ம்ஹூம்...."

"கனவுல-நினைவுல நீங்க வந்தீங்கன்னு நெனைக்கிறேன்."

அவள் மவுனித்தாள். நாணினாள்.

முகம் குங்குமமாய் சிவந்து போனது.

"உங்கள் பெயர்...." என்று இழுத்தேன்.

அவள் தன் பெயரைச் சொல்ல வாயெடுக்க, உள்ளேயிருந்து யாரோ கூப்பிட்டார்கள். அவள் உள்ளே தாவியோடிப் போக...

நானும் தாவி வந்து கட்டிலில் அமர்ந்தேன்.

அதன்பிறகு-

அந்த இரவில் அவள் வரவேயில்லை.

நானும் நிலவும் மட்டும்தான் தனித்து விழித்திருந்தோம்.

என் மனவேதனையை நிலவு மட்டும் தான் அறியும்.

என் மனதுக்குள் இருந்த காதலுக்கு நிலவு மட்டும்தான் சாட்சி.

எப்படியோ விடிந்தபோது...

வீட்டில் சொல்லிக்கொண்டு.... மனம் கொண்ட தேவதையிடம் சொல்லிக்கொள்ளாமல் வேலைக்காக மீண்டும் கொழும்புக்குப் புறப்பட்டேன்.

மனம் முழுக்க ரணமிருந்தது.

ஒரு மாதம் கழித்து, ஒரு வார விடுமுறையில் மீண்டும் கிராமத்துக்கு வந்தேன். இந்த ஒரு மாதமும் நான் பட்ட பாடு... மனதுக்குள் என் காதல் பட்டபாடு... பெயர் தெரியாத அந்த நிலாவொளி அழகிக்காக..நிலாவொளிக் காதலிக்காக நான் ஏங்கிய ஏக்கம். காதலென்றால் இப்படியொரு பிரிவுத்துயர் வருமா? போருக்குச் சென்று உயிரோடு திரும்பிய ஒரு போர் வீரனின் மனநிலையோடு...நேசகியைத் தேடி வந்தேன்.

மதியச் சாப்பாட்டின்போது உம்மா சொன்னாள்:

"மகன்! வயல் வீட்டை விக்கலாம்னு வாப்பா சொல்றாரு. எதுக்கும் உன்னிடம் ஒரு வார்த்தை கேக்கச் சொன்னாரு... நீ என்ன சொல்றே?"

நான் மெல்ல நிமிர்ந்தேன்.

"அப்போ அந்த வீட்டுல குடியிருக்கிற அகதிக் குடும்பம்?"

"அவங்க வீட்டைக் காலிபண்ணிப் போய் பத்து நாளாவுது."

எனக்குள் மின்சாரம் பாய்ந்தது.

நான் அதிர்ந்து சிலையாய்ப்போய்...

சாப்பிடப் பிடிக்காமல் எழுந்தபோது உம்மா விசித்திரமாய்ப் பார்த்தாள்.

நான் எனது அறைக்குள் புகுந்து,

எதையும் உணராமல் மனதுக்குள் ஓவென அழ ஆரம்பித்தேன்.

மதியம் மாலையாகி, இரவானபோது கூட...

இனிமையான இரவில் நிலவு வந்தபோது கூட....

என் மன அழுகையை என்னால் நிறுத்த முடியவில்லை.

வெளியே வந்து தூரத்தில் தெரியும் வயல் வீட்டைப் பார்த்தேன்.

வெளிச்சம் எரியாமல் வீடு வெறிச் சென்றிருந்தது.

வானத்தைப் பார்த்தேன். அங்கே-

நிலவு மட்டும் என் காதலுக்கு சாட்சியாய் நின்றிருந்தது.

## கிண்ணியா சபருள்ளா

# காற்றில் நடக்கும் கனவுகள்



நிசா நீ நிலமா?

அடுத்தசொல்லுக்கு அகராதியைப் புரட்டுகிறேன்.

வானம் நீலஆடையை பகிஷ்கரித்து மெல்ல மெல்ல கறுப்புத்தாவணியைக் கட்டிக்கொண்டிருந்தது!

நீ எங்கே இருக்கின்றாய்? நீயில்லாத இந்தக்காற்றுக்கூட என்னால் கரிவாயுவாகத்தான் கணக்கெடுக்கப்படுகிறது. என் மூக்குத்துவாரங்களுக்கிடையே ஒட்சிசன் உறிஞ்சப்படும்போது அது நீ பிரசவித்து வெளித்தள்ளும் காபன் துணிக்கைகளாய் இருக்கக்கூடாதா என ஒவ்வொருவினாடியும் கனவு கண்டுகொண்டிருக்கிறேன்.

வானம் விழிகளைக் கசக்கிக் கொண்டது! சிணுங்கலை ஆரம்பிக்கப்போகின்றது. என் கற்பனைச்சுவரில் கிறுக்கல்சித்திரம் வரைந்தேன். பக்கத்து அறையிலிருந்து அம்மா அவசர அவசரமாய் பாத்திரங்களை எடுப்பது தெரிகின்றது.

என் உடைந்த ரெனோல்ட் பேனா மீண்டும் எழுந்து கொள்கிறது.

உனக்குத் தெரியுமா என் உயிர்வழியிலே ஓடும் இரத்த அமேசன் நீதானென்று? அதனால் தான் அடிக்கடி ஊசிகுத்தி குருதித்துளிகளை ஜனனித்து குடித்துக் கொள்கிறேன். நீ துப்பும் எச்சில்காற்றில் இனிமையின் நாற்றுக்கள் ஹிருதயத்தை கிழித்துக்கொண்டு போகிறது. கண்மணி வா...நாமிருவரும் காஷ்மீரத்து பனி நதியில்கட்டி எழுப்பப்பட்ட மல்லிகை மஞ்சத்தில் மனம்திறந்து பேசிக் களிப்போம். என் தாஜ்மஹால் உனக்காக அவுஸ்திரேலிய புல்வெளிகளில் அமைக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலுள்ள சுவர்களில் உன் அழகை உச்சஸ்தாயி கொடுக்க வானத்தின் நட்சத்திரங்களை வாடகை எடுத்து பூட்டிவைத்திருக்கிறேன். நிலவை நம் படுக்கை அறைக்குள் நிறுத்தி வைத்திருக்கின்றேன். நீ பூக்களை வேட்டையாட வானவில்லை வளைத்து உன் கைகளில் தருவதற்கு இத்தனை நாளாய் காத்திருக்கின்றேன்.

வா....வந்துவிடு.

வெளியே சிணுங்கலில் ஆரம்பித்த வானம் தன்கண்களின் கண்ணீரால் பூமியின் பாவக்கறைகளை கழுவத்தொடங்கி இருந்தது. திரும்பிப்பார்க்கின்றேன்...அம்மாவும் தங்கையும் ஓலைப்பொத்தலால் ஒழுகும் மழை நீரை ஒடுக்குவதற்கு வீட்டிலிருந்த பாத்திரங்களை விரைந்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

கூதல் தாக்க அம்மா அந்தக் கந்தல் சேலையை எடுத்து தன் மீது காவிக் கொள்கிறாள். அடுத்த அறையிலிருந்து அப்பா தொண்டையைச் சுரண்டும் சத்தம் திடுமென எழுந்துவருகிறது.

நிமிர்கிறேன்....

என் சீகிரியத்து சிற்பமே...இந்தியாவின் அஜந்தா இளசித்தான் போனாள். நான் காண்பதெல்லாம் நயாகரா நதியில் சிறகு விரித்திருக்கும் அதீனா தேவதையைத் தான்.

**"உன் பாதம் பட்ட இடத்தில்**
**என் கண்கள்**
**வட்டம் போட்டு**
**ஒற்றி**
**என்**
**ஆண்மையின் புனிதம்**
**அதிகப்படுத்தப்படுகின்றது."**

உன் கால்கொலுசில் கனவுகளை சப்தித்துக்கொண்டிருக்கிறேன். இந்தத் தீய்ந்த மண் நமக்கு வேண்டாம். இருவரும் பனிமேகங்களுக்கிடையே பறந்து செல்வோம். நமக்காக சொர்க்கம் ஒன்று தேவர்களால் உருவமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே சென்று அட்சயபாத்திரங்களை ஏந்தி அதிசயப்படுவோம். அமுதத்தைப்பருகி ரத்தினப் பந்தால் எறிந்து விளையாடுவோம். கணிக்கமுடியாத சுவைகளைக் கொண்ட கனிவர்க்கங்களை கடித்து முடிப்போம்.

மியாவ்...மியாவ்....

பூனை கத்துகிறது. கோபத்துடன் திரும்புகிறேன். அங்கே சாம்பல் பூத்த அடுப்பில் சயனித்திருந்த பூனை சப்தமிட்டுக்கொண்டிருந்தது. அம்மாவைக்கட்டிக் கொண்டுதம்பி வயிற்றைக்காட்டி அழுகின்றான். அம்மா அழுவது தெரிந்தது.

மீண்டும்...

பூக்களால் நமக்காக பேராதனைப் பூங்காவில் புஷ்பக விமானமொன்று புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. நம்காதல் தேசத்து மேலுயர்ந்த காற்றுமண்டலத்தில் ஏறிப் போவோம். உன் அங்கங்கள் அசைந்து நொந்தால் நான் அப்படியே வெந்து போய்விடுவேன். அதனால்தான் நீ நடக்க மட்டுமல்ல, இருக்கையில்கூட என் இதயம் வேகாமல் பார்த்துக்கொள்ள உன் தேகத்தை வளைத்து பூக்களால் கோட்டை ஒன்றை எழுப்பி உள்ளேன்.

நிசா...அதிகம் எழுதலாம்...ஆனால் என் உடைந்த பேனா உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறது; 'என் உதிரத்தை அதி சீக்கிரத்தில் உறிஞ்சி விடாதே' என்று....

என்னால் முடிக்க முடியாமலேயே இந்த மடல் உன் இதயம் தேடிவரும். அதுவரையில் இது ஒரு தொடர்கதையாய் நம்மை தொட்டுத் தழுவிக்கொண்டிருக்கட்டும்.

கடிதத்தை மடித்து கவரில் இடுகின்றேன்.

"என்னதான் எழுதிக்கிழிக்கிறானோ தெரியல்ல. எழுத்துத்தான் பெரிசா போச்சு. இங்கே மூணு நாளா அடுப்பு எரியல. அதப்பாத்திட்டு எப்பவும் பேனையும் கையுமா இருக்கானே...ச்சீ....கர்மம் எண்ட தலைவிதி" அம்மாவின் கண்ணீருக்கு நியாயம் இருக்கின்றதென்பதனை உணர்ந்தேன்.

'தாயே உனக்குத் தெரியுமா என் காதலின் புனிதம்' சேர்ட்டை மாட்டிக் கொண்டு மழையில் நனைந்து கொண்டே தெருவில் இறங்கி நடக்கின்றேன். என் அன்பு நிசாவுக்கு அனுப்பும் கடிதத்துக்கு முத்திரை ஒட்ட இரண்டு ரூபாய் நண்பன் அரபாத்திடம் கடன்வாங்க இடிமன் நகரை நோக்கி.....

# நிலா முகம்

பளிச் சென்றது. கொஞ்ச நேரம் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் பீஷ்மன். அவள் சிரித்தாள். கன்னத்தில் குழிவிழுந்தது. தன்னை மறந்து ரசித்தான். அவள் இன்று ஏதோ ஒரு விதத்தில் வித்தியாசப்பட்டிருந்தாள்.

**பெரிய பௌர்ணமியில்**
**ஒரு சின்ன அமாவாசையாய்**
**அவள் நெற்றியில்**



## எம். சுரேஷ்

**ஒட்டிக் கொண்டிருக்கும்**
**கறுத்தப் பொட்டைக்**
**காணவில்லை!**

அது காணாமல் போன காரணத்தை பீஷ்மன் கேட்கவில்லை. அவனுக்கு நாட்டு நிலமை தெரியும். பல சந்தர்ப்பங்களில் குருடர்களாய், செவிடர்களாய், ஊமைகளாய் இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கும் மனித ஜென்மங்களில் அவனும் ஒருவன். கவலைப்பட்டான்.

எவ்வளவு ஒரு பரிதாபமான நிலை. பொட்டைக் கழற்றி மொழியை மறைத்து கலாசாரத்தைத் தற்காலிகமாய் மாற்றி வெளியில் நடமாட நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் பரிதாபத்தை நினைக்கும்போது நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. பெருமூச்சு விட்டான்.

அவளை அன்போடு அணைத்து "நிலா" பொட்டு வைக்காதது உனக்குக் கவலையாக இருக்கிறதா? கேட்டான். அவள் புன்னகைத்தாள். 'ஆமாம் ' என்பதைப் போல் தலையசைத்தாள்.

"பொட்டு வைப்பதற்கு உனக்குப் பயமாக இருக்கிறதா?" பீஷ்மன் மீண்டும் கேட்டான். அந்தக் கேள்வி அவளைக் கொஞ்சம் சோகப்பட வைத்ததோ என்னமோ மிக நிதானமாகப் பதிலளித்தாள்.

"பொட்டு வைத்துக்கொள்ள முடியாத இத்தகைய சூழ்நிலைகளில் தான் முகம் முழுக்க பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வைராக்கியம் பிறக்கிறது!!"(உண்மைதானே?)


வாசகர்களின்
-விருப்பத்தால்-
விரைவில் முரசில்
சித்திரத் தொடர்
விறு-விறுப்பான ஆரம்பம்

www.padippakam.com



# கேட்டாளே ஒரு கேள்வி!

"எனக்கும் கோபம் வரும்!"
என்றான் செழியன்.

"வரட்டும்....யார் தடுத்தார்களாம், வரட்டும்!"

என்றாள் பூங்குழலி.

"கெஞ்சினால் மிஞ்சுகிறாய்."

"கொஞ்சினால் 'அஞ்சுகமே' என்பீர்கள், குறைகளை சுட்டிக்காண்பித்தால் மிஞ்சுகிறாய் என்பீர்கள்!"

பூங்குழலி வார்த்தைகளால் குத்தினாள்.

"என்ன குறை கண்டுவிட்டாய். நடனத்தை புகழ்ந்தேனே அதுதவறா?"

"நடனத்தைப் புகழ்ந்தீர்கள் என்றால் தவறில்லை. நடனமாடியவளைப் புகழ்ந்தீர்களே, அது தரமில்லை!"

செழியன் நகைத்தான்.

"அதுதான் கோபமா?"

"நகைக்காதீர்கள், இன்று புகழ்வீர்கள், நாளை புரள்வீர்கள், ஊரே நகைக்கும்!"

"ஆடவொரு பொன்னூஞ்சல், பரவவொரு பூமஞ்சம்; கூட வொரு கோல மயில், அனைத்தும் நீயாக இருக்கும்போது அணைக்க எனக்கெதற்கு ஆடும் பெண்?"

முறைத்தாள் பூங்குழலி.

மீண்டும் நகைத்தான் செழியன்.

பாய வரும் அம்புகளாய் பாவையின் விழிகள். அம்புகள் தைக்காமல் பதுங்கிக் கொள்ளக்கூடிய இருமலைகள் பாவையின் நெஞ்சத்தில்!

"என்னே விந்தை இது?"

என்றான், அவளின் விழிகளையும், இரு எழில்களையும் தன் விழிகளால் வருடிக்கொண்டு!

"என்ன விந்தையைக் கண்டு விட்டீர்களாம்?"

"தாக்குதலும் நடத்திக்கொண்டு எதிரிக்கு தற்காப்பும் தருகின்ற கோட்டையைக் கண்டு விட்டேன்; அதுதான் விந்தை!"

"உளறுகிறீர்கள்!"

"உண்மை! பலமான வீரனைக் கண்டால் எந்த எதிரியும் திணறுவான். அழகான பெண்ணைக் கண்டால் எந்த வாலிபனும் உளறுவான். அது வழமை!"

"அனைவரையும் உங்களைப்போல் நினைத்துவிட்டீர்கள்!"

"உருவம் வேறுபடலாம், பருவம் ஒன்றுதானே!- வாலிபம் என்பது வசந்தத்தின் வாசல்படி! அந்த வாசல்படியில் நிற்கிறது ஒரு வண்ணப் பூங்கொடி! கண்டு விட்ட காளை விலகிப்போகுமா? தழுவிக் கொள்ளுமா? சொல்லடி என் வண்ணக்கிளி!"

"சரிதான்!"

"என்ன சரிதான்?"

"சொந்தப் பூங்கொடியா? தூரத்துப் பூங்கொடியா என்றெல்லாம் பார்க்க மாட்டீர்கள். நடனப் பெண்ணும் 'வரலாம்' என்று நயனம் அசைத்தால், நல்ல தருணம் என்று தழுவச் செல்வீர்கள்!"

## தருவது — ரசிகன்

பூங்குழலி சினத்தை உதறிவிட்டு குரலில் சோகத்தை சுமந்துகொண்டாள்.

"பூங்காற்று இங்கிருக்க புழுதிக் காற்றைத்தேடிப் போவேனோ நான்? சந்தனப் பொய்கை நீயிருக்க சாக்கடையில் புரள்வது சுகமொன்று செல்வேனோ நான்? சுந்தர அழகி நீயல்லவோ, என் உதிரத்தில் கலந்த உறவல்லவோ! என் சிந்தையில் நெருப்பை விதைப்பதும் நீ, பின்னர் சந்தன உடலால் அதை அணைப்பதும் நீ!"

செழியன் புகழ, இடையில் புகுந்து கேள்விக் கணையைத் தொடுத்தாள் பூங்குழலி.

"தந்திரம் தானே இத்தனையும்?"

"இத்தனை சொல்லியும் உன் இதயம் என்ன நித்திரையோ? வீணடி ஐயம், விலக்கிவிடு! தேனடி இதழ்கள் தந்துவிடு! தேவ சுகம் காண வழியை விடு! நினைவெல்லாம் நெருப்பு நெருங்கி அணைத்துவிடு! உன் சிந்தையை சினத்தால் மீட்டுவிடு!"

பூங்குழலிக்கு அதற்கு மேலும் பிடிவாதம் காட்ட வலிமை இல்லை.

அவளுக்கும் உள்ளே நெருப்புத்தான். அதை மறைக்கத்தான் கோபத்தால் மறைப்பிட்டாள்.

பூங்குழலியின் முகமாற்றத்தில் குறிப்பறிந்து, மெல்ல நெருங்கி தன் உதட்டை வலையாக வீசி இதழ் பிடித்தான் செழியன்.

வலைக்குள் சிக்கிய மீன் மீள வழி தேடும். இங்கோ உதட்டுவலைக்குள் சிக்கிய இதழ்கள் வலை மேலும் இறுகட்டும் என்று வரம் கேட்டுக்கொண்டிருந்தனவே, அதுதான் விந்தை!

## இலக்கிய நயம்

மூக்கோடு மூக்கு சேர்த்தபடி, இடையிலே இடது கரத்தால் அழுத்தி, மறு கரத்தால் முதுகு வருட, பூங்குழலி பூமியில் இருந்து எழுந்து கொண்டிருந்தாள்.

அவள் இதழ்களுக்கு நாவால் அவன் ஈரம்பூசிக்கொண்டிருந்தான். நெற்றியிரண்டும் நெருங்கி மோத, பூங்குழலி விழிமூடி, "அத்தான்" என்றாள், குரலில் வெப்பம்! வெளிப்பட்ட பெருமூச்சில் அனல்காற்றின் வாடை!

அந்த நேரம் பார்த்தோ பாழாய்ப் போன தும்மல் வர வேண்டும்?

வந்து தொலைத்தது செழியனுக்கு,

அவ்வளவுதான், சிகரங்களில் ஏறிக் கொண்டிருந்தவனை சட்டென்று தள்ளி விடுவதுபோல, அவன் பிடியை விலக்கினாள் பூங்குழலி. முகத்தில் அதே பழைய சினம்.

"பூங்குழலி?"

"ம்...யாரை நினைத்தீர்? இல்லையில்லை யாரோ ஒருத்தி நினைக்கிறாள் உம்மை, அதுதான் தும்மினீர். சொல்லும், யாரவள் அந்தக் கிள்ளை?"

"எட்டாத உயரத்தில் ஏறி இளநீர் கைக்கெட்டும்போது, கண்டறியாத் தும்மல் வந்து கெடுத்ததே காரியத்தை! நினைத்தது யாரென்று தெரிந்தால் போதும், நானே நெரித்துவிடுவேன் அவள் கழுத்தை!"

என்றான் செழியன்.

பூங்குழலிக்கு அவன் படும்பாட்டைக் காண சிரிப்பு வந்தது.

"உண்மையாகவா?"

கேட்டபடியே நெருங்கி அவன் தோளில் சாய்ந்தாள். மருதாணி பூசிய விரல்களால் அவன் மார்பை இதமாய் வருடிக் கொடுத்தாள்.

அய்யய்யோ....செழியனின் மனம் கூவியது.

ஆம்...மீண்டும் அதே தும்மல் வரத் தயாராகியது.

'வேண்டாம், வராதே! தனியாக நான் உள்ளபோது வா, கூத்தே அடிக்கலாம், இப்போது வேண்டாம், வராதே!'

செழியன் மனதுக்குள் தும்மலுக்கு மனுப்போட்டான்.

மூக்கை சுழித்து தடுப்பு நடவடிக்கையில் இறங்கினான்.

பூங்குழலி அவன் முகத்தை ஆசையோடு நோக்கியவள், அவன் பட்ட அவதி கண்டாள்.

கோபமாய் எழுந்து விலகிப்போனாள். செழியனுக்கோ தும்மல் அடங்கிப் போய்விட்டது.

"பூங்குழலி! பூங்குழலி!"

என்று பின்னால் சென்றவனை,



திரும்பிநோக்கினாள்; விழிகளில் அருவியோடு கேட்டாளே ஒரு கேள்வி,

"உமக்குப் பிரியமான யாரோ ஒருத்தி உம்மை நினைக்கிறாள்? அதனை என்னிடம் ஒழிக்கவோ மறைத்தீர் எழுந்த தும்மலை?"

செழியன் நிலை திரிசங்கு நிலையானது.

தும்மும் காதலனைத் துளைத்தெடுக்கும் காதலியின் இக் கேள்வியைத்தான் திருவள்ளுவரும் திருக்குறளில் ஒரு பாடலில், நமக்கு சொல்கிறது இப்படி;

"தும்மச் செறுப்ப அழுதாள்
நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று"
பாடல்-1318,
அதிகாரம்-132.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—112

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| | ■ | 3 | | | | ■ |
| 4 | 5 | | ■ | 6 | | |
| | | ■ | 7 | | | ■ |
| ■ | | ■ | | | ■ | 8 |
| 9 | | | | | ■ | |
| 10 | | | | ■ | 11 | |

### இடமிருந்து வலம்

01. இதைப் பெற அலைமகளை வணங்குவார்கள்.
02. பயிருடன் வளர்வது.
03. வீட்டில் காற்று வருவதற்காக இதை அமைப்பார்கள்.
04. இது இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாது என்பார்கள்.
06. சிறார்களின் விளையாட்டுப் பொருட்களில் ஒன்று.
09. இந்த நேரத்தில் சிறு ஊசியைப் போட்டால்கூட சத்தம் கேட்கும்.
10. இது கர்ஜிக்கும்.
11. ஒரு பருவகாலம்.

### மேலிருந்து கீழ்

01. அரசவையிலிருக்கும் இது எமது பாராளுமன்றத்திலும் இருக்கிறது.
02. இங்கு மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் இருப்பார்கள்.
05. நம்பிக்கை என்றும் சொல்லலாம்.
06. நவமணிகளில் ஒன்று.
07. ஒருவருடன் இன்னொருவர் தொடர்பு கொள்ளப் பயன்படும் தொடர்பு சாதனம்.
08. இதில் ஒருவகை, மனிதரின் இரத்தத்தை உறிஞ்சும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 12.08.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-112
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-110ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தே | 2 வா | ர | ம் | ■ | 3 மா | ■ |
| 4 ம | த் | த | ள | ம் | ■ | 5 ப |
| ல் | து | ■ | ■ | 6 க | ■ | சு |
| ■ | ■ | 7 அ | ப | ரா | த | ம் |
| 8 சி | க் | க | ன | ம் | ■ | பொ |
| னி | ■ | த் | ■ | 9 பு | 10 த | ன் |
| 11 மா | த் | தி | ரை | ■ | லை | ■ |

குறுக்கெழுத்துப் போட்டி இல. 110இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.

1. செல்வி. ஜெனட் ஏ. துரைசாமி, கொழும்பு-03.
2. கே.வாசுதேவன், குருமன்காடு.
3. ஸுல்பிகார் ஹுஸைன், களுத்துறை.
4. திருமதி. டி. சர்மிளா, நீர்கொழும்பு.
5. எம். பாறூக், திருகோணமலை.
6. யு. சல்மா, கலகெடிஹென.
7. செல்வி. பரீதா மொகமட், பதுளை.
8. எஸ். உமாமகேஸ்வரி, கெங்கல்ல.
9. என். அரவிந்தன், கல்கிசை.
10. பி. இரத்தினசிங்கம், புத்தளம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



## சிந்தியா பதில்கள்

**சிந்தியா! ஜெயலலிதா அரசியலில் ஈடுபடாமல் இருந்திருந்தால் இப்போது எப்படி இருப்பார்?**
நிஸ்வானா ஹமீட்-ஏத்தாளை
*நிம்மதியாக!*

□□

**டியர் சிந்தியா! போலிக் காதலர்களின் மத்தியில் உண்மைக் காதலை அறிவதெப்படி?**
கு.ஸ்ரீதேவி-பெரடைஸ்
*சிவபூசையில் கரடி மாதிரி, காதலர்கள் மத்தியிலே போய் இந்த ஆராய்ச்சியெல்லாம் உமக்குத் தேவை தானா ஸ்ரீதேவி? (ஸ்ரீதேவி நடிக்க வந்த பிறகுதான் நீங்கள் பிறந்தீர்களா ஸ்ரீதேவி?)*

□□

**தற்போதைய யுத்தம் பற்றி இரண்டு வார்த்தைகள் கூறுங்கள் பார்க்கலாம்?**
எச்.எல்.பைசர்-பண்டாற பொத்தானை.
*மனிதர்களை மறந்துவிட்டது!*

□□

**கஷ்டப்பட்டு முன்னுக்கு வருவது, குறுக்கு வழியில் முன்னுக்கு வருவது, இதில் எதைப்பின்பற்றுவது நல்லது?**

### தமிழக நிலவரத்தில் சூடாக என்ன இருக்கு?

ஏ.ஏ.எம்.இக்ரம்-கல்ஹின்னை.
*எதையும் போராடிப் பெறுவதில் இரண்டு நன்மைகள் இருக்கின்றன இக்ரம். ஒன்று: பெற்றதன் அருமை புரியும். இரண்டாவது: எங்கே இழந்து போவோமோ என்ற பயம் இருக்காது.*

□□

**அர்த்தம் இல்லாத வார்த்தைகளைப் போட்டு சினிமாப் பாடல்களை எழுதுகிறார்களே, அதன் அர்த்தம் என்ன?**
எம்.பௌஸர்-ரம்புக்-எல
*அர்த்தமாக யோசிக்க அவசர சினிமா யுகத்தில் அவகாசம் போதவில்லை என்று அர்த்தம்.*

□□

**இலங்கையில் மன்னராட்சி நடைபெற்றால் எப்படியிருக்கும் சிந்தியா?**
ஏ.எச்.ராஸீன் மொகமட்-ஏத்தாளை.
*மக்களாட்சி பற்றிய கற்பனைகள் பெரிதாக இருக்கும்! இக்கரைக்கு அக்கரை பச்சையல்லவா......., அதனால்!*

□□

**எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆள்பவர்கள் யாராக இருப்பர்?**
முஹம்மது பாஹிம்-அக்கரைப்பற்று- 01
*எப்போதுமே ஆள்பவர்கள் மனிதர்களாகவே இருக்கட்டும்; அது போதும்!*

□□

**பெண்களுக்குத் தாங்கமுடியாத துயர் எது?**
எச்.எப்.பஸ்மியா-பாலையூற்று
*தான் ஒரு ஜடப்பொருள் போல நோக்கப்படுவது. உணர்ச்சிகள் யாவும் புறக்கணிக்கப்படுவது.*

□□

**முன்னேறிப் பாய்ச்சலில் பொது மக்கள் பாதிக்கப்பட்டது சரியோ சிந்தியா? இதற்குப் பொருத்தமான பழமொழி என்ன?**
எஸ்.சிவகுமார்-பெரிய நீலாவணை-2
*அவலை நினைத்து உரலை இடிக்கலாமா?*

□□

**சிந்தியா! உண்மை கசப்பது ஏன்?**
எப்.சல்மான் பாரிஸ்-வியாங்கொடை
*பொய் இனிப்பாக இருப்பதால்!*

□□

**ஒரு பத்திரிகையாளனின் முதல் தகுதி என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?**
செல்வராணி சுப்ரமணியம்-கொட்டகலை
*முதுகெலும்போடு கூடிய வித்தியாசமான சிந்தனை; தனக்கென்று ஒரு தனித்துவமான 'ஸ்டைல்'.*

□□

**தமிழக அரசியல் நிலவரம் பற்றி ஒரு சூடான உடனடிச் செய்தி?**
ஆ.கார்மேகம்-கொழும்பு -6
*முதல்வர் ஜெயலலிதாவின் 'உடன்பிறவாச் சகோதரி' சசிகலாவின் குடும்பம் வருமான வரி விவகாரங்களில் மாட்டிக் கொண்டது. அந்தச் செய்தியின் விறுவிறுப்பை மறைக்க சசிகலாவின் கணவர் நடராஜன் வீதியில் நின்ற பொலிஸ்காரரை இழுத்து உதைத்துவிட்டு கைதாகிவிட, அது தலைப்புச் செய்தியாகிவிட்டது. அவருக்கு பிணையை மறுத்து அரசு ஒரு நாடகம் போட்டது. உடனே நடராஜன் முன்கூட்டியே எழுதப்பட்ட வசனத்தை ஒப்புவித்தார். "அம்மா (ஜெயலலிதா) தந்த பரிசு இது." என்று பேட்டி! 'அடிக்கிற மாதிரி அடிப்பேன் நீ அழுகிற மாதிரி அழு' என்பது இதுதான். ஆனால் இந்த தந்திரம் பழையது என்பதால் பாச்சா பலிக்கவில்லை. தற்போது தமிழ் நாட்டில் பத்திரிகைகள் தூக்கிப் போடும் முக்கிய கேள்வி: சாதாரண வீடியோக்கடை வைத்திருந்த சசிகலா குடும்பம், கோடானு கோடி சொத்துக் குவித்தது எப்படி? அலாவுதீனும் அற்புத விளக்கும் என்றா பதில் சொல்ல முடியும்? அதுதான் தடுமாறுகிறார்கள்; நாடகங்கள் தயாரிக்கிறார்கள்!*


படிப்பகம்

www.padippakam.com

# மகாபாரதம்

அங்கம் 88

இவ்வாரம் (06.08.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

## காலத்தின் குரல்

குருச்சேத்திரப்போரை கணிப்பெடுத்துக் கூறுகின்ற
வரலாற்று வல்லுநர்கள் வடிவமைப்பதெவ்வாறோ..!
பாரதத்திருநாட்டோ பாரிலுள்ள நாயகரோ
யாரே பயனடைந்தார், யாரே பயனழிந்தார்..!
போரால் பெரும்பயனை அடைந்தவர்தான் யாருளரோ..!
பேரழிவேதானன்றி பெருமைகொளயாதுமில்லை!
ஏழ்கடல் சூழ் வையமதில் எழிதாகக் கிடைக்கின்ற
ஒரு பொருளே மானிடத்தின் உயிராகிவிட்டதனால்
காருள்ளதான் சூழ்ந்துவரக் காரணம்தான் வேறுளதோ..!
பாரதப் பெரும்போரால் பெரும்பழியே பரந்ததன்றோ..!
போர் முடியப் போகிறது; பார்த்தனுடன் கர்ணனின்று
போர் பொருதப் போகின்றான்; பார்ப்போம் நாமதனையின்று..!

**காட்சி தொடக்கம்**

குருச்சேத்திரம்-கவுரவர் பாசறை-மதுரா மன்னன் சல்லியனுடன் கர்ணன்.

**சல்லி:** அர்ச்சுனன் மாவீரன்; அவனுடன் மோதுவதற்கு தேவேந்திரனே அஞ்சுவான்; ஏனெனில் திவ்யாஸ்திரங்களெல்லாம் அவனிடம் உள்ளன. அர்ச்சுனன்மீதுள்ள அச்சத்தால் உமது வில்லை நழுவவிட்டுவிடாமல் கவனமாகப் பிடித்துக்கொள்ளும்!

**கர்ண:** மதுரா மன்னரே...நான் கவுரவப் படையின் தளபதியாக நியமனம்பெறும் வரை எனக்கு இத்தகைய உபதேசம் செய்யக் காத்துக்கொண்டிருந்தீர்களா? அர்ச்சுனனுக்கு கிருஷ்ணனே தேர்ச்சாரதியாக வருவதனால் அவருக்கு ஈடாக தாங்கள் எனக்குச் சாரதியாக வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்! தங்களை நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் தவறாகக் கருதியதில்லையே! உண்மையில் தங்களைவிட அர்ச்சுனனை நான் நன்கு அறிவேன். கங்கா புத்திரர் பீஷ்மரும் துரோணாச்சாரியாரும் யாரிடம் பயின்றார்களோ அந்த மாபெரும் வீரராம் பரசுராம முனிவரிடம் தான் நானும் பயின்றேன் என்பதை மறக்க வேண்டாம்!

**சல்லி:** தேரில் வரும் வீரருக்கு உரிய நலன்களை எடுத்துக்கூறுவது தேர்ப்பாகனின் கடமை. அர்ச்சுனன் போர்க்களம் புகுந்த அன்றே கிருஷ்ணரும் பல கருத்துக்களைக் கூறினார். உம்மை எச்சரிப்பது எனது கடமை என்பதனால்தான் நான் சொன்னேன்!

இருதரப்புப் படைகளும் மோதத் தொடங்குகின்றன. பீமன் துச்சாதனனைத் தேடிச் சென்று போரிட ஆயத்தமாகிறான்.

**—காட்சி பின்னோக்கு—**

கவுரவர்களின் சூதாட்ட மண்டபத்துக்கு துச்சாதனன் திரௌபதியை தலைமுடியில் பிடித்து இழுத்து வரும் காட்சியினை பீமன் எண்ணிப்பார்க்கிறான்.

**காட்சி பின்னோக்கு முடிவு.**

பீமனும் துச்சாதனனும் மோதுகின்றனர்.

**பீமன்:** கோழையே! ஏனடா எட்டத்தில் நின்று கணைகளை வீசுகிறாய்? துணிவிருந்தால் நேரடியாக மோதிப் பார்க்கலாம் வா! அப்போதுதான் ஒருவருடைய இரத்தத்தை மற்றவர் உருசி பார்க்க முடியும்....!

இருவரும் இரதங்களிலிருந்து குதித்து கதாயுதங்களைக் கொண்டு போரிடுகின்றனர். துச்சாதனனின் கதம் விழுந்ததும் பீமனும் தனது கதாயுதத்தை எறிந்து விட்டு இருவரும் மல்யுத்தம் புரிகின்றனர். துச்சாதனனுடைய கையைப் பற்றிய வண்ணம் வீமன்....

**பீமன்:** திரௌபதியின் சிகையைப் பற்றி சபைக்கு இழுத்து வந்த கை இது தானேயடா கொடியவனே....!

அவனுடைய கையைப் பெயர்க்கிறான் பீமன். துச்சாதனன்மீது அமர்ந்து அவனுடைய நெஞ்சைப் பிளக்கிறான்.

**பீமன்:** அடேய் துச்சாதனா....! உன்னுடைய இரத்தத்தை இப்போது குடிக்கப் போகிறேன்!

பயங்கரமாகக் கத்திய வண்ணம் துச்சாதனனுடைய மார்பிலிருந்த வண்ணம் பீறிட்டுப்பாயும் இரத்தத்தைக் குடிக்கிறான்.

**—காட்சி மாற்றம்—**

அஸ்தினாபுரம்- திருதராட்டிரரும் சஞ்சயனும்.

**திருத:** (அழுத வண்ணம்) சொல்லு சஞ்சயா...! ஏன் நிறுத்திவிட்டாய்? பீமன் என்ன செய்துவிட்டான்? அத்தனை கொடுமையாகவா அவன் நடந்து கொண்டான்? நான் இன்னும் மன்னனாகத்தான் இருக்கிறேன்....! கட்டளையிடுகிறேன்! என்ன நடக்கிறது என்பதைக் கூறு சஞ்சயா...!

**சஞ்ச:** மகாராஜா! இளவரசர் துச்சாதனர் இறந்து விட்டார்.

**திருத:** (கோபமாக) இல்லை... இருக்காது...பீமன் என் மகனுக்கு என்னதான் செய்து விட்டான்....?

**சஞ்ச:** பீமன் துச்சாதனனின் மார்பைப் பிளந்து அதிலிருந்து வரும் இரத்தத்தைக் குடித்தார்! அதே இரத்தத்தால் தனது நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டு- அபிமன்யுவைக் கொன்ற பின்னர் நமது இளவரசர் ஆரவாரித்து ஆடியது போன்று- பீமனும் ஆடுகிறார்....! அதோ தனது இரு கைகளிலும் இரத்தத்தினை அள்ளிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்....!

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரத்தில் திரௌபதியின் கூடாரம்- பீமன் மகிழ்ச்சியில் கத்திக் கொண்டு வரும் சப்தம் அவளுக்குக் கேட்கிறது. பீமனின் தோற்றம் கண்டு பாஞ்சாலி ஆச்சரியப்படுகிறாள். வெற்றி பெற்ற களிப்பில் எங்கும் இரத்தம் சொட்ட பீமன் கூடாரத்துக்கு வருகிறான். தனது கரங்களில் உள்ள குருதியினை பாஞ்சாலி முன் நீட்டுகிறான்!

**பீமன்:** பாஞ்சாலி! உன்னை அவமானப் படுத்திய அந்தத் துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்து செங்குருதியை உன் கூந்தலைச் சீவி முடிப்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறேன்...இதோ எடுத்துக்கொள்...!

பாஞ்சாலி இரத்தத்தை எடுத்துத் தன் கூந்தலில் தடவுகிறாள்.

**—காட்சி மாற்றம்—**

திருதராட்டிரர் அரண்மனை-சஞ்சயருடன் இருந்த மன்னர் கோபத்துடனும் துக்கத்துடனும் எழுகிறார்.



**அர்ச்சுனனும் யுதிஷ்டிரனும்**

**திருதா:** சஞ்சயா...! பீமனை நான் மன்னிக்கவே மாட்டேன்.. நிச்சயமாக அவனை நான் மன்னிக்கப்போவதில்லை! இது யுத்த தர்மத்துக்கெல்லாம் அப்பாற்பட்ட கொடுமை...! என் துரியோதனன் தனிமைப்படுத்தப்பட்டு விட்டானே...!

**சஞ்ச:** மகாராஜா! யாராவது ஒருவர் போர்முனையில் தனிமைப்படுத்தப்படுவது தவிர்க்க முடியாது!

**திருத:** ஆனால் சஞ்சயா..! இந்த சோகத்தை என் துரியோதனன் எவ்வாறு தாங்கப் போகிறான்....? சஞ்சயா..! பார்த்துச் சொல் அவனுடன் இப்போது யார் இருக்கிறார்கள்...?

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரத்தில் அன்றையப்போர் சற்று ஓய்ந்து காணப்படுகிறது. துச்சாதனனின் தலையை மடிமீது கிடத்தி துரியோதனன் விம்மி விம்மி அழுகிறான். கவுரவர்கள் சூழ்ந்து நிற்கின்றனர்.

**கர்ண:** இந்தக் கோரம் எவ்வாறு நிகழ்ந்தது துரியோதனா....?

**துரி:** கர்ணா...! என் நண்பா...! பார்த்தாயா...? என் அருமைத்தம்பியின் கையை பீமன் வாளால் வெட்டவில்லை....உடலிலிருந்து பெயர்த்தெடுத்திருக்கிறான்!

**அஸ்வத்:** இளவரசரே...! அந்தப் பயங்கரமான சம்பவத்தை நாங்கள் பார்த்துக்கொண்டு தானிருந்தோம்...! நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.. பாண்டவர்களுடன் சமாதானத்தை இப்போதாவது ஏற்படுத்திக் கொள்ளுவதுதான் நல்லது....!

**துரி:** (கோபமாக) என்ன சமாதானமா....? அந்தக் கோழைகளுடனா சமாதானம் செய்யச் சொல்லுகிறாய்....? அஸ்வத்தாமா....! பிதாமகரை அவர்கள் சூழ்ச்சி செய்தே கொன்றார்கள்! அதே போல் துரோணாச்சாரியாரையும் அதே சூழ்ச்சிக்குப் பலியாக்கினார்கள்! உமது தந்தையைக் கொடுமையாகக் கொன்றதனை மறந்துவிட்டாயா.....?

**அஸ்வத்:** இல்லை! என் தந்தையைக் கொன்றதை நான் மறக்க மாட்டேன்..! அவர்களை மன்னிக்கவும் மாட்டேன்! ஆனால், அவை என்னுடைய சொந்தப் பிரச்சனை! நமது தேசத்தின் நன்மையைக் கருத்தில் கொண்டுதான் நான் சமாதானத்தைப் பற்றிப் பேச முற்பட்டேன்..!

**துரி:** தேசமா...? பளபளக்கும் கிரீடமும் அரியாசனனுமா தேசம்...? இல்லை நானேதான் நாடு....! எனக்கு என் துச்சாதனனேதான் நாடு! என் தேசம் இதோ கிடக்கிறது....இதன் இரத்தத்தை அந்தக் கொடியவன் பீமன் உறிஞ்சிக் குடித்துவிட்டான்....! ஆகவே, அவர்களுடன் சமாதானம் என்ற பேச்சை இனிமேல் என் காதுகளில் போட்டுவிடாதே..! (கர்ணனைப் பார்த்து) தளபதியாரே! போரைத் தொடருங்கள்..! பாண்டவர்கள் கொலை செய்யப்பட வேண்டும்!

**கர்ண:** ஆகட்டும் நண்பா...மதுரா மன்னரே...! இரதத்தினை எடுங்கள்!

**சல்லி:** அங்கத்துக்கதிபரே...! மீண்டும் வலியுறுத்துகிறேன்..! பீமனுடனும் அர்ச்சுனனுடனும் போரிடுவது சிறு பிள்ளை விளையாட்டல்ல...! கவுரவப் படைவீரர்கள்- தங்கள் படைத் தளபதி பயத்தினால் மருளுகிறார் என்பதை அறிந்தார்களானால்- அவர்களும் போரிடும் சக்தியை இழந்துவிடுவார்கள். அஸ்தினாபுரத்தின் கடைசி நம்பிக்கைக்குரிய நீர் பயத்தினை வெளிக் காட்டலாகாது!

**கர்ணா:** மதுரா மன்னரே..! போராடும்முறை எத்தகையதென்பதை நான் நன்கு அறிவேன்! தாங்கள் தேரை ஒழுங்காகச் செலுத்துவதில் கவனத்தைச் செலுத்துங்கள்! போர்முனையில் பொருதும் வீரர்களுள், ஒருவர்தான் வெற்றிபெற முடியும்! மற்றவர் தோல்வியைத் தழுவிக் கொள்ள வேண்டும்! இதுதான் நியதி! தயவுசெய்து இரதத்தை அர்ச்சுனன் இருக்கும் இடம்பார்த்துச் செலுத்துங்கள்!

கர்ணனும் அர்ச்சுனனும் நேருக்கு நேர் பொருதுகின்றனர். கர்ணன் திவ்யாஸ்திரம் ஒன்றினை அர்ச்சுனன் மீது செலுத்துகிறான். அது சீறிப்பாய்ந்து வருவதைக் கண்ட கிருஷ்ணர் இரதத்தின் ஒரு பகுதியை நிலத்தில் அமிழ்த்திவிடுகிறார். அப்போது அந்த அஸ்திரம் அர்ச்சுனனின் முடியைத் தாக்கி விட்டுச் சென்றது.

அடுத்த தடவை மற்றுமொரு கணையினை கர்ணன் அர்ச்சுனன் மீது தொடுப்பதற்கு ஆயத்தமாகும்போது சூரியன் அஸ்தமித்து விடுகிறான்.

**கர்ண:** சூரியநாராயணன் இன்று குந்தி மைந்தனைக் காத்து விட்டான். மதுராமன்னரே...! வாருங்கள் நமது பாசறைக்குச் செல்லலாம்!

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரம்- குந்தியின் கூடாரம். காந்தாரி அங்கு வருகிறார்.

**காந்தா:** (வந்து கொண்டே) குந்தி...! குந்தி...!

**குந்தி:** வாருங்கள் அக்கா... தாங்கள் தகவல் சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே...தாங்கள் ஏன் வந்து அலைய வேண்டும்?

**காந்தா:** முக்கியமான செய்தி ஒன்று சொல்ல வேண்டியிருந்தது....அதனை நீ வரும் வரை காத்துக் கொண்டிருந்து சொல்ல முடியாத நிலையில் நானாக ஓடி வந்தேன்!

**குந்தி:** இன்று யாருடைய மரணம் பற்றிக்கூறி துக்கத்தில் பங்கேற்க வந்தீர்களோ தெரியவில்லையே... அக்கா!

**காந்தா:** இன்று எனதருமைமகன் துச்சாதனனுடைய மரணதினமாகும். எனது கண்கள் இப்போதெல்லாம் கண்ணீர் வடிப்பதை நிறுத்திக்கொண்டன. "இன்னும் எத்தகை காலம் உனக்காக நாங்கள் கண்ணீர் வடிக்க முடியும்" என்று அவை கேட்கின்றன. இன்று என் நினைவுகள் கடந்த காலத்தை நோக்கிச் செல்கின்றன. கங்கை மைந்தர் அவர்கள் என்னைப் பெண் கேட்க வந்திருந்தபோது எனது தந்தையும் அண்ணன் சகுனியும் மறுத்துரைத்தனர். ஆனால் நான் என் கண்களைக் கட்டிக் கொண்டு அஸ்தினாபுரம் வர ஆயத்தமானேன். அப்போது பிதாமகர், "நூறு குழந்தைகளைப் பெறுவாய்" என்று எனக்கு ஆசி கூறினார். ஆனால் நூறு பிள்ளைகளைப் பெற்றவள் இன்று ஓரேயொருபிள்ளையுடன் விடப்பட்டிருக்கிறேன்! குந்தி...! பிதாமகர் இன்று எத்தனை அம்புகளால் துளைக்கப்பட்டிருக்கிறோரோ எனக்குத் தெரியாது... ஆனால், என்னுடைய உள்ளத்தை எத்தனை அம்புகள் ஊடுருவிச் சென்றுள்ளன என்பதை நான் அறிவேன்! இன்று எனது புதல்வர்கள் பற்றிய கவலையைச் சொல்வதற்காக நான் இங்கு வரவில்லை..! பல நாட்களுக்குப் பிறகு கிடைத்த மகிழ்ச்சியான செய்தியை அறிந்ததும் என்னால் என் கூடாரத்துள் இருக்கமுடியவில்லை. அதனை உன்னுடன் பகிர்ந்து கொள்ளவே ஓடோடி வந்தேன்....!

**குந்தி:** இந்தப் போர் முனையில் நல்லன நடைபெறவும் வழியுண்டா அக்கா...?

**காந்தா:** ஆமாம்! நல்ல சம்பவங்கள் எப்படியாவது நடப்பதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்படத்தான் செய்கின்றன. குந்தி....! இன்று சூரியதேவன் மிகக் கண்ணியமாக நடந்து கொண்டான்!

**குந்தி:** சூரியதேவா...? எனது அர்ச்சுனன்...?

**காந்தா:** ஆமாம்! அர்ச்சுனனைப் பற்றித்தான் சொல்ல வந்தேன்...!

அர்ச்சுனனுக்குஉயிரபாயம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதிய குந்தி விம்மி விம்மி அழ ஆரம்பித்து விடுகிறார்.

**காந்தா:** நீ என்ன நினைக்கிறாய்...? தக்க தருணத்தில் சூரியன் மறைந்திராவிட்டால் அர்ச்சுனன் இதுவரை உயிர் துறந்திருப்பான்...!

குந்திக்கு அப்போதுதான் உண்மை விளங்குகிறது.

**குந்தி:** அக்கா...அக்கா...!

**காந்தா:** குந்தி! இன்றிலிருந்து நான் எப்போதும் சூரியதேவனுக்குக் கடமைப்பட்டவளாகவே என்றுமிருப்பேன்..!

**குந்தி:** இருந்தாலும் நாளை கதிரவன் உதிக்கும்போது இந்தக் கொடிய யுத்தம் தொடரத்தானே போகிறது அக்கா...!

**காந்தா:** தொடரட்டுமே...! நாளையப் பொழுது மறைவதை அந்த ராதேயன் காணப்போவதில்லை என்பதை நீ அறிவாய்....!

**குந்தி:** அக்கா....தயவுசெய்து கர்ணனைச் சபித்துவிடாதீர்கள்! அவன் ஏற்கனவே இரு முக்கியமான சாபத்துக்குட்பட்டுத் தவிக்கிறவனாயிற்றே!

**காந்தா:** குந்தி...! நான் அவனைச் சபிக்கவில்லை! அர்ச்சுனனை வாழ்த்துகிறேன்....!

**குந்தி:** இல்லை அவனைத் திட்டாதீர்கள்....!

**—காட்சி மாற்றம்—**

பாண்டவர் பாசறை- அர்ச்சுனன் சிந்தனையிலாழ்ந்திருக்கும் போது கிருஷ்ணர் அங்கு வருகிறார்.

**கிருஷ்:** பார்த்தா....! ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாய் போல்தோன்றுகிறதே...!

**அர்ச்:** கர்ணன் காட்டிய தயவினால்தான் நான் இன்று உயிருடன் இருப்பதை என்னால் சகிக்கமுடியவில்லை கண்ணா..! இன்றையப் போரில் கர்ணன் என்னைக் கொல்லக்கூடிய வாய்ப்பிருந்தும் கொல்லாமல் விட்டு விட்டான். என்னைப் போரில் தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் வாழ்ந்தவன் அவன்! இன்று என்னைக் கொல்லக்கூடிய சந்தர்ப்பம் அவனுக்குச் சாதகமாக இருந்த வேளையில் என்மீது குறிவைக்கப்பட்டிருந்த கணையைப் பின்வாங்கிக் கொண்டமை, ஒருவகைச் சலுகையல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்...?

**கிருஷ்:** இவ்வாறு கூறுவது ஒரு வீரனுக்கழகல்ல பார்த்தா..! இன்றைய சூழ்ச்சிகளினால் ஏற்பட்ட குழப்பத்தில், கர்ணனின் கணைகள் உன்னை அணுக முடியாத நிலையில் இருந்தன என்பதை நீ கவனிக்கத் தவறிவிட்டாய்! சூரிய அஸ்தமனமானதும் தனது கணைகளைத் தொடுப்பதை நிறுத்திவிட்டதன் மூலம் கர்ணன் உனக்கு ஒரு செய்தியை அல்லவோ அனுப்பிவைத்திருக்கிறான்!

**அர்ச்:** செய்தியா...? எத்தகைய செய்தி கேசவா...!

**கிருஷ்:** இன்றையப் போரில் நடைபெற்ற சம்பவங்களுக்குத் தான் பொறுப்பல்ல என்பதை உணர்த்தியிருக்கிறான். ஆனால், இன்றிலிருந்து தான் படைத் தளபதி பதவியைப் பெற்றிருப் பதனால் தனது எதிரியும்-கங்காபுத்திரர் பீஷ்மரால் உருவாக்கப்பட்ட கட்டுப்பாடுகளைப் புறக்கணித்துவிடலாகாது என்ற செய்திதான் அது!

**அர்ச்:** நாங்கள் கோழைகள் என்று அவன் கருதத்தலைப்பட்டு விட்டானோ...?

**கிருஷ்:** பார்த்தா...! உன்னை எந்தக் கபோதிதானும் கோழை என்று சொல்ல முற்படுவானா..? அர்ச்சுனா..! குருகுலத்தில் பயிற்சிபெறும் காலத்தில் உனது குருநாதர் உன் கண்களில் என்ன தெரிகிறது என்று கேட்டபோது குறியாகிய குருவியின் கண்ணைத்தைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை என்று கூறினாய் அல்லவா....? அதே அர்ச்சுனனாகத் தான் நீ இன்று இருக்கிறாயா....? பார்த்தா! வீணான சம்பவங்களில் உன் மனதைப் போட்டுக்குழப்பாமல் திடமாயிரு! கவனத்தைத் திசைதிருப்பாமல் உனது குறிக்கோளில் கவனம் வை! நாளை அங்கராஜனை எதிர்கொள்ளும் உன்னுடைய சிந்தனைகளைச் சிதறடித்துவிடாமல் குறியில் கவனம் செலுத்து!

**—காட்சி மாற்றம்—**

கவுரவர் பாசறை-கர்ணனின் காயங்களுக்கு மருந்து தடவப்படுகிறது.

**துரி:** நண்பனே....! வெற்றி நம் வாயற் கதவினைத் தட்டிக் கொண்டிருந்த போது அதனை விரல் நுனியிலேயே தவறவிட்டாயே....?

**கர்ண:** கவலையை விட்டுவிடு நண்பனே...! இன்று எனக்கு வெற்றி கிடைத்திருக்கும் வாய்ப்பிருந்திருக்குமானால், நாளை ஏன் அது என் கைக்கு எட்டாமல் போகிறது...?

**சகுனி:** இருப்பினும் அங்கத்துக்கதிபதியே...! இன்று ஏன் பின்வாங்கினாய் என்ற காரணத்தைக் கூறுவாயா....?

**கர்ணா:** மாமா...உண்மையில் என்னுடைய இக்கட்டான நிலையினை நீங்கள் எவருமே உணரமாட்டீர்கள்...!

**சகுனி:** அங்கராஜனே....! படைத் தளபதியான உம்மிடம் -தனது சகோதரர்கள் அனைவரையும் இழந்துவிட்ட உமது நண்பன் சரியான விளக்கத்தினை அறிய விரும்புகிறான்! உம்முடைய விசுவாசத்தில் எங்களுக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது! வெற்றி நமதணியைத் தழுவிக்கொண்டிருந்த அந்தப் பொழுதினில் பாணத்தைத் தொடுத்து அர்ச்சுனனைக் கொல்லாமல் விட்டுவிட்டதனால் உன் நண்பன் மிகவும் வேதனை அடைகிறான்....!

**கர்ண:** எல்லாம் சூரியதேவனுடைய வேலைதான்! அவன் மறைந்து விட்டமையினால்தான் நான் கணையினைத் தொடுக்கமுடியாதவனாகிவிட்டேன்!

**சகுனி:** ஏன்....? இதற்கு முன்னர் எத்தனை தடவை சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பும் போரிட்டிருக்கிறோம்...!

**கர்ண:** அப்போது நான் படைத்தளபதிப் பதவியில் இருக்கவில்லையே...! காந்தார நாட்டதிபரே! கங்காபுத்திரர் போன்ற பெரியவர்களால் வகுக்கப்பட்ட போருக்கான சட்டதிட்டங்களை என்னால் புறக்கணிக்க முடிய வில்லையே!

**துரி:** எத்தனையோ தடவைகள் கட்டுப்பாடுகளை நாமும் மீறியிருக்கிறோம்....அவர்களும் மீறியுள்ளனர். துச்சாதனனுக்காகவாவது இதனைச் செய்திருக்கலாமே...!

**கர்ண:** துச்சாதனனும் எனக்கு சகோதரன் போன்றவன்தான்!

**சகுனி:** பீமனும் அவனுடைய சகோதரன் தான்! அவன் என்ன செய்தான்...? துச்சாதனனின் கையைப்பிய்த்தெடுத்து அதனை துரியோதனன்பால் விட்டெறிந்தான். அது மட்டுமா? துச்சாதனனுடைய இரத்தத்தையும் குடித்துவிட்டு அவனுடைய சடலத்தைச் சுற்றி வந்து காட்டுமிராண்டியைப் போல் கூத்தாடினானே....!

**கர்ண:** மாமா! நான் உணர்கிறேன்! பீமனைப் போன்ற வீரனுக்கும் இந்நடவடிக்கை அழகல்ல...(துரியோதனனைப் பார்த்து) நண்பா...! என்னுடைய நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும்! நீர் பாரத வம்சத்தைச் சேர்ந்தவர். மாமன்னர் திருதராட்டிரரின் புதல்வர்! பாண்டவர்களும் மன்னரின் மைந்தர்களே! சட்டதிட்டங்களை நீங்கள் எவராவது மீறினால், உங்களுடைய பாரம்பரியத்தைக் காட்டி ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக் கொள்ள முடியும்! நான் யார்...? நான் அந்தச் சட்டங்களை மீறினால் எனக்கு மன்னிப்புக் கிடைக்குமா...? உங்கள் பிதாவின் தேர்ப்பாகனால் பொறுக்கி எடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட-தந்தை தாயை அறியாத -அநாதை நான்! நண்பனே...! இந்தப் போர் முனையில் என்னுடைய சொந்தப் பலத்திலும் மன உறுதியிலும் நம்பிக்கை வைத்தவனாகத்தான் நான் இருக்கிறேன்...! ஆகவேதான் நான் போருக்கான சட்டதிட்டங்கள் எவற்றையும் மீற முடியாத நிலையிலுள்ளேன்....!

**—பின்னணிப்பாடல்:**

தர்மத்தில் தலைசிறந்த மாவீரன் கர்ணன்
கர்மத்தின் வலிவதனால் கவுரவரின் அணிசேர்ந்தான்!
குந்தியவள் பெற்றெடுத்தும் குலக்கொடியாய் வளராமல்
நிந்தைக்குரியவனாய் நிலைத்ததுவும் விதியன்றோ...!

(தொடர்ந்து வரும்.)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்ற மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)

அருள் ஜுவலர்ஸ்

436331
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு



அம்மன் ஜுவல்
AMMAN JUWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# மறு பதிப்பு

பசும் சோலை, பளிங்கு நீரோடை. அதன் மத்தியில் அழகு மாளிகை. நீரில் தெரிகிறது கட்டிடத்தின் கட்டான மேனி எழில். இந்தக் கண்ணுக்கு விருந்தான காட்சி ஜெர்மனியில் இருக்கிறது. கட்டிடக் கலைக்கு, கட்டிடம் அமையும் சூழல் அழகு! ஜெர்மன் கட்டிடக் கலைஞர்கள் கலா ரசிகர்கள். அதுதான் கச்சிதமாகக் காரியத்தை முடித்திருக்கிறார்கள். மண்ணில் எழுப்பிய மாளிகை நீரில் மறுபதிப்பு செய்யப்பட்டது போல இருக்கிறதல்லவா.

# எனக்கு நீ உனக்கு நான்

தருவது வியோபெட



'எம்மைப் பார் எம் அழகைப்பார்' என்று வானத்தைச் சீண்டும் ஒரேவிதமான இரு கட்டிடங்கள். (மனிதரில் மட்டும்தான் இரட்டையர் இருக்க முடியுமா என்ன!)

ஒன்றாய் எழுந்து, ஒன்றாய் உயர்ந்து இன்று கண்ணுக்கு விருந்து இந்த இரட்டைக் கட்டிடங்கள். அமெரிக்காவில் நியூ யோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையத்தில் இக் கட்டிடம் இருக்கிறது.

வர்த்தகம் விரிவடைய அவசர அவசரமாக கட்டிடங்கள் முளைக்கின்றன. அவசரத்திலும் அசத்தலான கட்டிடப் படைப்புக்கள்! திட்டமிட்டுச் செயற்பட்டு, வர்த்தக மையத்தை கட்டிடக் கலையால் அழகு படுத்தி விட்டார்கள்!

# நண்பர்கள்



வினோத் காம்ப்ளி, டெண்டுல்கர், சஞ்சய் மஞ்ச்ரேக்கர் மூவரும் இந்திய கிரிக்கெட் அணியில் புதிய இரத்தங்கள். மூவரும் நண்பர்கள். இவர்களில் டெண்டுல்கர் மட்டுமே தனது இடத்தை நிரந்தரமாகத் தக்கவைத்துக் கொண்டுவருகிறார்.

வினோத் காம்ப்ளி பெரிதாக எதிர்பார்க்கப்பட்டு தற்போது ஏமாற்றம் தரும் நட்சத்திரமாகிவிட்டார்.


டெஸ்ட் போட்டிகளில் காம்ப்ளியின் ரன் குவிப்பு விகிதம் சராசரி 57. ஒரு நாள் போட்டிகளில் சராசரி 40 ரன்கள். ஆனால் கடந்த ஆண்டிலிருந்து அவரது வேகம் வீழ்ச்சியடைந்துவிட்டது. அதுவும் 'சார்ஜா' போட்டியில் மாபெரும் வீழ்ச்சி.

இது பற்றி ஒரு பேட்டியில் காம்ப்ளி கூறியிருப்பது இதுதான்; "எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. நான் நல்ல திறமையுடன்தான் இருக்கிறேன். கஷ்டகாலம் வருவதும் போவதும் சகஜம்தானே.

நான் கடவுளை முழுமையாக நம்புகிறேன். என் உயிர்த்தோழன் டெண்டுல்கர் அடிக்கடி எனக்கு ஆலோசனைகள் சொல்லி உதவுகிறார். நான் கொஞ்சம் 'டல்' ஆனாலே அவன் மனம் வருந்துகிறான். அவன் யோசனையைக் கேட்க நான் தவறுவதில்லை. மீண்டும், இந்திய அணியில் நல்ல இடத்தைப் பிடிப்பேன்" என்று சொல்லியிருக்கிறார் வினோத் காம்ப்ளி. பார்க்கலாம்.

# உள்ளூர் தயாரிப்பு!


தினமுரசு வாரமலர்




ஷாஜகான் தன் காதலிக்காக கட்டிய தாஜ்மஹாலை நம் நாட்டு கலைஞர் ஒருவர் தன் வசதிக்கு ஏற்ப இப்படி உருவாக்கியுள்ளார். 'ரெஜிபோம்' மூலமாக தாஜ்மஹால் போன்று செய்யப்பட்ட கலைவடிவம் இது. இதனை உருவாக்கியவரின் பெயர் செல்வன்.ச.றதீஸ். வயது; 19. இதை ஏன் செய்தீர்கள் றதீஸ்? என்று கேட்டோம். அவர் நெத்தியடியாகச் சொன்ன பதில்- "என் காதலிக்கு நான் கொடுக்கக் கூடிய உயர்ந்த பரிசு தற்போதைக்கு இதுதான்."

# உடலுக்குப் பகை

படத்தில் இருப்பது நவீன ஓவியங்கள் போல உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா? தப்பு! இரண்டிலும் இருப்பது பயங்கரமான புற்று நோய் உயிர்மங்கள். அமெரிக்க டாக்டர் ஒருவர் சாயக் கலவைகளை செலுத்திப் புதிய கண்டுபிடிப்பொன்றை நடத்தியிருக்கிறார். சாயக் கலவைகளை செலுத்தும் போது புற்றுநோய் உயிர்மங்கள் நிறம்மாறித் தனியாகத் தெரியும். எதிரியை அடையாளம் கண்டுவிட்டால் அழிப்பது சுலபமல்லவா. அது தான் புதிய கண்டுபிடிப்பின் அடிப்படை. இவ்வாறு புற்றுநோய்க் கூறு இனம் கண்டு அழிக்கப்படும் முறை 'இம்மியுனோ ஃபுளோறெசன்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. இந்த சமீபத்திய கண்டுபிடிப்பை உருவாக்கிய அமெரிக்க டாக்டரின் பெயர் 'நான்ஸிகேதர்ஷா'! புற்றுநோய் எதிர்ப்பில் இக் கண்டுபிடிப்பு மற்றொரு மைல்கல்.







படிப்பகம்